தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:239 | 15-03-2026 | ஞாயிற்றுக்கிழமை | Free E- Paper

● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


MLM SOFTWARE Company
• Binary MLM Plan
• Single Leg MLM Plan
• Autopool MLM Plan
• Unilevel MLM Plan
• Matrix MLM Plan
• Stairstep MLM Plan
• Party MLM Plan
• Board MLM Plan
• Generation MLM Plan
PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

## இன்றைய பஞ்சாங்கம்

15.03.2026 பங்குனி 1
ஞாயிற்றுக்கிழமை

சூரிய உதயம் 6.22

திதி:
இன்று காலை 8.23 வரை ஏகாதசி பின்பு துவாதசி.

நட்சத்திரம்:
இன்று அதிகாலை 3.59 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.

யோகம் :
இன்று காலை 9.36 வரை பரிகம் பின்பு சிவம்.

கரணம்
இன்று காலை 8.23 வரை பாலவம் பின்பு இரவு 8.39 வரை கௌலவம் பின்பு தைதுலம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.21 வரை சித்த யோகம் பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று அதிகாலை 3.59 வரை மிருகசீரிஷம் பின்பு திருவாதிரை.

நல்ல நேரம்
காலை 6.00 – 7.00.
மாலை 3.30 – 4.30.

இராகு காலம்
மாலை 4.30 – 6.00.

எமகண்டம்
பிற்பகல் 12.00 – 1.30.

குளிகை
பிற்பகல் 3.00 – 4.30.

இன்று சுபமுகூர்த்த நாள்

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# “போர்களால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க அரசு பாடுபடுகிறது”

**சென்னை, மார்ச் 15:**

சில்சார் (அசாம்): “உலகளாவிய மோதல்களால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க மத்திய அரசு பாடுபடுகிறது. ஆனால், காங்கிரஸ் கட்சி மக்கள் மத்தியில் பீதியை கிளப்புகிறது” என்று பிரதமர் மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

அசாமின் சில்சார் நகரில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் ரூ.23,550 கோடிக்கும் அதிகமான மதிப்புள்ள திட்டங்களை தொடங்கிவைத்து உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, “உலகம் முழுவதும் போர்களை எதிர்கொண்டு வரும் நிலையில், நாட்டு மக்கள் மீது அவற்றின் தாக்கத்தைக் குறைப்பதற்காக நாங்கள் தொடர்ந்து முயன்று வருகிறோம். காங்கிரஸ் கட்சி ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சியாக செயல்பட்டிருக்க வேண்டும். ஆனால் அக்கட்சி அதில் இருந்து தவறிவிட்டது. மாறாக, மக்களிடையே பீதியை உருவாக்கவே அது முயல்கிறது.

அசாம் குறித்தோ அல்லது தேசம் குறித்தோ அவர்களுக்கு எந்த ஒரு தொலைநோக்குப் பார்வையும் கிடையாது. மாறாக, மோடியை அவதூறாகப் பேச வேண்டும், வதந்திகளையும் பொய்களையும் பரப்ப வேண்டும், மக்களை திசை திருப்பும் வகையில் போலியான ரீல்ஸ்களை உருவாக்க வேண்டும். இதுதான் அவர்களுக்குத் தெரியும்.

முழு உலகமும் செயற்கை நுண்ணறிவு துறை மீது மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. டெல்லியில் இது தொடர்பாக நடைபெற்ற உச்சி மாநாடு வெற்றிகரமாக இருந்தது. இந்த உச்சி மாநாட்டில் உலகத் தலைவர்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், அவற்றின் தலைவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். ஆனால், காங்கிரஸ் கட்சியோ ஆடையை கிழத்துக்கொண்டு ஒரு நாடகத்தை அரங்கேற்றியது.

இதன்மூலம் நாட்டையே அக்கட்சி அவமானப்படுத்த முயன்றது. ஒட்டுமொத்த நாட்டு மக்களும் இந்த ஆபாச போராட்டத்தைக் கண்டித்தார்கள். ஆனால், காங்கிரஸின் ராஜ குடும்பம் மட்டும் தங்கள் செயலை நினைத்து தங்களுக்குத் தாங்களே முதுகில் தட்டிக்கொடுத்துப் பாராட்டிக்கொள்கின்றனர். காங்கிரஸ் கட்சியிடம் தங்கள் சொந்த ஆடைகளைக் கிழித்துக்கொள்வதைத் தவிர வேறு எதுவும் மிச்சமில்லை.

காங்கிரஸ் கட்சி தொடர்ந்து ஒவ்வொரு தேர்தல்களிலும் தோல்வி அடைந்து வருகிறது. அவர்களின் தோல்வி எண்ணிக்கை விரைவில் 100-ஐ தொடும். தொடர் தோல்விகளால் ஏற்பட்ட விரக்தி காரணமாக அக்கட்சி தேசத்துக்கு எதிராக ஒரு போர்க்களத்தையே தொடங்கியுள்ளது. அக்கட்சியின் தலைவர்கள் நாட்டின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிப்பதிலேயே மும்முரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

வடகிழக்கு மாநிலங்களை காங்கிரஸ் கட்சி எவ்வாறு தனித்து விட்டுவிட்டதோ அதேபோன்று, பராக் பள்ளத்தாக்கை பலவீனப்படுத்துவதிலும் அது முக்கிய பங்காற்றியது. இந்தியா சுந்திரம் அடைந்தபோது பராக் பள்ளத்தாக்குக்கு இருந்த கடல்வழித் தொடர்பை துண்டிக்கும் வகையில் எல்லை வரையறுக்கப்படுவதை காங்கிரஸ் கட்சி அனுமதித்தது. ஒரு காலத்தில் தொழில் மையமாகத் திகழ்ந்த பராக் பள்ளத்தாக்கு தனது அடிப்படை வலிமையை இழந்துவிட்டது. இன்று, அதை மாற்றியமைக்கும் பணியில் பாஜக அரசு ஈடுபட்டுள்ளது” என தெரிவித்தார்.



மத்திய கிழக்கில் தீவிரமடைந்துள்ள ஈரான் - அமெரிக்கா, இஸ்ரேல் மோதல் காரணமாக இந்தியாவில் சமையல் எரிவாயு சிலிண்டர் (எல்பிஜி) விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஹார்முஸ் ஜலசந்தி கிட்டத்தட்ட மூடப்பட்டுள்ளதால், கத்தார் மற்றும் சவுதி அரேபியா போன்ற நாடுகளில் இருந்து எல்பிஜி வருவது தடைபட்டுள்ளது. இதனால், கடந்த சில நாட்களாக வணிக பயன்பாட்டுக்கான சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக அச்சமடைந்த மக்கள், வீட்டு உபயோக சிலிண்டருக்கான புக்கிங்கை அதிக அளவில் செய்யத் தொடங்கினர்.

போன் மூலம் அதிக அளவில் புக்கிங் செய்யப்படுவதால் அந்த சிஸ்டம் செயலிழந்தது. இதையடுத்து எல்பிஜி ஏஜென்சி முன்பு அதிக அளவில் பொது மக்கள் குவியத் தொடங்கினர்.

இந்நிலையில், எல்பிஜி சிலிண்டர் உற்பத்தி 30 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், மக்கள் பீதி அடைய வேண்டாம் என்றும் மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பின்புலத்தில், உலகளாவிய மோதல்களால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க மத்திய அரசு பாடுபடுகிறது என்று பிரதமர் மோடி கூறியிருப்பது கவனிக்கத்தக்கது.

# உணவகம், டீக்கடைகளின் கூடுதல் மின் நுகர்வில் யூனிட்டுக்கு ரூ.2 மானியம்

## தமிழக அரசு அறிவிப்பு



**சென்னை, மார்ச் 15:**

‘உணவகங்கள், டீக்கடைகள், கிளவுட் கிச்சன் உள்ளிட்ட உணவு உற்பத்தி தொழிற்கூடங்கள் எரிவாயுவுக்கு (LPG) பதிலாக மின் அடுப்புகளை பயன்படுத்தும்போது ஏற்படும் கூடுதல் மின்சார நுகர்வுக்கு, யூனிட் ஒன்றுக்கு ரூ.2 மானியம் வழங்கப்படும். ஒன்றிய அரசு அறிவித்துள்ள வணிக எரிவாயு பயன்பாட்டுக் கட்டுப்பாடுகள் அமலில் இருக்கும் காலம் வரை இந்த மானியம் வழங்கப்படும்’ என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: ‘வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள போர்ச்சூழல் காரணமாக தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு (LPG) தட்டுப்பாட்டு இடர்பாடுகளை நீக்கி தொழில் துறை, உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு துறையினரின் தொழில் சீராக நடைபெற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முதல்வர் ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

கடந்த மாதம் பிப்ரவரி 28 அன்று அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப்படைகள் ஈரான் மீது போர் தொடுத்தன. இதனைத் தொடர்ந்து ஈரான் அரசால் ஹொர்முஸ் (Hormuz) ஜலசந்தியின் வழியாக செல்லும் கப்பல்கள் தடை செய்யப்பட்டது.

இதன் காரணமாக இந்தியாவிற்கு வளைகுடா பகுதியிலிருந்து வரும் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு தடைப்பட்டது. தமிழ்நாட்டில் எரிவாயு (LPG) தட்டுப்பாடு தொடர்பாக மார்ச் 10 ஆம் தேதி முதல்வர் தொடர்புடைய துறைகளுக்கு அறிவுரை வழங்கினார். இப்பிரச்சினை தொடர்பாக, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் மார்ச் 11-ஆம் தேதி தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு சங்கங்கள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் சங்க பிரதிநிதிகளுடன் கூட்டம் நடத்தப்பட்டது.

மேலும், மாநில அளவில் வணிக நிறுவனங்களுக்கு முறையாக எல்பிஜி சிலிண்டர் அளவீட்டினை ஒதுக்கீடு செய்து கண்காணிக்க தலைமைச் செயலாளர் அவர்கள் கண்காணிப்பில் அரசு உயர் அலுவலர்கள் கொண்ட குழு செயல்படவும், இதேபோன்று மாவட்ட அளவில் எண்ணெய் விநியோக நிறுவனங்களின் பொறுப்பு அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு கண்காணிக்கவும் முதல்வர் ஆணையிட்டுள்ளார்.

இத்துடன், இந்த மாதம் பொது விநியோக திட்டத்திற்கு கூடுதலாக 3228 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்க ஆணையிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழைத் தன் கவித்திறத்தால் ஆளும் கவிப்பேரரசு வைரமுத்துக்கு ஞானபீட விருது!



**சென்னை, மார்ச் 15:**

தமிழக முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;-

தமிழைத் தன் கவித்திறத்தால் ஆளும் கவிப்பேரரசு வைரமுத்துக்கு ஞானபீட விருது!

காலையில்தான் கவிப்பேரரசைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். சற்றுநேரத்தில் இந்த இனிய செய்தி வந்தடைந்து, அந்தச் சந்திப்பின் இனிமையை இன்னும் கூட்டியிருக்கிறது!

தமிழில் இதுவரையில் அகிலனும் ஜெயகாந்தனும் மட்டுமே பெற்றிருந்த இவ்விருது, மரபுக் கவிதைகளிலும் நவீனத்திலும் விளையாடி, தமிழ் இலக்கிய உலகில் புதுமைகள் படைத்து ஆளும் நம் கவிப்பேரரசின் கைசேர்ந்து அவரையும் நம்மையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியிருக்கிறது.

தலைவர் கலைஞர் இருந்திருந்தால் கவிப்பேரரசை உச்சிமுகர்ந்து பாராட்டியிருப்பார். அவரிடத்தில் நான் நின்று கவிப்பேரரசு வைரமுத்துவை வாழ்த்துகிறேன்!

கவிப்பேரரசைத் தமிழ்நாடே வாழ்த்துகிறது!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேளச்சேரி - பரங்கிமலை ரயில் சேவை தொடங்கியது: தென் சென்னை மக்கள் மகிழ்ச்சி

**சென்னை, மார்ச் 15:**

வேளச்சேரி - பரங்கிமலை தடத்தில் மின்சார ரயில் சேவை இன்று தொடங்கியது. இதனால் பல முக்கிய இடங்களுக்கு எளிதில் செல்ல முடியும் என தென் சென்னை மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சென்னை கடற்கரை - வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தில், தினசரி 80-க்கும் மேற்பட்ட மின்சார ரயில் சேவைகள் இயக்கப்படுகின்றன. இந்த மார்க்கத்தில் வேளச்சேரி - பரங்கிமலை இடையிலான 5 கி.மீ. தொலைவை இணைக்கும் வகையில், பறக்கும் ரயில் வழித்தட திட்டப்பணி, 2008-ம் ஆண்டில் தொடங்கப்பட்டது.



ஆனால், ஆதம்பாக்கம், தில்லை கங்கா நகரில் நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினையால் பணிகள் முடங்கின. பின்னர் 2021-ம் ஆண்டுக்குப் பிறகு, பணிகள் மீண்டும் தொடங்கின. கடந்த 17 ஆண்டுகளாக நடந்து வந்த ரயில் இணைப்பு பணிகள் முடிவடைந்து, பல்வேறு கட்ட சோதனைகளுக்குப் பிறகு இன்று பயணிகள் போக்குவரத்து சேவை தொடங்கி வைக்கப்பட்டது.

அதன்படி, பரங்கிமலையில் இருந்து வேளச்சேரி வழியாக கடற்கரைக்கு முதல் மின்சார ரயில் சேவை நேற்று அதிகாலை 5 மணிக்கு தொடங்கியது. இந்த ரயிலில் ரயில்வே அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் புழுதிவாக்கம், ஆதம்பாக்கம், கீழ்கட்டளை, மடிப்பாக்கம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த பயணிகள், சமூக ஆர்வலர்கள், பல்வேறு குடியிருப்போர் நலச்சங்கத்தை சேர்ந்தவர்களும் பயணித்தனர்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
➤ Public Notice ➤ Loss of Share
➤ Legal Notice ➤ Merger
➤ Tender Notice ➤ Acquisition
➤ Society Notice ➤ AFR, UFR, etc.
for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789941009
Email: anandabhaskarnews@gmail.com

# கரூர் கூட்ட நெரிசல்: சிபிஐ விசாரணைக்கு ஆஜராக டெல்லி புறப்பட்டார் விஜய்

**சென்னை, மார்ச் 15:**

கரூர் வேலுச்சாமிபுரத்தில் கடந்த ஆண்டு செப்டம்பர் 27-ஆம் தேதி தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் பங்கேற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் குழந்தைகள் உள்பட 41 பேர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கரூர் கூட்ட நெரிசல் வழக்கை சிபிஐ விசாரித்து வருகிறது. இந்த வழக்கு விசாரணைக்காக தவெக தலைவர் விஜய் டெல்லி சிபிஐ தலைமை அலுவலகத்தில் கடந்த 12-ம் தேதி ஆஜரானார். அப்போது அவரிடம் சுமார் 7 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டது.

பின்னர் 19-ம் தேதி ஆஜராக சம்மன் அனுப்பியதைத் தொடர்ந்து அன்றைய தினம் மீண்டும் அவர் ஆஜரானார். அன்று காலை 10.30 மணிக்கு விசாரணை தொடங்கி 6 மணி நேரம் விசாரணை நடைபெற்றது. அதேவேளையில், 2-வது முறையாக விஜய் ஆஜரானபோது சில கேள்விகளுக்கான ஆதாரங்களை சமர்ப்பிக்க அவரது தரப்பில் கூடுதல் அவகாசம் கேட்கப்பட்டதால், அவர் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்படலாம் என்றும் கூறப்பட்டது. இந்நிலையில், டெல்லி சிபிஐ அலுவலகத்தில் ஆஜராகும்படி விஜய்க்கு சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளது.

இந்த சம்மனை ஏற்று விஜய் நாளை விசாரணைக்கு ஆஜராகிறார். இந்த நிலையில், இன்று தனது இல்லத்தில் இருந்து காரில் புறப்பட்ட த.வெ.க தலைவர் விஜய் விமான நிலையம் வந்தடைந்தார். அங்கிருந்து தனி விமானம் மூலம் இன்று மதியம் விஜய் டெல்லி புறப்பட்டார். தவெக நிர்வாகி சிடிஆர் நிர்மல்குமார், உதவியாளர் ஜெகதீஷ் உள்பட 7 பேர் தனி விமானத்தில் தவெக தலைவர் விஜய் உடன் செல்கின்றனர்.

விசாரணையில் விஜய்யிடம் சிபிஐ பல்வேறு கேள்விகளை எழுப்பி விசாரணை நடத்தும் என்று தெரிகிறது. இதே வழக்கில் திமுக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியையும் விசாரணைக்கு ஆஜராகுமாறு சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளது. வரும் 17-ஆம் தேதி செந்தில் பாலாஜி டெல்லியில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராக உள்ளார்.

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## திருக்குறள் குறள்-559

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல்



அரசன் முறை தவறி நாட்டை ஆட்சி செய்வானானால், அந்த நாட்டில் பருவமழை தவறி மேகம் மழை பெய்யாமல் போகும்.

## சிந்திக்க ஒரு நொடி



புரிதல் இல்லாத வாழ்க்கையில்..... புதையலே கிடைத்தாலும் பயனில்லை...

உஷாமுத்துராமன்

# ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு சுக்கிர வாரம் ஊஞ்சல் உற்சவம் சிறப்பு வழிபாடு

**திருவண்ணாமலை,மார்ச்15:**


ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மாதம் சுக்கிரவாரத்தை முன்னிட்டு யாகேஷ் ஐயர் அவர்களால் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கும், ஆதி அம்மனுக்கும்,அனைத்து தெய்வங்களுக்கும் சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர், சந்தனம், பன்னீர், இளநீர், தேன்,பஞ்சாமிர்தம், வெட்டிவேர் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து, வண்ண பூக்களால் அர்ச்சனைகள் செய்து, வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க, பாட்டுகள் பாடி,பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

மற்றும் உற்சவரை அலங்கரித்து வேத மந்திரங்கள் ஒலிக்க, மங்கள வாத்தியங்கள் இசைக்க தேரில் உற்சவரை அமர வைத்து ஆலயம் மூன்று முறை சுற்றி வந்ததும் தீபாராதனையும் நடைபெற்றது.

உற்சவரை ஊஞ்சலில் அமர வைத்து வேத மந்திரங்கள் ஒலிக்க ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பாட்டுகள் பாடி தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய ஆண்கள், பெண்கள் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது.

உபயதாரர் : S. சுந்தர்ராஜ் பானு குடும்பத்தினர்கள். ராஜு செட்டியார் ஜுவல்லரி திருவண்ணாமலை.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை








# கேஸ் சிலிண்டர் புக்கிங் மத்திய அரசின் புதிய அறிவிப்பு!

பொதுமக்கள் சிரமமின்றி வீட்டிலிருந்தபடியே கேஸ் சிலிண்டர்களை முன்பதிவு செய்ய புதிய எண்களை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

பாரத் கேஸ் (Bharatgas):
வாட்ஸ்அப்: 1800 22 4344
மிஸ்டு கால்: 7710955555

இண்டேன் (Indane):
வாட்ஸ்அப்: 7588888824
மிஸ்டு கால்: 8454955555

ஹெச்பி கேஸ் (HP Gas):
வாட்ஸ்அப்: 9222201122
மிஸ்டு கால்: 9493602222




# கண்ட பேரண்ட பக்ஷி வாகனம் ஸ்ரீ பெருமாள் இராஜ அலங்காரம்



ஸ்ரீவித்யா இராஜகோபால ஸ்வாமி திருக்கோயில், இராஜமன்னார்குடி. பங்குனி ப்ரும்மோத்ஸவ ஆறாம் திருநாள் இரவு கண்ட பேரண்ட பக்ஷி வாகனம் ஸ்ரீ பெருமாள் இராஜ அலங்காரம், புறப்பாடு.

# ஐம்பெரும் விழா

**மதுரை, மார்ச் 15:**

மதுரை மாவட்டம் மதுரை கிழக்கு ஒன்றியம் எல்கேபி நகர் அரசு நடுநிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி, பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு பாராட்டு விழா, பை (கணக்கு) தினம், பரிசளிப்பு விழா, உலக மகளிர் தினம் ஆகிய ஐம்பெரும் விழாக்கள் மதுரை கிழக்கு வட்டார கல்வி அலுவலர் சாந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




தலைமை ஆசிரியர் தென்னவன் முன்னிலை வகித்தார். ஆசிரியர் ராஜவடிவேல் வரவேற்றார். அறிவியல் கண்காட்சியில் ராக்கெட்சேட்டிலைட்,சோலார் படகு, பன்முக எதிரொளிப்பு, வாட்டர்லெவல் இண்டிகேட்டர், ஆட்டோமேட்டிக் ஆன் ஆப் டியூப் லைட், ஸ்ட்ரீட் லைட் ஏர் கூலர், சோலார் வாட்டர் பல்ப், அனிமா மீட்டர், மஸ்கிட்டோ கில்லர், மின்காந்த பழுதூக்கி, இயக்கங்களின் வகைகள், நுரையீரல் செயல்படும் முறை, சோலார் குக்கர், மழை உருவாகும் விதம் காட்டுதல், ஆரோக்கிய வாழ்க்கை,மருத்துவ தாவரங்கள், திடக்கழிவு மேலாண்மை, கழிவுப் பொருட்களில் இருந்து தேவையான பொருட்கள் செய்தல், எரிமலை உருவாதல், மின்சாரம் உற்பத்தி செய்யும் வழிமுறைகள், முட்டை ஓட்டிலிருந்து சாக்பீஸ் தயாரித்தல், மின் மோட்டார் வேலை செய்யும் விதம், எளிய ஸ்விட்ச் மாடல், ஏடிஎம் மிஷின், பிரிண்டர் மெஷின், வளிமண்டல அழுத்தத்தை காட்டும் சோதனைகள், நியூட்டனின் மூன்றாம் விதி விளக்கம், பாஸ்கல் விதி விளக்கம், நியூட்டன் டிஸ்க் மாடல், சிகரெட் புகை நமக்கு பகை செயல் விளக்கம் முதலிய அறிவியல் மாதிரிகள் செய்து காட்டப்பட்டன. கல்வி ஆண்டு முழுவதும் வருகை புரிந்து பள்ளியின் மேம்பாட்டிற்கு உதவிய பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு மெடல் அணிவித்து, பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. சமூக தணிக்கை செய்யப்பட்டது. பள்ளி மேலாண்மை குழு கருத்தாளர் சேது அவர்கள் பள்ளி மேலாண்மை குழுவின் முக்கியத்துவம் குறித்து சிறப்புரையாற்றினார். பை தினத்தின் முக்கியத்துவம் குறித்து ஆசிரியர் பயிற்றுனர் சிவ பார்வதி பேசினார். கல்வியில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. உலக மகளிர் தினம் குறித்து ஆசிரியை அருவகம் பேசினார். விழாவில் பணி நிறைவு பெறும் கொண்டபெத்தான் பள்ளி அறிவியல் ஆசிரியை ஈஸ்வரி பாராட்டு பெற்றார்.

ஆசிரியை விஜயலட்சுமி நன்றி கூறினார். விழாவில் சிறப்பு பயிற்றுநர் அமலஜோசப், வானவில் மன்ற பொறுப்பாளர் பாண்டிச் செல்வி, பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் தஸ்லிம் பானு மற்றும் உறுப்பினர்கள், பெற்றோர்கள், கிராம பொதுமக்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் சுகுமாறன், அனுசியா, சித்ரா, தமிழ்ச்செல்வி, அகிலா, அம்பிகா, ராணி ஆகியோர் செய்திருந்தனர்.

# கருடசேவை & ஏகாந்த சேவை



ஸ்ரீ யதோக்தகாரிபங்குனி பிரம்மோத்ஸவம், மூன்றாம் நாள் கருடசேவை & ஏகாந்த சேவை

# திமுக மாணவரணியினர் வாழ்த்து





திமுக கழக மாணவரணியின் மாநில செயலாளராக நியமிக்கப்பட்ட ஜெ.வீரமணி அண்ணா அறிவாலயத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்,யிடம் வாழ்த்து பெறறனர். அதனைத் தொடர்ந்து விழுப்புரம் வடக்கு மாவட்டம் வல்லம் தெற்கு ஒன்றிய மாணவரணிச் சார்பில் அமைப்பாளர் சேவூர் முஹம்மது அலி மற்றும் நிர்வாகிகள், சட்டக்கல்லூரி மாணவர்கள் வாழ்த்துக்களை பெற்றனர். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

# அதிமுக பாகமுகவர்கள் ஆலோசனைக்கூட்டம்





சென்னை திருவள்ளூர் மத்திய மாவட்டம் மதுரவாயல் மத்திய மேற்குப் பகுதி அதிமுக கழக சார்பில் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் பெஞ்மின் தலைமையல் 148 மற்றும்151 வட்டத்தின் பாகமுகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

# பொறுப்பேற்பு!



**வேலூர், மார்ச் 15:**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகர காவல் ஆய்வாளராக சூரிய லிங்கம் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு அந்த காவல் நிலையத்தில் பணிபுரியும் உதவி ஆய்வாளர்கள், தலைமை காவலர்கள், காவலர்கள் உள்ளிட்ட அனைவரும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

# ஆலத்தூர் கிராமத்தில் அ.தி.மு.க.,வின் தெருமுனை பிரச்சார கூட்டம் !



**செய்யாறு, மார்ச் 15:**

செய்யாறு அடுத்த ஆலத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் அ.தி.மு.க., சார்பில் தெருமுனை பிரச்சார கூட்டம் மாவட்ட பொருளாளர் ஆலத்தூர் சுப்புராயன் ஏற்பாட்டில் நடந்தது.

அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்த முதற்கட்ட 15 வாக்குறுதிகள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் செய்யாறு அடுத்த அனக்காவூர் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட அளதுறை, ஆலத்தூர், வெங்கோடு உள்ளிட்ட கிராம பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த வாக்குறுதிகள் குறித்து, திருவண்ணாமலை வடக்கு மாவட்ட செயலாளர் தூசி மோகன், முன்னாள் அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் ஆகியோர் கிராம மக்களுக்கு எடுத்துக் கூறினர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட பொருளாளர் ஆலத்தூர் சுப்புராயன் செய்திருந்தார்.

இந்நிகழ்ச்சியில் அனக்காவூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சிவராஜ், வர்த்தக அணி ஒன்றிய செயலாளர் நதிக்குமார், நகர செயலாளர் வெங்கடேசன், அ.தி.மு.க., பொறுப்பாளர்களான சுப்புலட்சுமி சுப்பராயன், அருண், தவமணி, சுரேஷ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சீர்காழியில் ரோட்டரி சங்கத்தின் சார்பில் எட்டு பள்ளிகளில் நேர்மை அங்காடி




**சீர்காழி,மார்ச் , 15 :**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அமைந்திருக்கும் அனைத்து வகை பள்ளிகளை சார்ந்த எட்டு பள்ளிகளுக்கு சீர்காழி ரோட்டரி சங்கத்தின் சார்பில் நேர்மை அங்காடி பள்ளி மாணவர்களுக்கு அனைத்து பொருட்களையும் ரோட்டரி சங்கத்தின் சார்பில் அமைத்துக் கொடுத்து நேர்மை அங்காடியினை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தினர்.

இந்நிகழ்விற்கு ரோட்டரி சங்கத்தின் இவ்வாண்டின் தலைவர் பி.நடராஜன் தலைமை வகிக்க, ரோட்டரி துணை ஆளுநர் பி.பாலமுருகன்., பட்டுக்கோட்டை தாமஸ் ஆரோக்கியராஜ் ஆகியோர் முன்னிலையில், ரோட்டரிமண்டல முதன்மை அதிகாரி விருதை ஏ.கே.ஜாகிர் ஹுசைன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு அனைத்து அங்காடிகளையும் திறந்து வைத்து மாணவர்களுக்கு சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வில் சபாநாயக முதலியார் இந்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் எஸ். முரளிதரன், பெஸ்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் எஸ்.எஸ். என். ராஜ் கமல்.,சுபம் வித்யா மந்திர் பள்ளி தாளாளர் ஜி. சுதேஷ் ஜெயின்., சென் ஜோசப் பள்ளி முதல்வர் ரெக்சலின் மேரி., ச.மு. இந்து தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் வெங்கட்ராமன். டார்கெட் லைன்ஸ் கிளப் மெட்ரிக் பள்ளி முதல்வர் டி. சுரேஷ் , நகராட்சி தொடக்கப் பள்ளி தாடாளன் மேற்கு பள்ளி தலைமையாசிரியர் எல். ஆரோக்கிய செல்வி, ஆசிரியர் மாலதி, சட்டநாதபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை எஸ். செல்வி ஆகியோர் ஏற்பாட்டின் படி மேற்கண்ட எட்டு பள்ளிகளில் நேர்மை அங்காடியானது தொடங்கப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் சீர்காழி ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் சுசீந்திரன், கண்ணன், பாலமுருகன், ராஜேந்திரன் போன்றோர்களும், வருங்கால சங்க தலைவர் ஏ.சண்முகம், சங்க உறுப்பினர்கள் சூரத் கணேசன்., கண்ணன் மற்றும் 1000க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பயன்பட்டனர்.

நிறைவாக ரோட்டரி சங்க உறுப்பினர் வசந்த் குமார் பட்டேல் நன்றி கூறினார்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### "நிதிஷ்குமாருக்கு ஏற்பட்ட நிலை நாளை பழனிசாமிக்கும் ஏற்படும்" - உதயநிதி பேச்சு



பாஜக-வால் நிதிஷ்குமாருக்கு இன்று ஏற்பட்டுள்ள நிலை நாளை பழனிசாமிக்கும் ஏற்படும் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

தருமபுரி கிழக்கு, மேற்கு மாவட்டங்களின் திமுக துணை அமைப்புகளின் நிர்வாகிகள், துணை அமைப்பாளர்கள் சந்திப்புக் கூட்டம் தருமபுரியில் நேற்று நடந்தது. இந்தக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: தமிழகத்தில் புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்த மத்திய அரசு அழுத்தம் கொடுப்பதுடன், தமிழகத்துக்கான கல்வி நிதி உள்ளிட்ட நிதிகளை நிறுத்தி வைத்துள்ளது. இந்த அழுத்தங்களுக்காக சமரசம் அடைந்து விடாமல், தமிழகத்தில் இருமொழிக் கொள்கையே தொடரும் என்பதில் முதல்வர் உறுதியாக இருக்கிறார். பிஹாரில் 10 முறை முதல்வராக இருந்த நிதிஷ்குமார் தற்போது மாநிலங்களவை உறுப்பினர் ஆக்கப்பட்டுள்ளார். பிஹார் மாநில ஆட்சியை பாஜக தன் வசமாக்கியுள்ளது. கடந்த மக்களவைத் தேர்தலின் போது பாஜக-வுடன் கூட்டணியில் இருந்து அவர்களின் வெற்றிக்காக உழைத்த நிதிஷ்குமாருக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இன்று அவருக்கு ஏற்பட்டுள்ள நிலை நாளை பழனிசாமிக்கும் ஏற்படும். தேர்தலுக்கு பிறகு அதிமுக-வை பாஜக கபளீகரம் செய்து விடும். தமிழக அரசின் திட்டங்கள், பயன்கள், சாதனைகள் குறித்து திமுக-வின் அனைத்து நிலை நிர்வாகிகளும் வீடு வீடாகச் சென்று பிரச்சாரம் செய்யுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

### "பழனிசாமியின் வாக்குறுதிகளை பொதுமக்கள் நம்பவில்லை" - ஓபிஎஸ் பகிரங்க தாக்கு



பழனிசாமியின் வாக்குறுதிகளை பொதுமக்கள் நம்பவில்லை என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித் துள்ளார்.

தென்காசி மாவட்டம், இலஞ்சியில் திமுக நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் பேசியதாவது: அதிமுக-வின் நிரந்தரப் பொதுச்செயலாளராக ஜெயலலிதா பெயர்தான் இருக்க வேண்டும் என்று பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றினோம். அதை தூக்கிப் போட்டுவிட்டு, பொதுச்செயலாளராக பழனிசாமி தனக்குத்தானே மகுடம் சூட்டிக்கொண்டார். ஆனால் என்ன ஆனது? இவர் பொதுச் செயலாளராக பொறுப்பேற்ற பின் வந்த 10 தேர்தல்களிலும் தோல்வியடைந்தார். அவரை கட்சியினர் நம்பவில்லை. இப்போது அவர் அறிவிக்கும் வாக்குறுதிகளை மக்களும் நம்பவில்லை. அவர் சொல்வதெல்லாம் பொய் என்பதை அறிந்து கொண்டார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

### 'தி.மு.க. கூட்டணியை எதிர்க்கும் வலிமையுள்ள கூட்டணி இன்னும் உருவாகவில்லை' - திருமாவளவன்

தி.மு.க. கூட்டணியை எதிர்க்கும் வலிமையுள்ள கூட்டணி தமிழகத்தில் இன்னும் உருவாகவில்லை என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது;-

"தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை எதிர்ப்பதற்கு வலிமையுள்ள ஒரு கூட்டணி தமிழகத்தில் இன்னும் உருவாகவில்லை. அ.தி.மு.க.-பா.ஜ.க. கூட்டணியாக இருந்தாலும் சரி, அல்லது நண்பர் விஜய் தலைமையிலான கட்சியாக இருந்தாலும் சரி, யாரும் இதுவரை கூட்டணி என்ற வடிவத்தைப் பெறவில்லை. தி.மு.க. தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு எதிரான வதந்திகளை பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டு மக்கள் மதசார்பற்ற அரசியல் சக்திகளுக்கே துணை நிற்பார்கள். நல்லாதரவை வழங்குவார்கள். தி.மு.க. தலைமையிலான கூட்டணி மீண்டும் வெற்றி பெற துணை நிற்பார்கள் என்று நம்புகிறேன்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தவெக மாவட்டச் செயலாளர்களுடன் அவசர ஆலோசனை: பாஜக கூட்டணிக்கு தயாராகிறதா!



2026 சட்டப்பேரவைத் தேர்தல் களத்தில் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் திருப்புமுனையை ஏற்படுத்தும் கட்சியாகப் பார்க்கப்படுகிறது. தனது முதல் மாநாட்டிலேயே, "கூட்டணி கட்சிகளுக்கு ஆட்சியில் பங்கு" எனும் அதிரடி ஆஃபரை வெளியிட்டார் விஜய். இது திமுக, அதிமுக-வுக்கு மாற்றாக ஒரு மெகா கூட்டணிக்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. குறிப்பாக, காங்கிரஸ் தங்களை நோக்கி வரும் என விஜய் நம்பினார். ஆனால், யதார்த்தம் வேறாக அமைந்தது.

காங்கிரஸ் மீண்டும் திமுக-வுடனேயே பயணிக்க முடிவு செய்தது, விஜய்யின் ஆரம்பகட்ட வியூகத்துக்குப் பின்னடைவாக அமைந்தது. அதிகாரப் பகிர்வு எனும் துருப்புச்சீட்டு கையில் இருந்தும், ஒரு தேர்தலைக்கூட சந்திக்காத தவெக-வின் வாக்கு வங்கி மற்றும் எதிர்காலம் குறித்த ஐயப்பாட்டால், மற்ற கட்சிகள் தவெக பக்கம் தலைவைக்கத் தயங்கின. இது ஒருபுறமிருக்க, சிறிய மற்றும் செல்வாக்கான கட்சிகளைத் தன்பக்கம் இழுக்க தவெக போட்ட திட்டங்களை, பாஜக மேலிடம் மிக சாதுர்யமாக முறியடித்ததாகக் கூறப்படுகிறது.

தற்போது தவெக தலைவரைச் சுற்றி அரசியல் ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் பலவாறாக நெருக்கடிகள் சூழ்ந்துள்ளன. கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பான சிபிஐ விசாரணை, 'ஜனநாயகன்' பட வெளியீட்டுச் சிக்கல்கள் மற்றும் குடும்ப விவகாரங்கள் என விஜய் கடுமையான அழுத்தத்தில் இருக்கிறார். அதேசமயம் தவெக தனித்துப் போட்டியிட்டால் அது வாக்கு பிரிப்புக்கு வழிவகுத்து, இறுதியில் திமுக கூட்டணிக்கே சாதகமாக முடியும் என்பதை பாஜக-வும் நன்கு உணர்ந்துள்ளது.

இதனைப் பயன்படுத்திக் கொண்டு, தவெக-வை தங்கள் பக்கம் இழுக்க பாஜக தீவிரமாக காய் நகர்த்தி வருகிறது. ஏற்கெனவே திரைமறைவில் நடந்த பலகட்ட பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்த நிலையில், தற்போது இறுதி முயற்சியாக பாஜக மீண்டும் ஒருமுறை பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளது. இந்தச் சூழலில் தான், 'பாஜக-வுடன் கூட்டணி அமைக்கலாமா?' என்ற யோசனை விஜய் தரப்புக்கும் வந்திருப்பதாகத் தகவல்கள் கசிகின்றன.

இது குறித்து விவாதிக்க, நேற்று தவெக மாவட்டச் செயலாளர்களுடன் ஆன்லைன் வாயிலாக அவசர ஆலோசனை நடத்தினார் பொதுச்செயலாளர் ஆனந்த். அதில், மாநாட்டில் அறிவித்த 'கொள்கை' மாறாமல் தனித்தே நின்று பலத்தைக் காட்டுவதா அல்லது, தற்போதைய நெருக்கடிகளைச் சமாளிக்க கூட்டணியில் கைகோப்பதா? ஒரு வேளை, பாஜக-வுடன் கூட்டணி அமைத்தால், ஏற்கெனவே அவர்களை 'கொள்கை எதிரி' என்று அறிவித்ததற்குப் பொதுமக்களிடம் என்ன பதில் சொல்வது என்பது குறித்தெல்லாம் பலவாறு ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

கூட்டத்தில் பங்கேற்ற மாவட்டச் செயலாளர்களில் சிலர், "புதிதாகக் களம் காண்பதால் கட்சிக்கும், தலைவருக்கும் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்க இப்போதைக்கு பாஜக-வுடன் கூட்டணி அமைப்பதே பாதுகாப்பு" என வெளிப்படையாகக் கருத்து தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. எனினும், விஜய் எந்த முடிவெடுத்தாலும் கட்டுப்படுவோம் என மாவட்டச் செயலாளர்கள் உறுதி அளித்ததாகச் சொல்லப்படுகிறது.

இப்படியான சூழலில் கரூர் கூட்ட நெரிசல் வழக்கு தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு ஆஜராக இன்று (மார்ச் 14) விஜய் டெல்லி செல்கிறார். நாளை அவரிடம் விசாரணை நடைபெற உள்ள நிலையில், ஒருநாள் முன்னதாகவே அவர் டெல்லி செல்வது அரசியல் வட்டாரத்தில் பெரும் விவாதத்தைக் கிளப்பியுள்ளது. இன்று இரவு டெல்லி ஹோட்டலில் தங்கும் விஜய், பாஜக தேசியத் தலைவர்களை ரகசியமாகச் சந்தித்துப் பேசக்கூடும் என்றும் கூறப்படுகிறது. அப்படியான சந்திப்புகள் நடந்தால் கிட்டத்தட்ட பாஜக அணியில் தவெக இணைவது உறுதியாகி விடும்.

## கூட்டணி என பரவும் தகவல்: தவெக நிலைப்பாடு என்ன? சிடிஆர் நிர்மல் குமார் விளக்கம்



தமிழக வெற்றிக்கழகம் வரும் தேர்தலில் தனித்தே போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பாஜக - அதிமுக இடம் பெற்றுள்ள தேசிய ஜனநாயக கூட்டணியில் இணைய இருப்பதாக கடந்த இரு தினங்களாக செய்திகள் வெளியாகி வருகின்றன. நேற்று தவெக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இதில் பெரும்பாலான நிர்வாகிகள் கூட்டணி அமைத்து போட்டியிட ஆதரவு தெரிவித்து இருப்பதாகவும் தகவல் பரவியது. இதனால், தனித்து போட்டியிடும் முடிவை கைவிட்டு பாஜகவுடன் தவெக கை கோர்க்க போகிறதா என்று அரசியல் வட்டாரத்தில் யூகங்கள் கிளம்பியுள்ள நிலையில், இது தொடர்பாக தவெக நிர்வாகி சிடிஆர் நிர்மல் குமார் தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை போட்டுள்ளார் சிடிஆர் நிர்மல் குமார் தனது எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

மக்கள் பிரச்சனைகளிலிருந்து, அனைவரின் கவனத்தையும் திசை திருப்பும் நோக்கத்தில், வழக்கம் போலவே தொடர்ந்து தமிழக வெற்றிக் கழகத்தை தொடர்புப் படுத்தி ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்கள் வாயிலாக யூகங்களின் அடிப்படையில் தினசரி பல்வேறு செய்திகள் பரப்பப்படுகிறது.

கழக நிகழ்ச்சிகள் உள்ளிட்ட, கழகத்தின் சார்பாக வரும் அதிகாரப்பூர்வமான அறிவிப்புகளை மட்டுமே கழகத் தோழர்கள் பின்பற்றவும்" என்று தெரிவித்துள்ளார்.

## மாம்பழம் சின்னத்தை முடக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் ராமதாஸ் மேல்முறையீடு



மாம்பழம் சின்னத்தை முடக்கக்கோரி உச்ச நீதிமன்றத்தில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் மேல்முறையீடு மனு தாக்கல் செய்துள்ளார்.

பாமக.வுக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கீடு செய்து அன்புமணி முகவரிக்கு தேர்தல் ஆணையம் கடந்த ஆண்டு ஜூலை மாதம் அனுப்பிய கடிதத்தை ரத்து செய்யவும், அந்தக் கடிதத்தை தனக்கு அனுப்ப தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரியும் சென்னை உயர் நீதிமன்றத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் மனு தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை சுட்டிக்காட்டியதுடன், உள்கட்சி பிரச்சினை தீரும்வரை தேர்தலை தள்ளிவைக்க முடியாது என்றும், உரிமையியல் நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகே உயர் நீதிமன்றத்தை நாட முடியும் என்றும் கூறியது. மேலும், இதுபோன்ற வழக்கை தாக்கல் செய்து நீதிமன்ற நேரத்தை வீணடித்தால் அபராதம் விதிக்க நேரிடும் என்று எச்சரித்து கடந்த பிப்.20-ம் தேதி தள்ளுபடி செய்தது.

ஏற்கெனவே மாம்பழம் சின்னம், பாமக பெயர் மற்றும் கொடி ஆகியவற்றை அன்புமணி பயன்படுத்த எதிர்ப்பு தெரிவித்து ராமதாஸ் தரப்பில் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், அந்த வழக்கு விசாரணைக்கும் சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தச் சூழலில், அன்புமணி தரப்புக்கு மாம்பழம் சின்னம் ஒதுக்கியதை எதிர்த்து ராமதாஸ் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## என்.டி.ஏ. கூட்டணிக்கு விஜய் வருவாரா? - நயினார் நாகேந்திரன் பதில்

தமிழக சட்டசபை தேர்தல் நெருங்கி வரும் நிலையில், என்.டி.ஏ கூட்டணியில் தமிழக வெற்றிக்கழகத்தை இணைக்க பாஜக முயல்வதாக கடந்த ஒரு வாரமாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இந்த கூட்டணி விவகாரம் தொடர்பாக தவெக, அதிமுக மற்றும் பாஜக தரப்பில் இருந்து எந்த விதமான அதிகாரப்பூர்வமான தகவலும் வெளியாகவில்லை.

இந்த நிலையில், பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது தேசிய ஜனநாயக கூட்டணிக்கு விஜய் வருவாரா? பேச்சுவார்த்தை நடக்கிறதா? என்று அவரிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு பதிலளித்து நயினார் நாகேந்திரன் கூறியதாவது;

"கரூர் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு ஆஜராவதற்காகவே விஜய் டெல்லி செல்கிறார். விஜய் டெல்லி செல்வதற்கும், கூட்டணிக்கு எந்த தொடர்பும் கிடையாது. கூட்டணிக்கு விஜய் வர விரும்புகிறீர்களா என்ற கேள்விக்கு நான் பதில் சொல்ல முடியாது. சிபிஐ மூலம் மிரட்டி விஜய்யை கூட்டணிக்கு வர வைப்பதாக எதிர்க்கட்சிகள் பொய் பேசுகின்றன. தேசிய ஜனநாயக கூட்டணிக்கு விஜய் வருவாரா என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது."

இவ்வாறு அவர் பேசினார்.

## இன்று அறிவிக்கப்படுகிறதா தமிழக சட்டசபைக்கான தேர்தல் தேதி?

தமிழ்நாடு, புதுவை, கேரளா, மேற்குவங்காளம் ஆகிய 5 மாநிலங்களின் சட்டசபை பதவிக்காலம் மே மாதத்துடன் முடிவடைகிறது. எனவே, இந்த மாநிலங்களில் விரைவில் சட்டசபை தேர்தல் நடத்த வேண்டியுள்ளது. இதனால், தேர்தலை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு, கேரளா, புதுவையில் ஒரே கட்டமாகவும், மேற்கு வங்காளம், அசாமில் பல்வேறு கட்டங்களாகவும் தேர்தல் நடத்தப்படுவது வழக்கம். வரும் சட்டசபை தேர்தலிலும் இதே முறை பின்பற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் ஏப்ரல் இரண்டாவது வாரத்திற்கு மேல் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் சட்டசபை தேர்தலுக்கான தேதியை தேர்தல் ஆணையம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட உடனேயே, மாநிலம் முழுவதும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வரும். இது நடைமுறைக்கு வந்ததும், அரசுப் பணிகளில் புதிய அறிவிப்புகள் வெளியிடுவது மற்றும் அரசு இயந்திரத்தை அரசியல் ஆதாயத்திற்காகப் பயன்படுத்துவது தடை செய்யப்படும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, தேர்தலைச் சுமுகமாக நடத்த தேர்தல் ஆணையம் விரிவான திட்டங்களை வகுத்துள்ளது.

## புதுச்சேரி என்டிஏ கூட்டணியில் தொகுதிப் பங்கீடு இறுதியானது: என்.ஆர்.காங்கிரஸுக்கு 16, பாஜகவுக்கு 14 இடங்கள்



சட்டப்பேரவை தேர்தலையொட்டி புதுச்சேரி என்டிஏ கூட்டணியில் தொகுதிப் பங்கீடு முடிந்துள்ளது. முதல்வர் ரங்கசாமியின் என்.ஆர்.காங்கிரஸ் கட்சிக்கு 16 இடங்களும், பாஜகவுக்கு 14 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதுச்சேரியில், பாஜக - என்.ஆர்.காங்கிரஸ் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை காமராஜர் சாலையில் உள்ள தனியார் உணவகத்தில் நேற்று மாலை நடந்தது. என்.ஆர்.காங்கிரஸ் தரப்பில் அதன் தலைவரான முதல்வர் ரங்கசாமி, அமைச்சர் லட்சுமி நாராயணன் - பாஜக தரப்பில் மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா, மேலிடப் பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா ஆகியோர் ஆலோசனை நடத்தினர்.

கூட்டத்துக்குப் பிறகு வெளியே வந்த முதல்வர் ரங்கசாமி, "எப்போதும் நாங்கள் என்டிஏ கூட்டணியில்தான் இருக்கிறோம். இந்த தேர்தலிலும் இதை தொடர்கிறோம். தற்போது நடந்த பேச்சுவார்த்தை சுமுகமாக, திருப்திகரமாக இருக்கிறது" என்றார். 'என்டிஏ கூட்டணியில் விஜய்யின் தவெக சேருகிறதா?' என்ற கேள்விக்கு "நன்றி வணக்கம்" என கூறிச் சென்றார்.

பாஜக மேலிட பொறுப்பாளர் நிர்மல் குமார் சுரானா கூறியதாவது:

புதுச்சேரியில் முதல்வர் ரங்கசாமியுடன் பாஜக தேர்தல் பொறுப்பாளரான மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா பேசினார். பிரதமர் மோடி வழிகாட்டுதல், மேம்பாட்டு பணிகள், புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி செய்துள்ள பணிகளை முன்வைத்து தேர்தலை சந்திக்க உள்ளோம்.

புதுச்சேரியில் என்டிஏ கூட்டணி இறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 25 ஆண்டுகளில்செய்ய முடியாத திட்டங்களை கடந்த 5 ஆண்டுகளில் எங்கள்

கூட்டணி அரசு செய்திருக்கிறது என்று மக்களே பேசுகின்றனர். என்ஆர்காங்கிரஸ் கடந்த தேர்தலில் 16 இடங்களில் போட்டியிட்டது. பாஜக தரப்புக்கு ஒதுக்கப்பட்ட 14 இடங்களில் கூட்டணி கட்சிகளுடன் சேர்ந்து போட்டியிட்டோம். கடந்த தேர்தலில் இருந்த அதே நடைமுறை இம்முறை தொடரும்.

எந்த தொகுதியில் யார் போட்டியிடுவார்கள் என்பதை ஓரிரு நாளில் இறுதி செய்வோம். பாஜகவின் முக்கிய கூட்டணி கட்சி என்.ஆர்.காங்கிரஸ். இதர கட்சிகளுடன் பாஜக கூட்டணி அமைத்து ஒருங்கிணைத்து போட்டியிடுகிறது. லட்சிய ஜனநாயக கட்சியும் எங்கள் கூட்டணிக்கு வருகிறது. கூட்டணியில் லட்சிய ஜனநாயக கட்சி வருவதற்கு முதல்வர் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்கவில்லை.

## ஞானபீட விருதுக்கு பொருத்தமானவர் கவிஞர் வைரமுத்து - செல்வப்பெருந்தகை வாழ்த்து

**சென்னை, மார்ச் 15:**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;- தமிழ் மொழியின் செழுமையையும், மனித உணர்வுகளின் ஆழத்தையும் கவிதைகளாலும் பாடல்களாலும் உலகிற்கு எடுத்துச் சென்ற கவிஞர் வைரமுத்து அவர்களுக்கு உயரிய ஞானபீட விருது வழங்கப்பட்டிருப்பது தமிழ் இலக்கிய உலகிற்கே பெருமை அளிக்கும் செய்தியாகும். ஞானபீட விருதுவழங்க மிகவும் பொருத்தமானவர் கவிஞர் வைரமுத்து. இலக்கியத்திலும், திரைப்படப்பாடல்களிலும் தனித்துவமான முயற்சியால் தலைமுறைகளைத் தொட்டவர் கவிஞர் வைரமுத்து. அவரது படைப்புகள் தமிழ் மொழியின் இனிமையையும் சிந்தனையின் வளத்தையும் வெளிப்படுத்தியுள்ளன.

இந்த உயரியவிருதைப்பெற்றகவிஞர் வைரமுத்துக்கு எனது இதயம் கனிந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

## விழுப்புரம் சாலை விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நிதியுதவி

**சென்னை, மார்ச் 15:**

முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,

விழுப்புரம் மாவட்டம் மற்றும் வட்டம், சென்னைகும்பகோணம் தேசிய நெடுஞ்சாலையில், வாணியம்பாளையம் கிராம பேருந்து நிறுத்தம் அருகில் நேற்று (13.3.2026) காலை 6.00 மணியளவில் விழுப்புரம் மாவட்டம், ப.வில்லியனூர் கிராமத்தைச் சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட நபர்கள் கரும்பு வெட்டும் வேலைக்காக நான்கு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது கோலியனூரிலிருந்து பண்ருட்டி வழியாக எம்.சாண்ட் ஏற்றி வந்த டிப்பர் லாரி ஒன்று எதிர்பாராதவிதமாக நான்கு சக்கர வாகனத்தின் பின்பக்கமாக மோதிய விபத்தில் அந்த வாகனத்தில் பயணம் செய்த சேகர் என்பவர் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். மேலும், இந்த விபத்தில் பலத்த காயமடைந்து முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் வீரவேலு , செங்கேணி, பாக்கியம் மற்றும் சுதாகர் ஆகிய நான்கு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு மூன்று லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டு ள்ளேன். என தெரிவித்துள்ளார்.

## திருப்பதி கோதண்டராமர் கோவிலில் ஆழ்வார் திருமஞ்சனம்

**திருப்பதி, மார்ச் 15:**



*திருப்பதி கோதண்டராமர் கோவிலில் மார்ச் 17-ந்தேதியில் இருந்து 25-ந்தேதி வரை வருடாந்திர பிரம்மோற்சவ விழா நடக்கிறது. பிரம்மோற்சவத்திற்கான அங்குரார்ப்பண வைபவம், மார்ச் 16 அன்று மாலை 7 மணி முதல் 8.30 மணி வரை நடைபெறும். இதையொட்டி, சேனாதிபதி உற்சவம், மேதினி பூஜை மற்றும் ம்ருத்ஸங்கிரஹணம் ஆகியவை நடைபெறும்.*

*பிரம்மோற்சவத்திற்கு முன்னதாக ஆழ்வார் திருமஞ்சனம் எனப்படும் தூய்மைப்பணி நடைபெறுவது வழக்கம். அவ்வகையில் இன்று காலையில் கோவில் ஆழ்வார் திருமஞ்சனம் பாரம்பரிய முறைப்படி நடைபெற்றது.*

*இதையொட்டி, அதி காலையில் 'சுப்ரபாதம்' இசைக்கப்பட்டு பகவானை துயிலெப்பி, 'தோமாலை சேவை' மற்றும் 'சஹஸ்ரநாம அர்ச்சனை' ஆகியவை நடைபெற்றன. காலை 6.30 மணி முதல் 9.00 மணி வரை 'கோவில் ஆழ்வார் திருமஞ்சனம்' நடத்தப்பட்டது.*

*இதன் ஒரு பகுதியாக, கோவில் வளாகம் முழுமையாகச் சுத்தம் செய்யப்பட்டது. பின்னர் மஞ்சள், குங்குமம், சந்தனம், கற்பூரம், கிச்சிலி வேர், கஸ்தூரி மஞ்சள் ஆகியவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட நறுமணக் கலவை, கருவறையின் சுவர்களில் தெளிக்கப்பட்டது. ஆழ்வார் திருமஞ்சன நிகழ்ச்சி நிறைவடைந்த பிறகு, பக்தர்கள் தரிசனத்திற்காக அனுமதிக்கப்பட்டனர்.*

*ஐதராபாத்தைச் சேர்ந்த பக்தை பிரசன்னா ரெட்டி நான்கு திரைச்சீலைகளையும், திருப்பதியைச் சேர்ந்த மணி இரண்டு திரைச்சீலைகளையும் கோவிலுக்கு நன்கொடையாக வழங்கினர்.*

*இந்நிகழ்வில் கோவிலின் துணை நிர்வாக அதிகாரி நாகரத்னா, தலைமை அர்ச்சகர் ஏ.பி. ஆனந்த் குமார், கோவில் ஆய்வாளர் சுரேஷ் மற்றும் பிற அதிகாரிகள் உடனிருந்தனர்.*

## திருப்பதி கோதண்டராமர் கோவில் பிரம்மோற்சவ விழா கையேடு வெளியீடு

**திருப்பதி, மார்ச் 15:**



*திருப்பதி கோதண்டராமர் கோவிலில் வருகிற 17-ந்தேதி வருடாந்திர பிரம்மோற்சவ விழா தொடங்க உள்ளது. விழா நிகழ்ச்சி நிரல் அச்சிடப்பட்ட கையேடு வெளியிடும் நிகழ்ச்சி தேவஸ்தான நிர்வாகக் கட்டிடத்தில் நடந்தது.*

*நிகழ்ச்சியில் தேவஸ்தான அதிகாரி முத்தாடா. ரவிச்சந்திரா பங்கேற்று பிரம்மோற்சவ விழா நிகழ்ச்சி நிரல் அச்சிடப்பட்ட கையேட்டை வெளியிட்டுப் பேசினார்.*

*அவர் பேசுகையில், 'திருப்பதி கோதண்டராமர் கோவிலில் இந்த ஆண்டு பிரம்மோற்சவ விழா மார்ச் 17-ந்தேதி முதல் 25-ந்தேதி வரை நடக்கிறது. 16-ந்தேதி மாலை அங்குரார்ப்பணம் நடக்கிறது. மேலும் 19-ந்தேதி யுகாதி அஸ்தானம், 27 முதல் 29-ந்தேதி வரை ராமநவமி விழா, 30 முதல் ஏப்ரல் மாதம் 1-ந்தேதி வரை தெப்போற்சவம் நடக்கிறது. இந்நிகழ்ச்சிகளில் பக்தர்கள் பெருந்திரளாகப் பங்கேற்று, பகவானின் அருள்பெற்று செல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்' என்றார்.*

## மதுரை தெப்பக்குளம் மாரியம்மன் கோவிலில் பங்குனி திருவிழா தொடங்கியது

**மதுரை, மார்ச் 15:**

*தெப்பக்குளம் பகுதியில் மாரியம்மன் கோவில் உள்ளது. இது மீனாட்சி அம்மன் கோவிலை சார்ந்த உபகோவிலாகும். இந்த கோவிலில் நடைபெறும் பங்குனி திருவிழா மிகவும் பிரசித்தி பெற்றது. இந்த ஆண்டின் பங்குனி திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.*

*விழாவையொட்டி மாரியம்மன் நேற்று முன்தினம் கோவிலில் இருந்து புறப்பாடாகி மீனாட்சி அம்மன் கோவிலை அடைந்தார். அங்கு மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரம் செய்து தீபாராதனை நடந்தது.*

*அதை தொடர்ந்து நேற்று மாலை 6 மணிக்கு சிம்ம வாகனத்தில் மாரியம்மன் எழுந்தருளி காட்சி அளித்தார். அப்போது மீனாட்சி, சுந்தரேஸ்வரரிடம் இருந்து கொடிப்பட்டத்தை பூசாரி பெற்றுக்கொண்டு, யானை மீது அமர்ந்து 4 சித்திரை வீதி வழியாக வலம் வந்து தெப்பக்குளம் கோவிலுக்கு வந்து சேர்ந்தார்.*

*அங்கு இரவு 11 மணிக்கு மேல் மாரியம்மன் கோவிலில் பங்குனித் திருவிழா கொடியேற்றம் நடைபெற்றது. அதை தொடர்ந்து சிறப்பு பூஜையுடன் தீபாராதனை காண்பிக்கப்பட்டது. விழாவில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.*

*பங்குனி திருவிழாவில் 17-ந்தேதி பக்தர்கள் பால்குடம், தீச்சட்டி எடுத்து அம்மனுக்கு நேர்த்திக்கடன் செலுத்துவர். அப்போது மாரியம்மன் குதிரை வாகனத்தில் எழுந்தருளி தெப்பக்குளத்தை சுற்றி வலம் வந்து காட்சி அளிப்பார். 18-ந்தேதி திருவிளக்கு பூஜையும், 19-ந்தேதி இரவு பூப்பல்லக்கில் அம்மன் பவனியும் நடக்கிறது. அதை தொடர்ந்து 20-ந்தேதி சிகர நிகழ்ச்சியான சட்டத்தேரில் மாரியம்மன் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளிப்பார். பின்னர் 21-ந்தேதி மாவிளக்கு எடுத்தும், பொங்கல் வைத்தும் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்வு நடைபெறும். அன்று இரவு தீர்த்தவாரியுடன் பங்குனித்திருவிழா நிறைவு பெறுகிறது. விளக்கு பூஜை மற்றும் பால்குடத்திற்கு இலவச டோக்கன் கோவிலில் முன்னதாக நேரில் வந்து பெற்று கொள்ளலாம். இதற்கான ஏற்பாடுகளை மீனாட்சி அம்மன் கோவில் அறங்காவலர்கள், இணை கமிஷனர் சுரேஷ் மற்றும் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.*






## நலம் தரும் மருத்துவம்

### நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த உதவும் கீரை!

மூக்கிரட்டைக் கீரையைக் கடைந்து சாப்பிடுவது, சர்க்கரை நோய்க்கு நல்லது.

மாங்காய் இஞ்சியை உணவில் அடிக்கடி சேர்த்து வந்தால், நம் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி கூடும்.

நெஞ்சுச் சளி இருந்தால், முள்ளு முருங்கை இலை சேர்த்து அரைத்து, தோசை அல்லது அடைதோசை செய்து சாப்பிடலாம்.

காய்ச்சல் இருக்கும்போது புளி சேர்க்காமல், பொரிச்ச ரசம் செய்து சாப்பிடுவது நல்லது.

வாழைத்தண்டில் சமையல் செய்து சாப்பிட்டு வந்தால், சிறுநீரகக் கல் வராது.

வாழைப்பூவை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால், பெண்களின் கருப்பைக்கு நல்லது. மாதவிடாய்க் கோளாறும் நீங்கும்.

கரிசலாங்கண்ணித் துவையல், கறிவேப்பிலைத் துவையல் அடிக்கடி சாப்பிட்டு வந்தால், பார்வைத்திறன் மேம்படும். தலைமுடி நன்றாக வளரும்.

மாதுளம் பழம் சாப்பிடுவதாலும், பீட்ரூட்டை உணவில் அடிக்கடி சேர்த்துக் கொள்வதாலும் ரத்த விருத்தி ஏற்படும்.

அல்சருக்கு முட்டைக்கோஸ், வெண்பூசணி ஜூஸ் செய்து குடித்தால், நல்ல பலன் கிடைக்கும்.

காதில் தோடு போடும் இடத்தில் அரிப்பு வந்தால், கடுக்காயை அரைத்துப் போட வேண்டும்.

சிறிது கசகசாவை மென்று தின்றால் வாய்ப்புண் குணமாகும்.

அகத்தி இலையை நீரில் போட்டு அரைத்து, அந்த ரசத்தை மூன்று வேளை சாப்பிட்டால், நாக்குப் புண் ஆறும்.

### வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்த....

கொய்யா இலை கஷாயம் வயிற்றுப்போக்கைக் கட்டுப்படுத்தும்.

கொய்யா இலையை மென்று தின்றால் குடல் வாயு தீரும்.

சந்தனத்தூள் கஷாயம் இதய வலியைக் குறைக்கும்.

சுண்டைக்காய் கபத்தைப் போக்கும்.

கொன்றைப்பூ கஷாயம் சர்க்கரை நோயைக் கட்டுப்படுத்தும்.

தும்பை இலைச்சாறு சளித்தொல்லையைப் போக்கும்.

அம்மன் பச்சரிசி பால் தடவ பருக்கள் குணமாகும்.

குப்பைமேனிச்சாறு, உப்பு, மஞ்சள் சேர்த்து தடவ பூரான் கடி விஷம் குணமாகும்.

## கிரெடிட் கார்டு விதிமுறைகளில் ஆர்பிஐ அதிரடி! மறைமுக வட்டி, அபராதங்களுக்கு செக்!

பலரும் வங்கிகள் அளிக்கும் கிரெடிட் கார்டுகளை வாங்கிப் பயன்படுத்தி வந்தாலும் அவற்றில் இருக்கும் சில குறைபாடுகளால், சிலர் அதனை வாங்கவே தயக்கம் காட்டுகிறார்கள்.

அப்படியே கிரெடிட் கார்டு வாங்கி அதில் பெரிய தொகையை செலவழித்துவிட்டு, திரும்ப செலுத்த முடியாமல் சிக்கிக் கொண்டால் அவ்வளவுதான். ஒருவாறு சமாளித்து பணத்தைக் கட்டி அந்த கிரெடிட் கார்டை ரத்து செய்ய நினைத்தால் கனவிலும் நடக்காது என்பது போல வங்கிகள் நடந்து கொள்ளும்.

ஆனால், இந்த தொல்லைகள் இனி இல்லை என்பது போல, ஆர்பிஐ புதிய வழிமுறைகளை விதித்துள்ளது.

கட்டண விதிப்பில் வெளிப்படைத்தன்மை, வட்டி கணக்கீட்டில் நேரடித்தன்மை, தாமதக் கட்டணம், கிரெடிட் கார்டின் அதிகபட்சக் கடன் அளவை தீர்மானிப்பது, கார்டை ரத்து செய்ய கால அளவு நிர்ணயிப்பது போன்றவற்றுக்கு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

ஏன் இந்த விதிமுறைகள்? அண்மைக்காலமாக கிரெடிட் கார்டு வழங்கும் நிதி நிறுவனங்கள், கிரெடிட் அட்டையை அதிகாரப்பூர்வமில்லாமல் ஆக்டிவ் செய்வது, கிரெடிட் தொகையை அதிகரிப்பது, மறைமுக வட்டி விதிப்பு, கார்டை ரத்து செய்வதற்கான காலத்தை நீட்டிப்பது, பணத்தை திரும்ப செலுத்துவதில் தாமதம் போன்றவை குறித்து புகார்கள் அதிகரித்து வந்த நிலையில் விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது.



ஆர்பிஐ புதிய விதிமுறைகளின்படி.. கிரெடிட் கார்டு ஆக்டிவேஷன்: முன்பு தானாகவே ஆக்டிவ் ஆகும் - இனி உரிய அனுமதி பெற்றே ஆக்டிவ் செய்யப்படும்.

கடன் உச்சவரம்பு: கிரெடிட் கார்டு தொகை உச்ச வரம்பு நிதி நிறுவனமே அதிகரிப்பது - வாடிக்கையாளரின் அனுமதி பெற வேண்டும்

தாமதக் கட்டணம்: மறைமுகக் கட்டணங்கள் - உரிய கட்டணங்கள் மட்டும், வெளிப்படையாக விதிக்கப்பட வேண்டும்.

கட்டண வசூல்: மறைமுக, கூட்டு வட்டி விதிப்பு முறை - தெளிவான, வெளிப்படையான கட்டண அறிக்கை

கிரெடிட் கார்டு ரத்து: தாமதம் செய்வது வாடிக்கை - இனி குறிப்பட்ட கால அவகாசத்துக்குள் ரத்து செய்ய வேண்டும். (பயன்பாட்டில் இல்லாத கிரெடிட் கார்டுகள் கோரிக்கை வந்த 30 நாள்களுக்குள் ரத்து செய்யப்பட வேண்டும்)

வட்டி விகிதம் கணக்கீடு: நியாயமற்ற முறையில் வட்டி விகிதக் கணக்கீடு கூடாது, எதற்கு, எவ்வளவு கட்டணம் என்பதை தெளிவாக கட்டண அறிக்கையில் தெளிவுபடுத்த வேண்டும். ஆண்டு சதவிகித கட்டணத்தை வாடிக்கையாளர்கள் புரிந்துகொள்ளும் வகையில் கொடுக்க வேண்டும்.

தாமதக் கட்டணத்துக்கான அபராதம்: மொத்தத் தொகையில் பகுதியளவு செலுத்தியிருப்பின், செலுத்தாத தொகைக்குத்தான் தாமதக் கட்டணம் வசூலிக்க வேண்டும், செலுத்தாத தொகைக்கும் கூடுதலாக அபராதம் வசூலிக்கக் கூடாது. கடன் தொகையை திரும்ப செலுத்தும் தேதியை சரியாக தெரிவிக்க வேண்டும். தவறினால் செலுத்த வேண்டிய அபராதத் தொகையையும் வாடிக்கையாளருக்கு தெரிவிக்க வேண்டும்.

கிரெடிட் உச்சவரம்பு தொகை: கிரெடிட் கார்டின் பயன்பாட்டு உச்சவரம்பு தொகையை கூட்டுவதற்கு முன் வாடிக்கையாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும், எழுத்து வடிவில் வாடிக்கையாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். வாடிக்கையாளர் பதில் அளிக்காவிட்டால், மௌனம் சம்மதம் என எடுத்துக் கொள்ளக் கூடாது.

கிரெடிட் கார்டை ரத்து செய்தால்: கிரெடிட் கார்டை ரத்து செய்து, பணத்தைத் திரும்பப் பெற கால தாமதம் ஆவது வழக்கம். அதனைத் தவிர்க்க ஆர்பிஐ பிறப்பித்த விதிமுறையில், வாடிக்கையாளரிடமிருந்து கிரெடிட் கார்டை ரத்து செய்ய கோரிக்கை வந்ததும், உரிய காலத்துக்குள் பரிசீலனை செய்யப்பட வேண்டும். ஆண்டுக் கட்டணத்தை திரும்ப செலுத்த வேண்டும். தாமதம் ஆனால் அபராதத்தை கிரெடி கார்டு நிறுவனங்கள் செலுத்த வேண்டிவரும். இனி, கிரெடிட் கார்டுவைத்திருப்போர் என்ன செய்ய வேண்டும்?

கட்டண அறிக்கைகளை முறையாக சரிபார்க்கவும். தவணைதேதியைநினைவில் வைத்து க்கொண்டு சரியாக தொகையை செலுத்தவும். அபராதத்தைத் தவிர்க்கவும்.

கிரெடிட் கார்டு அட்டையின் பயன்பாட்டு உச்சவரம்பு தொகையில் 30 சதவிகிதம் மட்டுமே பயன்படுத்தவும்.

பயன்படுத்தாத கிரெடிட் கார்டுகளை ரத்து செய்துவிடவும்.

# வியர்வை முத்துக்கள்

மதிய வெயில் மண்டையைப் பிளந்து கொண்டிருந்தது. அந்தச் சிறிய தள்ளுவண்டியில் இளநீர் அடுக்கி வைத்து விற்றுக்கொண்டிருந்தார் கருப்பையா. அவருக்கு வயது அறுபதுக்கு மேல் இருக்கும், ஆனால் அந்த வெயிலிலும் அவர் முகம் சோர்வடையவில்லை. ஒரு இளநீரைச் சீவி, தாகத்தோடு வந்த ஒருவருக்குக் கொடுத்துவிட்டுத் தன் துண்டால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

அருகில் இருந்த ஒரு பெரிய கடையில் வேலை செய்யும் இளைஞன் ஒருவன், "ஏன் பெரியவரே, இந்த வயசுல இப்படி வெயில்ல நின்னு கஷ்டப்படுறீங்க? உங்க பையன் தான் நல்ல வேலையில இருக்கானே, அவன் உங்களை உட்கார வச்சுச் சோறு போட மாட்டானா?" என்று கேட்டான்.

கருப்பையா மெல்லச் சிரித்தார். "தம்பி, பையன் நல்லாத்தான் இருக்கான். ஆனா, இந்த கை கால் ஓடுற வரைக்கும் அடுத்தவங்க கையை எதிர்பார்த்து வாழக் கூடாதுங்கறது என் கொள்கை. இந்த உழைப்புதான் எனக்குத் தூக்கத்தைக் கொடுக்குது, நிம்மதியைக் கொடுக்குது," என்றார்.

அவர் சொன்னது உண்மைதான். ஒரு காலத்தில் கருப்பையா ஒரு பெரிய நிறுவனத்தில் சாதாரணத் தொழிலாளியாகச் சேர்ந்தவர். எந்த வேலையையும் தட்டிக் கழிக்காமல், மற்றவர்கள் ஓய்வெடுக்கும் போது கூட கூடுதல் நேரம் உழைப்பார். அந்த உழைப்புதான் அவரை அந்த நிறுவனத்திலேயே ஒரு மேற்பார்வையாளராக (Supervisor) உயர்த்தியது. தன் உழைப்பால் வந்த வருமானத்தைக் கொண்டுதான் தன் மகனைப் படிக்க வைத்து ஆளாக்கினார்.

அன்று மாலை, அவர் வீட்டுக்குச் சென்றபோது அவர் மகன் செல்வம் வந்திருந்தான். "அப்பா, நான் தான் சொல்றேன்ல, இந்த இளநீர் விக்கிற வேலையெல்லாம் விட்டுட்டு நிம்மதியா வீட்ல இருங்கன்னு," என்றான் வருத்தத்துடன்.

அதற்கு கருப்பையா, "செல்வம், உழைப்புங்கறது வெறும் காசுக்காக மட்டும் இல்லப்பா. அது நம்ம அடையாளத்தை உருவாக்குது. நான் இன்னைக்கு இந்த இளநீர் விக்கிறதுனால நாலு பேருக்குத் தாகம் தீருது, எனக்கும் ஒரு திருப்தி கிடைக்குது. உழைக்காத மனுஷன் துருப்பிடிச்ச இரும்பு மாதிரி. ஆனா உழைக்கிற மனுஷன் தான் தேயத் தேய மின்னுற தங்கம் மாதிரி," என்று விளக்கினார். மகன் அமைதியானான்.

அன்று முதல் அவன் தன் வேலையில் இன்னும் அதிக அக்கறை காட்டத் தொடங்கினான். தந்தையின் அந்த உழைப்புதான் தங்களை இந்த நிலைக்கு உயர்த்தியது என்பதை அவன் உணர்ந்தான். வாழ்க்கையில் குறுக்கு வழிகள் பல இருக்கலாம், ஆனால் நேர்மையான உழைப்பு தரும் உயர்வு நிரந்தரமானது. வியர்வை சிந்தி உழைப்பவனுக்கு அந்த வியர்வைத் துளிகளே ஒரு நாள் வெற்றிக் கிரீடத்தின் முத்துக்களாக மாறும்.

-லால்குடி வெ.நாராயணன்




# நறுமுகை...!

அன்று முதல் நாள். அஞ்சலைக்கு பண்ணையின் சூழல் புதியது.

தனது மகள் நறுமுகையோடு பண்ணைப் பூந்தோட்டத்தில், பூக்களைப் பறித்து சிரித்துப் பேசியபடியே நடந்தான் இனியன். அஞ்சலை ரோஜாப் பூக்களைப் பறித்து கூடையில் சேகரித்தாள். தனது அப்பாவின் கையை உதறிவிட்டு, நறுமுகை அஞ்சலையின் அருகில் நின்றாள்.

"பூச்சி பொட்டு இருக்கும். போடிச் செல்லம்... போ... அப்பாக்கூடப் போ..." என்று கண்ணத்தை மெல்லத்தொட்டு சிரித்து கொஞ்சினாள் அஞ்சலை. குழந்தைக்கு அம்மாவின் ஏக்கம் முகம்முழுவது படர்ந்தது. அஞ்சலை நறுமுகைமீது காட்டும் அன்பு அளவுகடந்து வளர்ந்தது. நறுமுகையோடு அஞ்சலை காட்டும் உடல்மொழி உரையாடலை கண்டு மகிழ்ந்த இனியன் " நறுமுகை... விளையாடிட்டு வா.. அப்பா வீட்டிற்கு போரன்'ன்னு சொல்லிவிட்டு நடந்தான்.

சூரியன் மறைந்தது. வேலையை முடித்து வீட்டிற்குப் புறப்பட்டாள் அஞ்சலை. ஏக்கத்தோடு கையசைத்து அஞ்சலையை வழியனுப்பி வைத்தாள் நறுமுகை.

இன்றோடு பத்து நாட்கள். நறுமுகையில்லாத பண்னை அஞ்சலைக்கு நரகம்போலவே இருந்தது. அஞ்சலையாள் வெளிப்படையாக " எங்கே குழந்தையென்று "கேட்கமுடியவில்லை. உள்ளுக்குள் தவித்தாள். இனியவனின் முகத்தில் சோகம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போனது. இனியவனின் முகம் மாறியது. அஞ்சலையிடம் சொல்லத் துடிக்கும் சொற்கள் நெஞ்சுக்குள் அடைபட்டுக்கிடந்தது. இனியவன் தவித்தான்.

வேலையை முடித்துவிட்டு வெளியே புறப்பட்டான் இனியன். புறப்படுகையில், காலையில் பார்த்த அதே முகம். சோகம் உடல்முழுவதும் பரவியுள்ளதை உணர்ந்துகொண்டாள் அஞ்சலை.

மறுநாள்குளித்து ஆடை உடுத்தி, ஈரக் கூந்தலை அள்ளி முடித்து, கண்ணாடியில் தன் முகத்தின் அழகினை பார்த்து மெல்லச் சிரித்தாள். அவளுக்கே அவளது அழகில் ஒரு காதல் வந்தது. நெற்றி வெற்றிடமாக இருந்தது. அடர்ந்த மேகக்கூட்டமாய் கறுத்த கூந்தல் மலையடிவாரத்தில், இயற்கை அழகினை குவித்து வைத்ததுபோல் உள்ள பண்ணையில் வேலை செய்யப் புறப்பட்டாள் அஞ்சலை

மாலை முடிவுக்கு வரும் நேரம். கனத்த இதயத்தோடு புறப்பட்டாள் அஞ்சலை வெளியே சொல்ல முடியாத வலியோடு, இரு சக்கர வாகணத்தை எடுத்தான் இனியவன். "சொல்லாம வந்துட்டீங்க" என்றாள் மௌனமாக நின்றாள் அஞ்சலை


"உட்காருங்க" என்றதும், அவனது கோரிக்கையை நிராகரிக்காமல் இருசக்கர வாகனத்தில் உட்கார்ந்தாள். வாகனம் முன்னோக்கி சென்றது. கடைசி வரை அமைதி நிலவியது. இருவருக்குள்ளும் மௌனம் நீடித்தது.

அஞ்சலையின் வீடு வந்தது. வாகணத்தை நிருத்தினான் இனியன்.

இறங்கி. நடந்தாள் அஞ்சலை. " அம்மா..." என்று சிரித்த முகத்தோடு ஓடிவந்த அகிலனை கட்டித் தழுவி கொஞ்சி மகிழ்ந்தாள். தவித்து பரிதாபமாக வண்டியையை ஓட்டினான் இனியன். மறுநாள் சிறிய கண்ணாடியை சுவற்றில் சாய்த்து வைத்து, குனிந்து தன் முகத்தை பார்த்தாள் அஞ்சலை. கண்ணுக்கு கீழே இருந்த கறுப்பு புள்ளியை தொட்டுப் பார்த்தாள். கண்ணாடியில் வீட்டிற்கு வெளியே பண்ணையில் வேலை செய்யும் இனியன் நிற்பதை கண்டாள்.

சட்டென எழுந்து வெளியே வந்து "வாங்க, உட்காருங்க" எனக் கோரைப் பாய் எடுத்து போட்டாள். "இருக்கட்டும். நறுமுகைக்கு உடல்நிலை சரியில்லை. மருத்துவரோடு அறிவுரை. நீங்க மறுக்காமல் எனக்கு இந்த உதவியை செய்யனும்" என இரு கைகூப்பி கெஞ்சுவதுபோல் வணங்கியபோது,

"என்ன ஆச்சு? ஏன் கொஞ்ச நாளா நறுமுகை பண்ணைக்கு வரல" என்று பதட்டமாக கேட்டள் அஞ்சலை.



"நீங்க என்னோட வாங்க. எல்லாத்தையும் விளக்கமா மருத்துவமனையில சொல்றேன்" என்று வெளியேயிருந்த மகிழுந்தின் கதவைத் திறந்து உட்கார்ந்தான்.

" அம்மா, அகிலன பாத்துக்க. அப்பாவுக்கு 10 மணிக்கு மாத்திரை கொடு" என முந்தானையை அள்ளி இடுப்பில் சொருகி மகிழுந்தில் உட்கார்ந்தாள் அஞ்சலை .

"என்ன ஆச்சு?"

"உங்கள பாக்கணுமுன்னு அடம்பிடிச்சா"

சிறிது நேரம் அமைதி

"ஏன்னு கேட்டேன்?"

"என்ன சொன்னா..?"

பதில் சொல்லவில்லை. மௌனமாக மகிழுந்தை ஓட்டினான் இனியன். மருத்துவமனைக்கு எதிரில் மகிழுந்து நிறுத்தினான். படபடப்போடு படியேறினாள் அஞ்சலை

நறுமுகை "அம்மா... அம்மா.." என கண் மூடி, முணுமுணுத்தபடியே படுத்திருந்தாள். குழந்தையின் முகம் அன்புக்காக ஏங்கி தவித்ததை உணர்ந்த அஞ்சலை வாரி தன்மார்போடு அனைத்துக்கொண்டு "நறுமுகை... நறுமுகை" என கண்ணத்தை தட்டி அழைத்தாள்.

அன்பான குரலைக் கேட்ட நறுமுகை, மெல்ல கண்களைத் திறந்து "அம்மா.." என கட்டி அணைத்துக்கொண்டாள்

"இதைச் சொல்லிதான் அடம்பிடிச்சா"ன்னு சொல்லிவிட்டு திரும்பி நின்ற இனியவன், "நீங்க தப்பா எடுத்துக்கக்கூடாது.... உங்களுடைய சூழல் எனக்கு தெரியும். நான் வீட்டுக்குப் போய், உங்க அப்பா அம்மா குழந்தையோடு வரன்.." அஞ்சலை இனியவனை புரியாமல் பார்த்தாள். நறுமுகை அஞ்சலையின் முகத்தைப் சிரித்துப் பார்த்து மகிழ்ந்தாள்.

"நீங்க நறுமுகையோட அம்மாவா இருந்திடுங்க" என்று சொல்லிவிட்டு மருத்துவமனையில் இருந்து வெளியேயுள்ள மகிழுந்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான் இனியன்.

நீண்ட வருடங்களுக்குப் பிறகும், நினைவுகளைச் சுமந்து நிற்கின்றது அந்த அழகிய கூரை வீடு. தன் கூரை வீட்டுச் சுவரில் "அகிலனின் சுண்டு விரலைப் பிடித்து நின்ற இனியவனும், நறுமுகையை கொஞ்சுவதுபோல் அஞ்சலையின் அழகான ஃபோட்டோவும் தொங்கவிடப்பட்டிறுந்தது.



- கயப்பக்கம் இரா.இரமேஷ்

# விக்கிரமாதித்தன் கதைகள் 1

.A.S.GOVINDA RAJAN

## மூன்று அழகிய ராணிகளின் கதை

அரசர் ஒருவருக்கு மூன்று அழகிய ராணிகள் இருந்தனர். ஒரு நாள் மன்னரும் முதல் ராணியும் அரண்மனைப் பூங்காவில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். அப்போது அருமையான தென்றல் காற்றும் வீசிக்கொண்டிருந்தது. தென்றல் காற்றால் ஆடிய ஒரு அழகிய மலர் ராணியின் கையின் மீது விழுந்தது, வலியால் ராணி துடித்தால், இதைப் பார்த்த மன்னர் பயந்து போனார். அவர் கைகளைப் பார்த்தார். மெல்லிய பூ விழுந்த இடம் மிகவும் சிவந்து போய் இருந்தது. ஒரு மலர் விழுந்ததால் கை சிவந்து போகுமா என குழம்பிப் போனார். ராணியை அறைக்குப் போய் ஓய்வெடுக்கச் சொல்லிவிட்டார்.

மன்னர் தனது இரண்டாவது மனைவியுடன் ஜன்னலோரமாக அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தார். அப்போது ஜன்னலின் திரைச்சீலை விலகியது. ராணி திடீரென சப்தமிட்டு இந்த நிலவின் ஒளி என்னைச் சுட்டு எரிக்கிறது என்றாள். மன்னருக்கு ஒன்றும் புரியவில்லை, திகைத்துப் போனார். என்ன நிலவின் ஒளி சுடுகிறதா? என்றார். ராணியின் முகம் முழுவதும் நிலவின் ஒளிபட்டு கொப்பளங்கள் உண்டாகிப் போனது. மன்னர் ராணியை தனது அறைக்கு அழைத்து சென்று ஓய்வெடுக்கச் செய்தார்.

மற்றொரு நாள் தனது மூன்றாவது மனைவியுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது ராணிக்கு தூரத்தில் யாரோ அரிசியை உரலில் போட்டு இடிக்கும் ஓசை கேட்டது. திடீரென்று ராணி அலறத் துவங்கினாள். இந்த சத்தத்தைக் கேட்க முடியவில்லை. தயவு செய்து யாராவது நிறுத்தச் சொல்லுங்கள். என் தலை வெடித்துவிடும் போலிருக்கிறது என்று கூறிக்கொண்டே மயங்கி விழுந்து விட்டாள். அவளது கைகளும் முகமும் வேதனை தாங்காமல் சிவந்து விட்டது. மன்னர் ராணியை பத்திரமாக அவளது அறையில் உறங்கச் செய்தான்.

இந்த மூன்று ராணிகளில் யார் மிகவும் மென்மையானவள்? உடலைத் தீண்டாத சப்தம் கேட்டதற்கே மூன்றாவது ராணியின் உடல் சிவந்து போனது. மூன்றாவது ராணி தான் மிகவும் மென்மையானவள் என்றான் விக்கிரமாதித்தன்.





# தெய்வங்களின் குணமே கிரஹங்களின் குணம்!



சோதிட சாஸ்திரத்தில் கிரகங்களின் குணம் எந்த தெய்வத்தின் குணத்தை ஒத்துள்ளது என கண்டறிந்து, அந்த தெய்வத்தை அதிதேவதையாக உள்ளனர். ஒவ்வொரு தெய்வமும் ஒவ்வொரு கிரகத்திற்கு அதிதேவதை.

**சூரியன் சிவன்.**
பரமனும், பார்வதியும் படியளப்பவர்கள் என்ற வழக்கு உண்டு. அதுபோலவே அனைத்திற்கும் மூலகாரணாய் சூரியன் இருக்கிறான். அவன் கொடைக்கு நிகரில்லை. உலகில் உள்ள அனைத்து உயிர்களுக்கும் அவன் உதவியின்றி பிராணன் கிடைப்பதில்லை. ஆகவே சூரியன் சிவனானார்.

**சந்திரன் பார்வதி.**
பரமன் மனைவி பார்வதி, சந்திரனுக்கு அதிதேவதை. பூமியை தாயைப் போல் குளிரூட்டும் கிரகம். சூரியனிடத்தில் வெப்பத்தை பெற்று குளிர்ந்த ஒளியாய் தந்து நீர் நிலைகளை பொங்க வைக்கும். இந்த இரண்டுகிரகங்களின் நிலை சாதகத்தில் நல்ல முறையில் இருந்தால், ஒரு ஜாதகர் தன் இன பந்துக்களுடன் இனிதே வாழ்வான் என்பது உறுதி.

**செவ்வாய் : சுப்ரமண்யர்.**
ஜாதகத்தில் வீரத்திற்கு இன்றியமையாதது செவ்வாய் பலம். இரும்பு கிரகம். உடல் பலத்திற்கு இன்றியமையாதது செவ்வாயின் நிலை. வீரத்தில் சிறந்த தெய்வம் முருகன். சுக்குக்கு மிஞ்சிய வைத்தியமும் இல்லை சுப்பிரமணியருக்கு மிஞ்சி தெய்வமும் இல்லை என்பது பழமொழி. அசுரர்களை தேவர்களுக்காக வதம் செய்த தெய்வம் முருகன். ஆதலால் செவ்வாய்க்கு அதிதேவதை சுப்பிரமணியர்.

**புதன் : விஷ்ணு**
ஒரே நேரத்தில் இருவேறு குணத்தைக் கொண்ட கிரகம். தற்சுழற்சி குறைவானது. தெய்வத்தில் இரு நிறம் கொண்ட தெய்வம் விஷ்ணு. அதுபோலவே ஒருபுறம் கடும் வெப்பமும் மறுபுறம் கடும் குளிரும் கொண்டது. எந்த கிரகத்தின் நேர்கோட்டில் 10 பாகைக்குள் உள்ளதோ அதன் குணத்தை பிரதிபலிக்க வல்லது. நியாயம் தவறாமல் கடமையை செய்வதற்கு இன்றியமையாதது இதன் நிலை.

**குரு: பிரம்மா,**
தட்சிணாமூர்த்தி (குரு) ஜாதகத்தில் கல்வி, கேள்வி, கீர்த்திக்கு வழிவகுக்கும் கிரகம். தற்சுழற்சி அதிகம் உள்ளது. இருக்கும் இடத்தைவிட பார்க்கும் இடமே விருத்தியாகும். ஆசிரியர் போன்ற குணத்தை உடையது.

**சுக்ரன் : லக்ஷ்மி, இந்திரன்.**
ஒரு ஜாதகத்தில மற்ற கிரகங்கள் நிலை கெட்டிருந்தாலும் அதை நிவர்த்தி செய்ய வல்ல கிரகம் சுக்ரன். களத்திர காரகன். லக்ஷ்மியை போல் ஐஸ்வர்யத்தை கொடுக்கக் கூடிய கிரகம். ராஜயோகத்தையும், சுகபோக வாழ்க்கையையும், மனைவி வழி சொத்து சேர்க்கையையும் மனைவியின் குண நலத்தையும் கொடுக்கும். 8ம் இடத்திற்கு உரிய கிரகம். இந்திரன் குணத்தைக் கொண்டது. மழைக்கு காரணமான குளிர்ந்த கிரகம்.

**சனி : எமன், சாஸ்தா**
உஷ்ணத்தை பிரதிபலிக்கும் கிரகம். ஜாதகத்தில் சனியின் நிலையே மரணத்தின் வகையை நிர்ணயிக்கும். சனி 0 பாகையில் குளிர்ச்சியை கொடுக்கும். அதனால் சாஸ்தாவிற்கு நிகராக சொல்லப்பட்து. ஆனால் பார்வை உக்கிரமானது. கொடுப்பதிலும், அழிப்பதிலும் சனிக்கு நிகர் சனியே வேறு கிரகம் இல்லை (ஆயுள் காரகன்).

**ராகு: காளி, துர்கை**
கருமாரியின் நிழல் கிரகம். சந்திரன் தவிர மற்ற கிரகங்கள் இதன் 0 பாகையில் சாதகத்தில் வரும்போது பலன் தருவது அரிது. கருமை நிறம் உடையது. ராகு, கேதுக்கு இடையில் மற்ற கிரகங்கள் உடைபட்டு விட்டால் கால சர்ப்ப யோகம், தோஷம் என்று கூறுவதுண்டு. சாதகனின் பிற்பட்ட காலங்களிலேயே பலன் கொடுக்கும். இளம் வயதில் அவதிகளை சந்திக்க நேரும். துஷ்ட குணத்துடன் கொடுக்க வல்ல கிரகம்.

**கேது : விநாயகர், சண்டிகேஸ்வரர்**
ஞானத்தை கொடுக்கும் கிரகம். ஒரு ஜாதகன் பிறக்கும்போது 0 பாகை ஜன்மத்திலிருந்தால் அந்த ஜாதகனுக்கு சித்தியையும் முக்தியையும் கொடுக்கும். நீண்ட நேரம் ஓரிடத்தில் அசையாமலிருந்து பணி செய்வதில் வல்லமையைத் தரும். சோம்பல் சேர்ந்த திடீர் மாற்றத்தை தரவல்ல கிரகம். (நிழல் கிரகம்).

பணம் மட்டுமே வாழ்க்கையல்ல அதையும் தாண்டி மனிதன் அடைய வேண்டிய அனுபவங்கள் பல உள்ளன. மன நிம்மதி அன்பு தவம் தியானம் முதலிய குணங்கள் எல்லாம் பணத்தால் வருபவை அல்ல! எண்ணத்தில் கவனமாக இருந்தால் சொல்லும் செயலும் சரியாக இருக்கும் ... ஏனெனில் எண்ணத்தின் வெளிப்பாடே சொல்லும் செயலும் ...

முனைவர்
**இராம.வேதநாயகம்**

---

**தினம் ஒரு தலைவர்கள்**

# கான் அப்துல் கப்பார் கான் வரலாறு

பச்சா கான் என்றும் அழைக்கப்படும் கான் அப்துல் கஃபார் கான், இந்தியாவில் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர பிரச்சாரம் செய்த ஒரு பஷ்டூன் சுதந்திர ஆர்வலர் ஆவார். அமைதிவாதத்தில் அவர் கொண்டிருந்த பற்று மற்றும் மகாத்மா காந்தியுடனான நெருங்கிய தொடர்புக்காக, அவர் "எல்லை காந்தி" என்ற புனைப்பெயரைப் பெற்றார்.

அவர் 1929 ஆம் ஆண்டு குதாய் கித்மத்கர் ("கடவுளின் ஊழியர்கள்") இயக்கத்தை நிறுவினார். இந்த இயக்கத்தின் வெற்றி அவருக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திடமிருந்து கடுமையான ஒடுக்குமுறையைப் பெற்றுத் தந்தது, இந்திய சுதந்திரப் போராட்டத்தின் மோசமான அடக்குமுறைகளில் சிலவற்றையும் அவர்கள் அனுபவித்தனர் .

கான் அப்துல் கபார் கான் - ஆரம்ப ஆண்டுகள்

கான் அப்துல் கஃபார் கான், பிரிட்டிஷ் இந்தியாவின் பெஷாவர் பள்ளத்தாக்கில் உள்ள உத்மன்சாயில் இருந்து ஒரு வளமான நில உரிமையாளர் பஷ்டூன் குடும்பத்தில் 1890 பிப்ரவரி 6 அன்று பிறந்தார்.

1910 ஆம் ஆண்டு கான் தனது 20 வயதில் தனது சொந்த ஊரில் ஒரு மசூதிப் பள்ளியைத் திறந்தார். ஆனால் பிரிட்டிஷ் அதிகாரிகள் 1915 ஆம் ஆண்டு அவரது பள்ளியை வலுக்கட்டாயமாக மூடினர், ஏனெனில் அது பிரிட்டிஷ் எதிர்ப்பு நடவடிக்கைகளின் மையம் என்று அவர்கள் நம்பினர். கான் துரங்காசியைச் சேர்ந்த ஆர்வலர் ஹாஜி சாஹிப்பின் பஷ்டூன் சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தார் என்ற அடிப்படையில் அவர்களின் குற்றச்சாட்டு இருந்தது, அவர் தானே பிரிட்டிஷாருக்கு எதிராக பல ஸ்தாபன எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தூண்டுவதற்குப் பொறுப்பானவர்.

கான் அப்துல் கஃபர் கான் - குதாய் கித்மத்கர்

ஆரம்பத்தில், பச்சா கானின் குறிக்கோள், பஷ்டூன்களின் சமூக மேம்பாட்டை நோக்கிச் செல்வதாகும், ஏனெனில் கல்வியின் பற்றாக்குறை மற்றும் பல்வேறு பஷ்டூன் குடும்பங்களுக்கு இடையே பல நூற்றாண்டுகளாக நடந்த இரத்தக்களரி சண்டைகள் காரணமாக அவர்கள் பின்தங்கிய நிலையிலேயே இருப்பார்கள் என்பதை அவர் உணர்ந்திருந்தார். காலப்போக்கில், அவர் ஒன்றுபட்ட, சுதந்திரமான, மதச்சார்பற்ற இந்தியாவை உருவாக்குவதற்கு உழைத்தார். இந்த இலக்கை அடைய, அவர் 1920 களில் "சிவப்பு சட்டைகள்" (சுர்க் போஷ்) என்று பொதுவாக அழைக்கப்படும் குதாய் கித்மத்கர் ("கடவுளின் ஊழியர்கள்") ஐ நிறுவினார்.

குதாய் கித்மத்கர் 100,000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களை ஆட்சேர்ப்பு செய்தது, அவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகளை எதிர்ப்பதிலும், அவர்களின் கைகளில் இறப்பதிலும் பிரபலமானவர்கள். வேலைநிறுத்தங்கள், அரசியல் நடவடிக்கைகள் மற்றும் வன்முறையற்ற போராட்டங்கள் மூலம், இந்த அமைப்பு அதிக அரசியல் செல்வாக்கைப் பெற முடிந்தது மற்றும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தின் அரசியல் நிலப்பரப்பில் ஆதிக்கம் செலுத்தியது.

கான் அப்துல் கபார் கான் & பிரிவினை

இந்தியப் பிரிவினையை கான் கடுமையாக எதிர்த்தார் . அவர் முஸ்லிம் விரோதி என்று நம்பியதால், சில அரசியல்வாதிகளால் அவரது தாராளவாத நிலைப்பாட்டிற்காக அவர் தாக்கப்பட்டார். இதன் விளைவாக 1946 இல் பெஷாவரில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

ஜூன் 21, 1947 அன்று, பன்னுவில், பச்சா கான், குதாய் கித்மத்கர்கள், மாகாண சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிற பழங்குடித் தலைவர்கள் அடங்கிய லோயா ஜிர்கா (பஷ்டூன் மொழியில் பிரமாண்டமான கூட்டம்) பிரிவினைக்கு ஏழு வாரங்களுக்கு முன்பு நடைபெற்றது. இந்த ஜிர்காவில், பன்னு தீர்மானம் அறிவிக்கப்பட்டது, அதில் பஷ்டூன் மக்களுக்கு பிரிட்டிஷ் இந்தியாவின் அனைத்து பஷ்டூன் பிரதேசங்களையும் உள்ளடக்கிய பஷ்டூனிஸ்தான் என்ற சுதந்திரமான மாநிலத்தை தேர்வு செய்ய ஒரு தேர்வு வழங்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. இனத்தின் அடிப்படையில் பகுதிகள் வழங்கப்பட்டால் பகுதித் திட்டத்தை அது கடுமையாக பாதிக்கும் என்பதால், ஆங்கிலேயர்கள் இந்தக் கோரிக்கையை பரிசீலிக்கக்கூட மறுத்துவிட்டனர்.

பிரிவினையைத் தவிர்ப்பதற்கான கடைசி முயற்சிகளை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி மறுத்துவிட்டது, உதாரணமாக அமைச்சரவைத் திட்டத் திட்டம் மற்றும் ஜின்னாவுக்கு பிரதமர் பதவியை வழங்க காந்தியின் பரிந்துரை போன்றவை. இதன் காரணமாக, பச்சா கான் பாகிஸ்தான் மற்றும் இந்தியா இரண்டின் கைகளிலும் துரோகம் இழைக்கப்பட்டதாக உணர்ந்தார். அவர் மகாத்மா காந்தியிடமும் காங்கிரஸ் கட்சியிடமும் "நீங்கள் எங்களை ஓநாய்களிடம் தள்ளிவிட்டீர்கள்" என்று மறைமுகமாகக் கூறினார்.



கான் அப்துல் கபார் கான் - கைது மற்றும் நாடு கடத்தல்

பிப்ரவரி 23, 1948 அன்று பாகிஸ்தான் அரசியலமைப்பு சபையின் முதல் அமர்வில் அப்துல் கஃபார் கான் பாகிஸ்தான் தேசத்திற்கு தனது விசுவாசப் பிரமாணத்தை எடுத்துக் கொண்டார்.

புதிய அரசாங்கத்தை முழுமையாக ஆதரிப்பதாக அவர் உறுதியளித்தார், மேலும் கடந்த காலத்தில் பல தகராறுகளைக் கொண்டிருந்த தனது அரசியல் போட்டியாளரான முகமது அலி ஜின்னாவுடன் சமரசம் செய்ய முயன்றார். கராச்சியில் ஜின்னாவுடனான முதல் நேரடி சந்திப்பு நன்றாக நடந்தது, ஆனால் கைபர் பக்துன்வாவின் முதலமைச்சர் அப்துல் கயூம் கான் காஷ்மீரியின் வலியுறுத்தல் காரணமாக இரண்டாவது சந்திப்பு ஒருபோதும் நடக்கவில்லை. வாய்ப்பு கிடைத்தால் ஜின்னாவை கொலை செய்யும் எண்ணம் பச்சா கானுக்கு இருப்பதாக அப்துல் கயூம் வலியுறுத்தினார். பஷ்டூன்களிடையே பச்சா கானின் புகழ் குறித்து அப்துல் கயூம் அதிருப்தி அடைந்து அதைக் குறைமதிப்பிற்கு உட்படுத்த முயன்றதால், இது பெரும்பாலும் வதந்தியின் அடிப்படையில் கூறப்பட்ட குற்றச்சாட்டாக இருக்கலாம்.

பச்சா கான் பாகிஸ்தானின் முதல் தேசிய எதிர்க்கட்சியான பாகிஸ்தான் ஆசாத் கட்சியை மே 8, 1948 அன்று உருவாக்கினார். எதிர்க்கட்சி இயற்கையில் ஆக்கபூர்வமானதாகவும், அதன் சித்தாந்தத்தில் வகுப்புவாதமற்றதாகவும் இருக்கும்.

ஆனால் அவரது விசுவாசம் குறித்த சந்தேகம் தொடர்ந்து நீடித்தது, மேலும் அவர் 1948 முதல் 1954 வரை எந்த குற்றச்சாட்டும் இல்லாமல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

கான் அப்துல் கஃபார் கான் 1988 ஆம் ஆண்டு வீட்டுக் காவலில் இருந்தபோது பெஷாவரில் இறந்தார். அவர் ஆப்கானிஸ்தானின் ஜலாலாபாத்தில் அடக்கம் செய்யப்பட்டார். அவரது இறுதிச் சடங்கில் 200,000 பேர் கலந்து கொண்டனர், மேலும் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி முகமது நஜிபுல்லாவும் இதில் அடங்குவர். பஷ்டூன் ஒருங்கிணைப்பு கனவு அவரை விட நீண்ட காலம் நீடிக்கும் என்பதைக் குறிப்பதால் இது அடையாளமாக இருந்தது.

பஷ்டூன்கள் மத்தியில் அவருக்கு இருந்த நற்பெயர் அந்த அளவுக்கு இருந்ததால், ஆப்கானிஸ்தான் உள்நாட்டுப் போரில் இறுதிச் சடங்கு நடைபெற ஒரு போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது.

கான் அப்துல் கபார் கானின் அரசியல் மரபு

சகோதரத்துவம் மற்றும் அகிம்சை கொள்கைகளின் அடிப்படையில் வாழ்வது என்ற செய்தியைப் பரப்பிய தலைவராக பச்சா கானின் அரசியல் மரபு பஷ்டூன்கள் மற்றும் நவீன இந்தியக் குடியரசில் உள்ளவர்களிடையே புகழ்பெற்றது. இருப்பினும், பாகிஸ்தானுக்குள், முஸ்லிம் லீக்கை விட அகில இந்திய காங்கிரஸுடனான அவரது தொடர்பு மற்றும் ஜின்னாவை எதிர்த்ததன் காரணமாக, சமூகத்தின் பெரும்பான்மையானவர்கள் அவரது உண்மையான விசுவாசத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளனர். குறிப்பாக, பச்சா கானின் மரணத்திற்குப் பிறகு பாகிஸ்தானில் அல்ல, ஆப்கானிஸ்தானில் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தியதைத் தொடர்ந்து, அவரது தேசபக்தி எங்கே இருக்கிறது என்று மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்

# எதிர்காலத்தில் எனக்கு யாருடன் போட்டி? அனிகா சுரேந்திரன் பதில்

குழந்தை நட்சத்திரமாக நடிக்கத் தொடங்கி, தற்போது கதாநாயகியாக கலக்கிக் கொண்டிருப்பவர், அனிகா சுரேந்திரன். தமிழ், தெலுங்கு, மலையாளத்தில் பிசியாக நடித்து வருகிறார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவரிடம், 'உங்களுக்கு எந்த நடிகை எதிர்காலத்தில் போட்டியாக வரக்கூடும்?" என்று கேட்கப்பட்டது.

அதற்கு அனிகா பதிலளிக்கையில், "நான் யாரையும் போட்டியாக நினைக்கவில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை இருக்கும். என்னைவிட திறமைசாலி நடிகைகள் நிறைய இருக்கிறார்கள் என்பதே உண்மை. அப்படித்தான் நான் நினைக்கிறேன். தேவைப்படும் பட்சத்தில் மற்ற நடிகைகளுடன் இணைந்து நடிக்கவும் நான் தயார்.

எனக்குள் எந்த ஈகோவும் கிடையாது" என்றார்.





நடிகை மனீஷா


சன் டிவியில் வெற்றிகரமாக ஒளிபரப்பாகும் டாப் சீரியல்களில் ஒன்று தான் சிங்கப்பெண்ணே.

புதுமுக ஜோடி முக்கிய நடிகர்களாக நடிக்கும் இந்த சீரியலில் ஆனந்தியின் கர்ப்பத்திற்கு யார் காரணம் என்பதை வைத்தே பல மாதங்களாக கதைக்களம் சென்றுகொண்டிருக்கிறது.

ஆனால் உண்மை எப்போது வெளியாகும் என தெரியவில்லை, இதற்கு இடையில் அன்பு அம்மா பிரச்சனை வேறு ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நாம் சிங்கப்பெண்ணே சீரியலில் ஆனந்தியாக நடிக்கும் மனீஷா புது ஹேர் ஸ்டைலில் வெளியிட்ட புகைப்படங்களை காண்போம்.

# விஜய் குறித்து கேள்வி: பதிலளிக்காமல் மவுனமாக நடந்து சென்ற திரிஷா



தமிழக வெற்றிக் கழக தலைவரும், நடிகருமான விஜயின் மனைவி சங்கீதா சமீபத்தில் செங்கல்பட்டு குடும்பநல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், தனது கணவர் விஜயுடன் தான் சேர்ந்துவாழ விரும்பவில்லை. எனவே தங்களுக்கு விவாகரத்து வழங்க வேண்டும். கடந்த 4 ஆண்டாக நடிகை ஒருவருடன் விஜய் தொடர்பில் இருப்பதாகவும், அதனை கண்டித்த பிறகும் மீண்டும் அந்த நடிகையுடன் தொடர்பில் இருந்து வருகிறார் என குற்றம்சாட்டி இருந்தார்.

இதற்கிடையே, திருவான்மியூரில் நடந்த திருமண நிகழ்ச்சி ஒன்றில் நடிகர் விஜயும், நடிகை திரிஷாவும் ஒரே மாதிரி உடைகளை அணிந்துகொண்டு பங்கேற்றது சமூக வலைதளத்தில் பேசுபொருளாக மாறியது.

இந்நிலையில், சென்னையில் இருந்து மும்பை செல்வதற்காக நடிகை திரிஷா சென்னை உள்நாட்டு விமான நிலையம் டெர்மினல் 4 புறப்பாடு பகுதிக்கு வந்தார். அங்கிருந்த பத்திரிகையாளர்கள் அவரிடம், நடிகர் விஜய் தொடர்பான சர்ச்சை குறித்து கேள்வி எழுப்பினர்.

அப்போது, நடிகை திரிஷா எந்த பதிலும் அளிக்காமல் மவுனமாக விறுவிறு என்று நடந்து விமான நிலையத்தின் உள்ளே சென்று விட்டார்.

# கோடையில் திரைக்கு வருகிறது ஒன்ஸ் மோர்

அறிமுக இயக்குநர் விக்னேஷ் ஸ்ரீகாந்த் இயக்கத்தில் அர்ஜுன் தாஸ் மற்றும் அதிதி ஷங்கர் ஆகியோர் முதன்மையான கதாபாத்திரத்தில் நடித்துள்ள திரைப்படம் ஒன்ஸ் மோர்.

அரவிந்த் விஸ்வநாதன் ஒளிப்பதிவு செய்யும் இந்த திரைப்படத்தின் படத்தொகுப்பு பணிகளை நாஷ் மேற்கொள்கிறார். ராஜ் கமல் கலை இயக்கத்தை கவனிக்க, நவா ராஜ்குமார் ஆடை வடிவமைப்பாளராக பணியாற்றியுள்ளார். படத்தின் இசையை ஹேஷம் அப்துல் வஹாப் மேற்கொண்டுள்ளார்.

இவர் இதற்கு முன் ஹ்ருதயம், இனி உதரம், சேஷம் மைக்-இல் ஃபாதிமா, குஷி, ஹை நானா போன்ற பல வெற்றிப் படங்களை இசையமைத்துள்ளார். படத்தின் பாடல்கள் வெளியாகி மக்களின் வரவேற்பை பெற்றுள்ளது.

இதற்கிடையே, ஒன்ஸ் மோர் திரைப்படம் எப்போது வெளியாகும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே ஏற்பட்டது. இந்நிலையில், ஒன்ஸ் மோர் படம் கோடையில் திரைக்கு வரும் என படக்குழு அறிவித்துள்ளது.




சன் தொலைக்காட்சியில் பரபரப்பான கதைக்களத்துடன் ஒளிபரப்பாகும் தொடர்களில் ஒன்று தான் எதிர்நீச்சல் தொடர்கிறது.

சொத்தை வைத்து எல்லோரையும் மிரட்டி வந்த குணசேகரன் இப்போது தம்பிகளுக்கு சொத்தை எழுத்து வைத்துவிட்டு அமைதியாக இருக்கிறார், அதன்பின் என்ன சூழ்ச்சி உள்ளது என்பது தெரியவில்லை.

கதைக்களம் பரபரப்பாக சென்றாலும் இதில் நடிக்கும் நடிகைகள் ரசிகர்களை கவரும் விதவிதமான போட்டோ ஷூட் நடத்திய வண்ணம் உள்ளனர்.

அப்படி தர்ஷினியாக நடிக்கும் மோனிஷா விஜய் கருப்பு நிற உடையில் எடுத்த போட்டோ ஷூட் புகைப்படங்களை பார்ப்போம்.



# ரிவ்யூஸ் பயங்கரமா இருக்கு! கெணத்த காணோம் படக்குழுவுக்கு லோகேஷ் கனகராஜ் வாழ்த்து



இந்தப் படத்தில் ஜார்ஜ் மரியன், ரேச்சல் ரெபெக்கா, ராமகிருஷ்ணன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். ஆர். பி. டாக்கீஸ், பாக்ஸ் ஆபிஸ் ஸ்டுடியோ மற்றும் ஜியோ ஹாட்ஸ்டார் ஆகியவை இணைந்து தயாரித்துள்ள இந்தப் படத்திற்கு வி.தியாகராஜன் ஒளிப்பதிவு செய்துள்ளார். நிவாஸ் கே. பிரசன்னா இசையமைத்துள்ளார்.

'கெணத்த காணோம்' படத்தின் டிரெய்லர் சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது. டிரெய்லர் படத்திற்கான எதிர்பார்ப்பை அதிகப்படுத்திய நிலையில், இந்தப் படம் இன்று திரையரங்குகளில் வெளியானது. பெரும் எதிர்பார்ப்புடன் வெளியான நிலையில், கெணத்த கானோம் திரைப்படம் குறித்து இயக்குநர், நடிகர் லோகேஷ் கணகராஜ் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் படக்குழுவுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்த எக்ஸ் தளப் பதிவில் இயக்குநர் லோகேஷ் கணகராஜ், "கெணத்த கானோம் திரைப்படம் குறித்து நல்ல ரிவ்யூக்களை கேட்டு வருகிறேன். இயக்குநர் சுரேஷ் சங்கையா சார், ரமேஷ் பாபு சார், எஸ்.ஆர். பிரபு சார், யோகி பாபு அண்ணா மற்றும் ஒட்டுமொத்த நடிகர், நடிகையர் மற்றும் படக்குழுவினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள் மற்றும் வாழ்த்துக்கள்," என குறிப்பிட்டுள்ளார்.

# இயக்குநர் ஷங்கரின் வேள்பாரி படத்தில் தனுஷ்?

பாலிவுட் நடிகரிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக தகவல்.

இயக்குநர் ஷங்கர், எழுத்தாளர் மற்றும் எம்.பி. சு. வெங்கடேசன் எழுதிய 'வீரயுக நாயகன் வேள்பாரி' நாவலை திரைப்படமாக்க திட்டமிட்டு பணிகளை முன்னெடுத்து வருகிறார். இந்தப் படத்தில் நடிக்க இருக்கும் நடிகர், நடிகைகள் விவரங்கள் அவ்வப்போது இணையத்தில் வெளியாகி வருகின்றன.

அந்த வகையில், இந்தப் படத்தின் கதாநாயகனாக நடிகர் தனுஷ் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும், தனுஷ் நடிப்பதற்கான பணிகள் கிட்டத்தட்ட இறுதி செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்தின் முக்கிய வேடத்தில் நடிக்க பாலிவுட் நடிகர் விக்கி கௌஷலிடம் பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

சமீபத்தில் அவரது 'Chhaava' பட வெற்றி பெற்றதை அடுத்து, இந்த பீரியட் படம் இந்திய அளவில் கவனம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# தனுஷ் - ஜி.வி. பிரகாஷ் காம்போவில் புது பாடல்



நடிகர் தனுஷ் நடிப்பில் கடைசியாக வெளியான படம் ‘தேரே இஷ்க் மே’. இந்தியில் எடுக்கப்பட்ட இப்படம் தமிழில் வரவேற்பைப் பெறவில்லை என்றாலும், இந்தியில் ரூ.160 கோடிக்கும் அதிகமாக வசூலித்து வெற்றிப் படமானது. தற்போது, தனுஷ் போர் தொழில் இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் நடித்து முடித்துள்ளார்.

இந்தப் படத்தில் நாயகியாக மமிதா பைஜுவும், முக்கிய கதாபாத்திரங்களில் நடிகர்கள் சுராஜ் வெஞ்சரமூடு, ஜெயராம் ஆகியோர் நடித்துள்ளனர். ‘கர’ எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்க தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்தப் படத்தை வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் சார்பில் ஐசரி கணேஷ் தயாரித்துள்ளார்.

இந்தப் படத்திற்கான படப்பிடிப்பு பணிகள் நிறைவடைந்த நிலையில், வெளியீட்டிற்கான பின்னணி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இந்தப் படம் வருகிற ஏப்ரல் 30-ஆம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது. இந்த நிலையில், கர படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் நாளை மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு தெரிவித்துள்ளது. மேலும், இந்தப் படத்தின் புதிய போஸ்டரையும் படக்குழு பகிர்ந்துள்ளது.

யாஷிகா ஆனந்த் என்றாலே அவரது கவர்ச்சி புகைப்படங்கள் தான் எல்லோரது நினைவுக்கு வரும். படங்களில் கவர்ச்சியாக நடிப்பதை தாண்டி அவர் இன்ஸ்டாக்ராமில் வெளியிட்டு வரும் கவர்ச்சி புகைப்படங்கள் அந்த அளவுக்கு வைரல் ஆகின்றன.

தற்போது யாஷிகா வேற லெவல் கவர்ச்சி உடையில் போஸ் கொடுத்து புகைப்படங்களை வெளியிட்டு இருக்கிறார். அது ரசிகர்களை கவர்ந்து வருகிறது. எப்படி இருக்கிறார் என ஸ்டில்களை பாருங்க.



# கொலைச்சேவல்- திரைவிமர்சனம்




நாயகன் கலையரசனும்- நாயகி தீபா பாலுவும் காதலித்து பெற்றோரின் எதிர்ப்பை மீறி திருமணம் செய்துக் கொள்கின்றனர். வெளியூரில் அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வருகிறார்கள்.

நிறைமாத கர்ப்பிணியாக இருக்கும் தீபா பாலுவும், கலையரசனும் நிறைசூலி தெய்வதற்த்திற்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்தால் குழந்தை நல்லபடியாக பிறக்கும் என்பதால் இருவரும் தங்களது ஊருக்கு திரும்புகிறார்கள்.

குலதெய்வத்தை வணங்க சென்றாலும், மனதுக்குள் ஒருவித பயத்துடனும், பதற்றத்துடனும் செல்லும் தீபா பாலு, எதிர்பாக்காத பிரச்சனை ஒன்றை எதிர்கொள்கிறார்.

சாமி கும்பிட்டு வீடு திரும்ப நினைக்கும் கலையரசன் தீபாவை சுற்றி திடுக்கிடும் சம்பவங்கள் அரங்கேறுகிறது. அந்த அபாயத்தில் இருந்து அவர்கள் மீண்டார்களா, இல்லையா? என்பதே படத்தின் மீதி கதை.

**நடிகர்கள் :** தனது எதார்த்தமான நடிப்பு மற்றுரும் கடுமையான உழைப்பாலும் கதைக்கு பெரும் வலிமை சேர்த்திருக்கிறார் நாயகன் கலையரசன். கதாநாயகியாக நடித்திருக்கும் அறிமுக நடிகை தீபா பாலு, குடும்ப பாங்கான முகத்தோடு வலம் வருகிறார். அவர், இதயம் கனக்க செய்யும் நடிப்பை வெளிப்படுத்தி பார்வையாளர்களை கண்கலங்க வைக்கிறார்.

கடினமான காட்சிகளில் அதிகமாக மெனக்கெட்டு நடித்திருக்கும் அவருக்கு தனி பாராட்டுகள். பால சரவணன் குணச்சித்திர நடிகராக நடிப்பில் முத்திரை பதித்திருக்கிறார்.

**இயக்கம் :** சமூகத்தில் நடந்துக் கொண்டிருக்கும் கொடூரமான செயலை மையக்கருவாகக் கொண்டு, அதை எதார்த்தமான முறையில் திரைப்படமாக்கியிருக்கிறார் இயக்குநர் வி.ஆர்.துதிவாணன். காதல் ஜோடி அனுபவிக்கும் வலியும், வேதனையும் மிக்கதாக காட்சிப்படுத்தியிருக்கிறார்.

உணர்வுப்பூர்வமான காதல் தம்பதிக்கு இறுதியில் நடக்கும் விபரீதம் வன்முறையின் உச்சமாக இருக்கிறது. கிளைமேக்ஸ் காட்சிகள் சற்று முகம் சுழிக்க வைக்கிறது.

**ஒளிப்பதிவு :** பி.ஜி. முத்தையாவின் ஒளிப்பதிவு கிராமத்து அழகையும், மக்களின் கொடூரமான மனங்களையும் எதார்த்தமாக காட்சிப்படுத்தியிருக்கிறது.

**இசை:** சாந்தன் இசையமைப்பில் பாடல்கள் மற்றும் பின்னணி இசை உயிரூட்டும் வகையில் உள்ளது. **ரேட்டிங்-2.5/5**

# என்னைவிட தனுஷ் கென்-ஐ அதிகம் நம்பினார் - வெற்றி மாறன்

‘அசுரன்’, ‘விடுதலை 2’ திரைப்படங்களின் மூலம் தமிழ் சினிமாவில் நடிகராக அறிமுகமானவர் கென் கருணாஸ். நடிப்பை கடந்து கென் கருணாஸ் "யூத்" திரைப்படம் மூலம் இயக்குநராக அறிமுகமாகிறார். இந்தப் படம் மார்ச் 19-ஆம் தேதி வெளியாகிறது. யூத் திரைப்படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைத்துள்ளார். ‘யூத்’ திரைப்படத்தை பார்வதா என்டர்மெய்ன்மென்ட் நிறுவனம் சார்பில் கருப்பையா சி. ராம் தயாரித்துள்ளார். தேவதர்ஷினி மற்றும் சுராஜ் வெஞ்சாரமூடு ஆகியோர் இந்தப் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்தப் படம், பள்ளிக்கூட பின்னணியில் உருவாகியுள்ளது.

இந்த நிலையில், யூத் திரைப்படத்தின் ப்ரீ-ரிலீஸ் நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய இயக்குநர் வெற்றி மாறன், "இவ்வளவு பாசிட்டிவாக ஒரு முழு யூனிட்டாக வேலை செய்வது எல்லா படங்களிலும் நடக்காது. சில படங்களுக்கே அது அமையும். ஒரு டீம் இப்படியாக ஒன்றுபடுவதற்கு முக்கிய காரணம் அந்த படத்தை வழிநடத்தும் இயக்குநரின் நம்பிக்கையும் மனநிலையும் தான்.

கென்னுக்கு என் வாழ்த்துக்கள். கென் கதை சொல்லிய விதம் மிகவும் சிறப்பாக இருந்தது, ஒவ்வொரு காட்சிக்கும் இசை மற்றும் உணர்வுகளை இணைத்து மிகவும் மெட்டிக்குலஸாக கதையை விளக்கினார். கென் ஒரு நடிகராகவும், இயக்குநராகவும் தானாக உருவான ஒருவராக இருக்கிறார். அவருக்கு தனுஷ் அளித்த நம்பிக்கையும் ஆதரவும் அவருக்கு பெரிய தைரியம் கொடுத்துள்ளது. என்னைவிட தனுஷ் அவரை அதிகம் நம்பினார், செதுக்கி இருக்கிறார். கருணாஸ் மற்றும் கிரேஸ் அவர்களுக்கு இது மிகவும் பெருமையான தருணம். இந்த ’யூத்’ படம் கண்டிப்பாக நல்ல வெற்றி பெறும் என்று நம்புகிறேன். வாழ்த்துக்கள்," என்றார்.





# விஜய் சேதுபதியின் ‘காட்டான்’ டிரெய்லர் வெளியானது!




மார்ச் 27 –ல் வெப் சீரிஸ் வெளியாகிறது.

விஜய் சேதுபதி சொந்த தயாரிப்பு நிறுவனம்மூலம் படத்தை தயாரித்துள்ளார்.

ஆண்டவன் கட்டளை’ மற்றும் ’கடைசி விவசாயி’ படங்களுக்குப் பிறகு விஜய் சேதுபதி மற்றும் மணிகண்டன் கூட்டணியில் புதிதாக உருவாகியுள்ள தமிழ் வெப் சீரிஸ் ’முத்து என்கிற காட்டான்’.

விஜய் சேதுபதி தனது சொந்த தயாரிப்பு நிறுவனமான ’விஜய் சேதுபதி புரொடக்ஷன்ஸ்’ மூலம் இதைத் தயாரித்துள்ளார். விஜய் சேதுபதியுடன் மிலிந்த் சோமன், சுதேவ் நாயர், வடிவேல் முருகன் மற்றும் பிக் பாஸ் புகழ் வி.ஜே. பார்வதி ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இத்தொடர் மார்ச் 27ஆம் தேதி வெளியாகும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இத்தொடரின் டிரெய்லர் வெளியாகி உள்ளது.



சீரியல் பிரபலங்கள் தங்களது லேட்டஸ்ட் போட்டோஷூட்களை இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவ்வப்போது பதிவு செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். அந்த புகைப்படங்கள் உடனடியாக ரசிகர்கள் மத்தியில் வைரலாகும்.

அந்த வகையில், சின்னத்திரையில் மிகவும் பிரபலமான நடிகையாக இருக்கும் ஜனனி அசோக் குமார், சமீபத்தில் புடவையில் எடுத்துக்கொண்ட அழகிய போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# எம்.ஜி.ஆர். குறித்த பேச்சுக்கு மன்னிப்புக் கோரினார் நடிகர் ராஜேந்திர பிரசாத்!





நாசர் கண்டனம் தெரிவித்திருந்தார்.

இந்த தவறை மீண்டும் செய்யமாட்டேன் என உறுதியளிக்கிறேன்

அண்மையில் தெலுங்கு நடிகர் காந்தா ராவ்வின் நினைவு விருது வழங்கும் விழாவில் பேசிய அவர், காந்தா ராவின் வாள் சண்டை மற்றும் நடிப்பைப் பார்த்து எம்.ஜி.ஆர் பயந்ததாகவும், "காந்தா ராவைப் பார்த்தாலே எம்.ஜி.ஆர் தன் பேண்ட்டிலேயே சிறுநீர் கழித்து விடுவார்" என்ற பொருளில் பேசியிருந்தார்.

இவரின் இந்தக் கருத்துக்கு தமிழ் திரையுலகினர் பலரும் கண்டனம் தெரிவித்தனர். மேலும் தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் நாசர், இதுதொடர்பாக ராஜேந்திர பிரசாத் மனிதிலிருந்து மன்னிப்புக் கோரவேண்டும் என தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த விவகாரத்தில் நடிகர் ராஜேந்திர பிரசாத் மன்னிப்புக் கோரியுள்ளார். இதுதொடர்பாக வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ள அவர், "எம்.ஜி.ஆர். தமிழ் சினிமாவின் கடவுள் போன்றவர். காந்த ராவ் சாரை புகழ்ந்து பேசும்போது, நான் தவறுதலாக எம்ஜிஆர் சாரை பற்றி ஒரு ஆட்சேபகரமான வார்த்தையைப் பயன்படுத்தினேன். இதற்காகத் தமிழ் மக்களிடமும் எம்.ஜி.ஆர் ரசிகர்களிடமும் மனதார மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன். இந்த தவறை மீண்டும் செய்யமாட்டேன் என உறுதியளிக்கிறேன்’ என தெரிவித்துள்ளார்.




### மாற்றம் !


"வீட்டில் சமையல்
எண்ணெய் தீர்ந்து விட்டது
"
என்று மனைவி
சொன்னபோது...
"பணம் என்ன எனக்கு
மரத்திலயா காய்க்குது
தினமும் எண்ணெய்
வாங்க !" என்று கடிந்து
கொள்ளும்... கணவனே

"மச்சான் செலவு
பத்தி கவலைப்படாத
இன்னைக்கு சரக்கு



அடிக்கிறோம்
சந்தோசமா
இருக்கறோம்
!" என்று
உருமாற்றம்
ஆகிறான்
டாஸ்மாக்
பாரில்!

**எம்.பி.தினேஷ்.** கோவை



நான் கண்ணாடி
பார்க்கிறேன் ஏனோ
நீயே தெரிகிறாய்
என்னை நானே தொலைத்து
விட்டேன் ஏனோ
புரியும் போது நானே
நீயாய் மாறி நிற்கிறேன்
இது காதலா என
தெரியும் முன்பே
என்னை நானே கடந்து
விட்டேன் இது விதி என
சொல்லி சதியிடம் மாட்டி
கொண்டேன் தேவதை
இவளோ என எண்ணி
இராட்சசியிடம் என்னை
கொடுத்து விட்டேன்
திரும்ப எழுவேனோ என
தெரியவில்லை இருந்தும்
எனக்குள் பயமில்லை
இவள் எனக்குள் எப்போதோ
வந்து விட்டாள் என்னையே
என் மூலம் கொன்று
விட்டாள் ஓ இது தான்
காதலா என் காதலா
நீ மோதல் தந்தாலும்
உன்னால் சாதல் வரம்
தானடி தவம் கூட
இருப்பேன் இன்னொரு
ஜென்மம் உன் காதல்
வேண்டி

**லி.நௌஷாத் கான்**



### பாசம்

தோள் மீது அமர்ந்த மகள்
வானத்தையே வசப்படுத்தி
விட்டதாக பெருமை பொங்க



மகளை
நோக்கும்
அப்பா.

**ஜயந்தி சிவக்குமார்**
திருச்சி.

### வாழ்க்கை

கணக்கற்ற கணங்கள்
கண்ணீர் சிந்தியதாக
கவலைப் படுகிறோம்.



ஆனால்
கலந்திருந்தது
அதில்
ஆனந்தக்
கண்ணீரும்!
ஏனந்த
உண்மையை
மறந்துவிட்டோம்?

**கே. பி. ஜனார்த்தனன்**

என் தடங்களைப்
பதித்துத்தான்
செல்கிறேன்.. ஆளற்ற
பாலைவனமாயினும்..
பின்னொரு நாளில்
யாரேனும் வாசிக்கக் கூடும்..
வரிகளில் புதைந்த
என் அன்பை.

இன்னும் கொஞ்சம்
இன்னும் கொஞ்சம் என்று
நகர்ந்து பூமியின்
விளிம்பைத்தொட்டபோதுதான்
நீ எனக்குஅறிமுகமானாய்...



இன்னொரு
முறை பூமி
எனக்காகச்
சுழல
ஆரம்பித்தது !

**ரிஷபன்**

என்னக் கூப்பிடுங்க
என்னக் கூப்பிடுங்க
படுக்கையில் கிடந்து
புலம்புகிறாள் அம்மா
அப்பா புகைப்படத்தைப்
பார்த்து.. ஆனால் அப்பா
படுக்கையில் கிடந்து
அழைப்பதற்கு
அன்று யாருமில்லை..

அம்மாவுக்கு வாய்த்தது
அப்பாவுக்கு
வாய்க்கவில்லை..

மரணத்திற்கும்
கொடுப்பினை வேண்டும்..

இருப்பது ஒரு வீடு
பாகம் ஏழு பேருக்கு
அம்மா உட்பட..

எல்லாரும் ஒரே முடிவுதான்
வீடில்லாத கடைசித்
தம்பிக்கு எழுதிக் கொடுத்து
விடலாம் என்று..

அம்மாவுக்கு அத்தனை
மகிழ்ச்சி.. முடிவில்..



தம்பி
கேட்டான்,

அம்மாவை யார்
வச்சுக்கப்
போறீங்க?

**ஹரணி**, தஞ்சாவூர்



### சுயசார்பு....

உன்னிடம் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட...
பேரன்பு..

உன் நிலைமாற்றத்தில் தடை
செய்யப்படும்...போது....
தான்...புரிபடுகிறது...

உன் இல்லாமையையும்
பழகியிருக்க வேண்டும்
நான்..என்பதனை...

### தலைகீழ் விகிதம்...

முழுநிலவாய் பிரகாசித்துக்
கொண்டிருந்த... என்



மனவானை...

கரும் புகைமூ
ட்டமாய்நிலை
மாற்றிவிட்டா
ய்... சந்திக்க
மறுத்து...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி

### கூனுதல் அகற்று.!

அங்கே.. கூனர்களும்
நிமிரட்டும்!
இது கவிஞனின் அழைப்பு.!
கூனரெல்லாம்.. ஊனரல்ல
மனிதனின் நினைப்பு!
காணுகின்ற ஊனரெல்லாம்
கடவுளின் படைப்பு.!
அந்த கூனங்களை
அகற்றுவதே மனிதனின்
பொறுப்பு!

தோணுவதைப் பாடுவதே
கவிஞனின் பாட்டு..!
இங்கே.. ஏனென்ற
கேள்வியினை மனதினில்
கேட்டு! ஊனங்களை
அகற்றிடவே மாந்தரைக்
கூட்டு.. இது
மனிதாபிமானமுடை.ய நம்
புறப் பாட்டு.!

ஊனங்களை இழிவாக
நினைப்பதை அகற்று !
கூனர்களை மாற்றும் வழி
செயலினில் காட்டு!
நீ.. வீனாகப் பிறக்கவில்லை..
இதை நினைவூட்டு.!
கூனுதலை அகற்றும் வரை
களத்தில் நிலை நாட்டு!

மனிதன் போல
வாழ்வதுதான்
வாழ்க்கையாகுமா?
மனிதாபி மானமின்றி
வாழ முடியுமா?
கூனமின்றி வாழுவோம்!
கூனுதலை அகற்றுவோம்!
யானும் ஒரு மனிதனென்று
வாழ்க்கையில் நிலை
நாட்டுவோம்.!

**வே.கல்யாண்குமார்.**

### சாபமும் வரமும்

பசையிருந்தால் பகைவரும்
கூட வந்து ஒட்டிக் கொள்வர்

பேரிடர் வந்தால் நெருங்கிய
நண்பனும் எட்டிப் போவான்

தவறே புரிந்தாலும் உறவுகள்
தட்டிக் கேட்காது
கண்டிக்காது

தீவிர காமக் கிறுக்கனை
வளர விட்டு உச்சத்தில்
மாதர் அமைப்பு நசுக்கும்



தட்டிக்
கேட்காத
பட்சத்தில்
தெய்வம் நின்று
கொல்லும்

**பி. பழனி,**
சென்னை.

### சூழ்நிலை கைதி

நல்ல மேய்ப்பரிடமிருந்து
தப்பியோடும் ஆடுகள்
பாவம் கசாப்கடைக்
காரனை நம்பியே
பயணிக்கிறது,,,

மேய்ப்பரை நினைத்து
மகிழ்வதா,,,? ஆடுகளை
நினைத்து வருந்துவதா,,?

### நம்பிக்கையோடு போராடு

நாம் பிறக்கும்போது
பணிக்குடம் உடைகிறது,
இறக்கும்போது
மண்குடம் உடைகிறது,
இடையில்தான் வாழ்க்கை
நடக்கிறது, இதில் ஏன் ?
சிறுப்பிரச்சனைகளுக்கும்
மனசு உடைகிறோம்
நம்பிக்கையோடு




போராடுவோம்
நாளைய
வெற்றிகள்
நம்மோடு.

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

### யாத்திரை

உடல் செய்திடும் நித்திரை,
மனம் செய்திடும் யாத்திரை,
நிறைவான இந்த இரு
நிலை, நிலவாகும் ஒரு
வளர்பிறை, சுடரைச் சுற்றும்
ஒளிவட்டம், இருளை
விரட்டி வழிகாட்டும், உன்
நினைவை அழுத்தும்
நிழலாட்டம், யாத்திரை சுடர்
முன் கைகட்டும், யாத்திரை
என்பது பெரும் வரம், நம்
சிந்தனை அதனால் பலம்



பெறும்,
அமைதியை
மனதில்
நிரந்தரம்,
செய்திடும்
யாத்திரை
நலம்தரும்.

**எஸ். தயாளன்** காட்பாடி



### மலரினும் மென்மை பெண்மை

மணமுள்ள மலருக்கு
மனமில்லை, மனமுள்ள
பெண்மைக்கு மணமுண்டு.

எழிலுள்ள மலருக்கு
விழியில்லை, விழியுள்ள
பெண்மைக்கு எழிலுண்டு.

தேனுண்ண மலரிதழில்
இடமுண்டு, பெண்ணிதழில்
தேன்தமிழின் வளமுண்டு.
தென்றல் வழிகண்டுவிடும்
மலருண்டு, தென்றல்
விழி கொண்டவளாய்ப்
பெண்ணுண்டு.

மலர்முகத்தில் எழிலாக
நிறமுண்டு, பெண் அகத்தில்
நிறமாக, அறமுண்டு.

மலராகும் மொட்டுக்கு
மதிப்புண்டு, மலரினும்
பெண்மைக்குச் சிறப்புண்டு.

மண்மீது மலர்கோடி
மலர்ந்தாலும், மங்கையின்
குழலேறி அமர்ந்தாலும்,
மனமுள்ள பெண்மைக்கே
மணமுண்டு.



விழியுள்ள
பெண்மைக்கே
எழிலுண்டு.

**எஸ். சந்திரசேகரன் அமுதா**
செஞ்சிக்கோட்டை.

### மகளிர் தினத்தில் ஒரு மகளின் குரல்

கட்டிலில் முடிந்த பின்னர்
காலடி மிதித்தீர், நீங்கள்
தொட்டிலை ஆட்டிக்
கொண்டே தொடைகளை
கிள்ளும் அந்த 'கட்டமைப்
புடைத்தோம் அந்தக்
காலத்தை கவிழ்த்தோம்
இந்த மட்டிலே உலகம்
போற்றும் மகளிர் தினம்
கண்டோம் பட்டமும் பதவி
பெற்றோம் பல்கலை



தலைமை
ஏற்றோம்
கட்டுப்பா
டோடு பண்பு
கண்ணியம்
காத்தோம்
வீட்டைக்கட்டியும்
காப்போம்
உங்கள் கண்களாய்
விளங்குகின்றோம்.

**பரிபூரணன்,** குடந்தை

### நம்பு ...நடக்கும்

நம்பு... மண்ணுக்குள்
புதைத்த விதை விருட்சமாக
வளர்வது உண்மை என்றால்
நீயும் வளர்வாய் என நம்பு ...
ஒரே நாளில் மாற்றம் வராது...
வந்து விடும் என்று நம்பிவிடு
மன உறுதியுடன் மனதில்
வேண்டிய தீபம் ஏற்றினால்
நடந்து விடுமே.... நிழல்
என நினைத்ததெல்லாம்
நிஜமாக நடக்கும்.... தெரியும்
பாதையில் நம்பிக்கையுடன்
நடந்து விடு.... கனவில்லை
நினைவு தான் என்று
நிஜமாக நடந்து விடு.....
உள்ளத்தின் உறுதியே
உன்னை வாழவைக்கும் என
நம்பி விடு.... ஒவ்வொரு
விடியலும் இனி வெற்றி தான்
என நம்பி விடு.....
நம்பிய எந்த செயலும்
தாமதமாகலாமே தவிர



தோல்வியே
இல்லை....
நினைத்தது
நடக்கும் என்று
நம்பிவிடு....

**உஷா முத்துராமன்**

### ஆசை

மனக்கடலில் ஆசை
அலைகள் ஓசை இன்றி
அலை மோதுகின்றன!
ஆடம்பரமாய்
இருந்தவையெல்லாம்
இன்று அத்தியாவசியமாக
அவதரித்து வருகின்றன!

அறுசுவை உணவெல்லாம்
அறுநூறு வகைச்
சுவைகளாய் மாறி
வருவதால் உமிழ்நீர்
சுரக்கிறது இன்சுலின்
வற்றிவிடுகிறது!

தேகத்தை அலங்கரிப்பதற்கு
ஆபரணங்கள் என்பது போய்
பலருக்கு நடமாடும்
நகைக்கடைகளாய்
உலா வர ஆசை!

சக்கரவர்த்தி மகாபலிக்கே
தானம் தந்திடவேண்டுமென்ற
மண்ணாசை பலருக்கு!
குபேரனுக்கே கடன்
தந்திட வேண்டுமென்ற
பணத்தாசை பலருக்கு!

அசோகவனம் போன்ற
அந்தப்புரங்கள் பலருக்கு
இல்லாமல் இருக்கலாம்
இதயத்தில் எத்தனையோ
கனவுக்கன்னிகள்
பவனி வருகிறார்கள்!

போதிமரத்தடியில்
தவமிருந்த மெய்ஞான
மருத்துவன் துன்ப நோய்க்கு
அறிகுறி ஆசை என்பதை
அடையாளப்படுத்தியும்
நித்திரையிலேயே பலர்
நித்திய வாழ்வினை
தேடுகிறார்கள்!

சபிக்கப்பட்டிருந்தாலும்
வரம் கொடுப்பதைப்போல்
கேட்கப்படுகிறது
தூக்குத்தண்டனைக்
கைதியிடமும் இறுதி
ஆசை என்னவென்று!

இங்கே இதய அட்சய
பாத்திரத்தில் அளவான
ஆசைகள்
அமுதசுரபியாகட்டும்



பேராசை
யென்னும்
நஞ்சு சுரந்திட
வேண்டாம்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

### சிறுநீரகத்தைச் சீர்மையுடன் காப்போம்!

நேரிசை வெண்பா!

சிறுநீரகத்தின்
ஆரோக்கியத்தைச்சீர்மை
'பெறவே விழிப்புணர்வைப்
பீடு.. சிறக்கவே
காணல் நலமே கனிவாக
எந்நாளும் பேணல்
பொலிவே புரி!

சிறுநீரால் காண்கின்ற
சீரிலா நோயை
அறிந்துடன் காத்தே
அழகாய்ச்... சிறப்பாகச்

செம்மைப் படுத்திடச்
சீராய் உழைப்பமே
இம்மை உலகில் இனிது!


### அச்சமின்றி வாழ்தல் அழகு!

அறுசீர் மண்டிலம்.

அச்சமின்றி வாழ்தல்
நன்று அஞ்சாமல் வாழ்தல்
நன்று இச்சையினை நீக்கல்
நன்று ஈகையினைக்
கொள்ளல் நன்று!
நச்சரிப்பு இன்றி வாழ்தல்
நாளும்தான் நன்று நன்று
உச்சத்தில் வாழ்ந்திட்டாலும்
உன்னதமாய் வாழ்தல்
நன்று!

யாருக்கும் அஞ்ச
வேண்டாம் யாரிடமும்
அச்சம் வேண்டாம் சீருடன்
வாழ்ந்திட்டாலே
செழிப்பன்றோ தானாய்
நிற்கும்! ஊருடன் ஒத்து
வாழ்ந்தால் ஒழுங்கான
வாழ்வே காணும் பேருடனே
புகழும் கிட்டும் பீடில்லா
அச்சம் நீக்கு!

**முனைவர் இராம.வேதநாயகம்**



### நிழல் தரும் மரம்

சுட்டெரிக்கும் வெயிலுக்கு
சுகமான குடை நீ !

களைத்தவர்க்கு இளைப்பாறக்
கிடைக்கும் நிழல் நீ!

வண்ணப் பறவைகளில்
வாடகை இல்லாத வீடு நீ!

மண்ணின் தாகம் தீர்க்கும்
மழையின் தூது நீ!

பயன் கருதாது
வாரி வழங்கும் தர்மம் நீ!

கிளைகள் விரித்தக்
கருணையின் கரம் நீ!

வழிப்போக்கர் வியர்வை
துடைக்கும் துணி நீ!

கல்லடி பட்டாலும் கனிதரும்
இதயம் நீ!

காற்றுக்கு உயிர் தரும்
உன்னத மூச்சு நீ!

வீட்டிற்கு ஒரு மரம்
வளர்ப்போம் !

நாட்டின் வளம்
பெருக்குவோம்!

தூய்மையான
சுவாச காற்று நீ!

பசுமை போர்வையை விரித்து
வெயிலின் தகிப்பைத்
தின்றுவிட்டு குளிர்ச்சி
தந்து காக்கும்
அன்னையே நீ !

வேர்கள் நிலத்தை
தழுவிக் கொள்ள விழுதுகள்
மண்ணைக் காக்கும்
அரண் நீ !
இலைகள் அசைந்து பாடும்
பாட்டில்
இளைப்பாறும் உயிர்களின்
ஆறுதல் நீ!

ஆரவாரவம் இன்றி
ஆக்சிஜனையும் நிழலையும்
வாரி வழங்கும் மரம் நீ!

சொல்லை விடச் செயலே
மேலானது என்ற உண்மையை
உணர்த்தும் நீ !

ஆழமான வேர்களுடன்
அகன்ற இலைகளுடன்
மற்றவர்களுக்கு நிழல்
தருவாய் நீ!

மரம் தனக்கு நீர்
ஊற்றியவனுக்கும் நிழல் தரும்!

தன்னை வெட்ட
வந்தவனுக்கும் நிழல்தரும் !

தலைமுறைகளை கடந்தும்
அழையாமல் நின்று
வரலாற்றைச் சுமக்கும்
பச்சை ஞானி!


நாளை இருப்போமா என
தெரியாது ஆனால் இன்று
நிழல் விதைக்கும்!


சொல்லாதே செய்துவிடு
பிறர் உன்னை சொல்லிக்
கொண்டிருப்பார்கள் !



கேட்காமலே காயையும்
கனியையும் கொடுக்கும்
தர்ம பிரபு நீ !

**பெ.திருமுகம்** ஆசிரியர்
மணமேல்குடி




## நூல் விமர்சனம்

நூலின் பெயர்: நதிகள் செய்பவன்
ஆசிரியர்: மு. முபாரக்
விலை : ₹180
வெளியீடு : ஓவியா பதிப்பகம்
தொடர்புக்கு : 76675 57114

என் இனிய நண்பர் மு.முபாரக் எழுதிய 2 வது கவிதைத் தொகுப்பு.

தொடுதிரை அலைபேசி வரும் முன்பே நட்பான இவரை இக்கவிதை நூல் வெளியீடு விழாவில் தான் பல ஆண்டுகளுக்கு பிறகு சந்தித்தேன்.

இதிலிருந்து சில பி(ப)டித்த கவிதைகள் உங்கள் பார்வைக்கு:

பெரும் பூகம்பத்தை சாதாரணமாய் சொல்லிப் போகிறார்கள்.... மௌன மாயிருக்கிறார்களென! இதைப் படித்ததும் குஜராத் பூகம்பம் பற்றி கவிஞர் வாலி எழுதிய கவிதை நினைவிற்கு வந்தது: இவர்கள் கண்மூடியதால் மண் மூடியவர்கள் அல்ல மண் மூடியதால் கண்மூடியவர்கள்.....

உடைந்தோ உடையாமலோ ஒரு பொம்மை தேவைப்படுகிறது - குழந்தைகளைப் பற்றி கவிதை எழுதப் போகிறேன்! மான் குட்டிக்கு சிறகுகள் வரைந்து பறவையாக்குகிறான்.. மகன், புலி துரத்தும் போதெல்லாம் பறந்து தப்பித்துப் போகட்டுமென! எல்லோரையும் ஏமாற்ற வேண்டுமென நினைப்பவன் சாமியராகி விடுகிறான்.. எல்லோரிடமும் ஏமாந்தவன் ஞானியாகி விடுகிறான்! முபாரக் பாய் முபாரக் ஹோ!(வாழ்த்துகள் .

**ஸ்ரீகாந்த் திருச்சி**




## வெறியால் உயிர்நீத்த நீ வருவாயா...

அன்னமும் தண்ணீரும்
போட்டு வளர்த்தேன்.
கிண்ணத்தில் பாலினை
ஊற்றி வளர்த்தேன்.
நாய் என்றும் பாராமல்
அன்பை கொடுத்தேன்.
தாய் ஈன்ற குட்டிக்கும்
உணவளித்தேன்.
குட்டிகள் இறந்ததால்
குழம்பி நின்றாய்.
மொட்டுக்கள்
உதிர்ந்ததால்
புலம்பி குரைத்தாய்.
வெளிக்காட்டா வேதனை
வெறியாய் மாற...
நன்றியினை நீ மறந்து
வெறி கொண்டாட...
கோழி, ஆடு,மாடு
எல்லாம்
குதறி விளையாட...
வளப்போரும் வருவோரும்
பயத்தினில் திண்டாட...
வயிறார உணவிட்ட என்னை
வயற்றில் கடித்தாய்...
கை கொண்டு தழுவியதால்
கையில் கடித்தாய்...
நிதானம் இழுந்ததால் நீ
தானம் மறந்தாய்...
வெறிகொண்டு திரிந்ததால்
உயிர் இன்று நீ துறந்தாய்!
உன் நினைவில்



வாடுகின்றேன்.
என் கனவில்
தேடுகின்றேன்.
மீண்டும் அழகிய
குட்டியாய்
நீ வருவாயா....

**கவிஞர் பொன்.**
**பனகல் பொன்னையா.**



ஸ்ரீமதி ஸ்ரீமதி நீ தானடி
என் வான் மதி
ஸ்ரீ மதி ஸ்ரீ மதி நீ தானடி
என் காதல் மதி
ஸ்ரீமதி ஸ்ரீமதி நான் எழுதும்
ஸ்ரீராமஜெயம் நீ தானடி
நான் சுவாசிக்கும் ஆக்சிஜன்



நீயடி
நான் நேசிக்கும்
வேக்ஸினேஷன்
நீயடி
ஸ்ரீ மதி ஸ்ரீமதி
நீயே என்
உயிரடி
நீ இல்லையேல் நான் ஏதடி?!

**லி.நௌஷாத் கான்**

## சண்டை !.

தெருவில் நடந்த சிறு
சண்டை பெரும் மோதலாகி
" போடா, இவனே அவனே..
!".என்று திட்டுகையில்
திரும்பி பார்க்காதவர்கள்...

" போடா குடிகார பயலே...!"
என்று அவன் பொத்தாம்
பொதுவாக திட்டுகையில்...
அதைக் கேட்கும்



ஒவ்வொரு
ஆணுக்குள்ளும்
கோபம்
கொப்பளித்துக்
கொண்டு
வருவதே
வாழ்வின்
டிசைன் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

## முகில்

வானத்தில் மிதக்கும்
வெண்மையான புகை
மண்டலம். மழையைத்
தாங்கி கீழ்நோக்கிக்
கொணரும் இயற்கையின்
நண்பன். தினகரன்
கதிர்களை மறைத்து நிழல்
தரும் சோலை.
பூமிக்குத் தண்ணீர் தரும்
கருணை உள்ளம்.
காற்றுடன் விளையாடும்
குழந்தை. நீல வானத்தில்
ஓவியம் வரையும்.
சில நேரம் கருமையாகக்
கோபம் கொள்ளும்.
அடுத்த கணம் மழையாகக்
கொட்டி நம்மை மகிழ
வைக்கும். முகில் இல்லாமல்



வானம்
வெறுமையாகும்.
முகில்
இருந்தால்
பூமி
மகிழ்ச்சியுறும்.

**உ.மு.ந.ராசன்**
**கலாமணி**
கோயம்புத்தூர்.



## சுருக்கம் !

சுருங்கிப்போன ஆடைகளை
சுருக்கம் இல்லாமல் தேய்த்து
தரும். மூதாட்டியின் முகம்
எங்கும் உள்ள வயதின்
முதுமை சுருக்கத்தை எப்படி
நீக்குவது !

**எம்.பி.தினேஷ்.**
கோவை




## குறுங்கவிதை

நம்ம கேஸ் அடுப்பு
அணைந்தப்பிறகு தான்



ஞாபகம்
வருகிறது
அண்டைநாடு
எரிவது.

**நாகை**
**ஆசைத்தம்பி**
கோவை



## எனக்கு பிடிக்குமடி !

மழைச்சாரலில் உன்னோடு
நடப்பது பிடிக்கும்...
ஒரு குடையின் கீழ் நரம்
இணைந்து நடப்பதால் !

உச்சி வெயிலில் உன்னோடு
நடப்பது பிடிக்கும்....
என் நிழல் உன் நிழலோடு
இணைந்து பயணிப்பதால்....

இரவில் நடப்பது பிடிக்கும்...
நிலவை விட உன் முகம்
பிரகாசிப்பதால்...

உன் பெயர் எழுதி
கொண்டே இருப்பது
பிடிக்கும்...அது கவிதையாகி
விடுவதால் !

**எம்.பி.தினேஷ்.**கோவை



## ஆலமரத்து ஊஞ்சலிலே

ஆலமரத்து ஊஞ்சலிலே
ஆடும் மாலையிலே

மண் வாசம் மனதை
மயக்குதே

பால்நிலா பாதம்
நனைத்தே ஓடுதே

பாவையின் பார்வைக்
கணை வீசுதே

பாவாடை, தாவணியில்
உள்ளம் பரவசமாகுதே

கன்னியவள் கண்ணொடு
கண் நோக்கியே

இனிய காதல் மலர் பூக்குதே

தென்றல் தேகம் தொடும்
வேளையிலே

தேவதையின் முகம்
செவ்வானம் ஆனதே



வளைகரம்
கோர்த்து
வஞ்சியுடன்
ஆடவே

ஆலமரத்து
ஊஞ்சலிலே
ஆசைகள் துளிர்க்குதே

கிராமிய காதல் கீதமென
ஒலிக்குதே

**நா.பத்மாவதி,** கொரட்டூர்

பாவத்தின் சம்பளம் மனது
பாரமாகயிருக்கும்போது
அழுவதுக்கூட
ஆனந்தம்தான்,,, அதிலும்
யாரையாவது
கட்டிப்பிடித்தப்படி அழுவது
பேரானந்தம்,,,

என் பாரங்களை
அழுதுத்தீர்க்க
இறைவனால் அனுப்பப்பட்ட
திருத்தூதராய்தான்~உன்னை
நினைத்து மகிழ்ந்தேன்,,,

மனச்சுமைகளைக்கூட
இறக்கிவைக்க
ஆளில்தாவர்கள்
இப்பூமியில் இருப்பதைவிட
இறப்பதே மேல்,,,


இல்லாதவனுக்கு துன்பம்
எல்லா வடிவிலும் வந்தால்
காத்திருக்கும் எமனுக்கு
கால்ஷீட் கொடுத்துதான்
ஆகனும்போல,,,

வாய்மையை
வெல்வதற்குக்கூட~இங்கு
வழக்கறிஞர்தானே
தேவைப்படுகிறார்
உன்னைச்சொல்லி
குற்றமில்லை
பாவத்தின் சம்பளம்
மரணம்தானே,,,!

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## எச்சரிக்கை தோழி!

வியனுலகின் விழியே...
விழித்து நீ எழுந்தாய்...
விலங்குகள் அனைத்தும்
விலகின ஊறு விளைவித்த
கரங்கள் யாவையும் உனக்கு
விசிறி வீச வைத்திட்டாய்...
சுகம் கிட்டியதை
சொர்க்கமாய் எண்ணி
சுகித்து மயங்கி சொதப்பி
விடாதே! கணப் பொழுதும்
சோராமல் தொடர்ந்து
கடமை யாற்றும் கவனம்
முக்கியம் காலச் சக்கரம்
சுழன்று மாறும் எதார்த்தம்
உணர்ந்து எச்சரிக்கையாய்
இரு தோழி... எத்தனையோ
வடிவங்களில் உனக்கு
வகைவகையாய் எதிரிகள்
எதிர்பாராது அவதரிப்பர்...
அன்பகலா கூர்மையைத்
திடமாய் துணையாக்கு...
என்றென்றும் அகிலம்



காக்கும்
மகுடத்தை
சொந்தமாக்கு!

**நெல்லை**
**குரலோன்**
பொட்டல்
புதூர்

1. என்னைப் பற்றி புரிதல்
என்னிடம் இருக்கும் போது
யாருடைய வார்த்தைகளும்
என்னை வீழ்த்தாது

2. போதும் என்கிற மனம்
இல்லாதவனுக்கு பூமியில்
எந்த இடத்திலும்
நிம்மதி இல்லை

3. தேடுகிற ஒன்றை
அடைகிற வரை
திரும்பி பார்க்காதே
விமர்சனங்களை

4. வாழ்வதற்கு மட்டுமல்ல
வாழ்ந்து காட்டுவதற்கும்
சொந்த வீடுகள்
தேவைப்படுகிறது

5.கூடு கட்டிய குருவி
கூடவே இருக்கும் என்று
நம்பியது மரத்தின் தவறு

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

1. காசு இருக்கும் போது
நாய் செத்தா கூட ஊரே
திரண்டு வரும் காசு
இல்லைன்னா நாம செத்தா
கூட எந்த நாயும் வராது

2.அறிவை விட
அனுபவங்களே நிறைய
பாடங்களை கற்றுத் தரும்


3. வருவாய்க்கு ஏற்ப உன்
தேவையை குறைத்துக்
கொண்டால் நீ புத்திசாலி
தேவைக்கு ஏற்ப வருவாயை
அதிகரித்துக் கொண்டால்
நீ திறமைசாலி

4.கோபத்திற்கு கொடுக்கும்
மரியாதையை யாரும்
புன்னகைக்கு
கொடுப்பதில்லை



5. அன்பை
செலவு
செய்யாமல்
அன்பை
சம்பாதிக்க
முடியாது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## பொக்கிஷம்

பாவம் தொலைக்கும்
தீர்த்தவாரி இந்திய
துணைக்கண்டத்திலுண்டா?
எதற்காக தேடி அலைய
வேண்டும்? சங்கடப்பட்டு
பயணப்பட அவசியமா?

பயன் கருதாது உதவிகள்
புரிவீர் நன்மைகள் புரிந்து
வாழ்ந்திடுவீர்

சாபக் கோடுகள் சிறுத்துப்
போகும் யாவும் வரங்களாக
மாறிப் போகும்

தொலையும் அனைத்து
கர்மங்களும் நிம்மதிப்
பெருமூச்சு வெளிப்படும்



பாபநாசமோ
மற்றவையோ
அநாவசியம்
விரைவுப்
பாதை நேர்வழி
கண்டிடுவீர்!

**பி. பழனி,**
சென்னை.

## மனநிறைவு

திருப்தி வளர்க்க வேண்டிய
பண்பு உல்லாசம் தேடி
சொருகிக் கொள்ளும் ஆப்பு
எளிமையை விரும்பு
வறியார்க்கு உதவு
ஆசைப்படலாம் பேராசை
ஆகாசப் பிசாசு
தகுதிக்கேற்ப இலக்கை
அமைத்திடுவாய் அல்லும்
பகலும் அதை நோக்கி
உழுதிடு வாலிபத்தில் காமம்
எழுவது சகஜம் அத்து
மீறாமலிருப்பதே பொலிவு
எல்லாமே நூலிழை
வித்தியாசம் புரிந்து
வாழ்க்கையை நடத்திடு
விருதும் பொற்கிழியும்
நிச்சயம்!

**பி. பழனி,** சென்னை.



## திருமெய்யர் சிறப்பு அலங்காரத்தில்..

ஐயம் தீர்ப்பதற்கே
மெய்மெனும் தடவரைமேல்
கிடந்தானை..


உய்யவந்த நாச்சியரின்
உயிர்க்கொடியில் பூமாலை
அணிந்தானை..

செய்யும் செயல்களிலே
செம்பவள நிறப்பூவாய்
சீரங்கன் போல் கிடந்தான்
குணத்தானை..



மெய்யனாய்..
உய்வந்தாள்த்
தாயாருடன்
உடனுரை
ஐயனை
திருமெய்யத்தே
சென்று பணிவோமே.!

**வே.கல்யாண்குமார்.**



## கலைமகள்

பன்னீர்த் திராட்சைக்
கண்கள் உனக்கு
ஆனால் அது
தோட்டாக்களை உமிழ்வது
எந்த வகையிலும்
பொருத்தமில்லை
ஏன் நியாயமும் கூட
இல்லை?! நவீன மயமான
ஒப்பனையுடன்
நீ மிளிர்ந்தாலும்(கூட)
எனக்கு வீணை இல்லாத
கலைமகள் நீதான்!
சிந்தாதிரிப்பேட்டை முழுக்க
உனக்கு ரசிகர் மன்றம்
இருந்தாலும் உன் சிந்தனை
முழுவதும் என்னைப்
பற்றிய காதல் மட்டும்
தானே இருக்கிறது! இது
எனக்கு எத்தகையதோர்
அரிய பெருமை! நில்
கவனி கவிதை சொல்
என்று உன் அழகு என்னை
அழைத்தாலும் என்
குறிக்கோளோ உன்னை
முத்தமிடுவதொன்றிலேயே



வட்டமிட்டுக
கொண்டி
ருக்கிறது!
நடக்கப்
போவது
என்னவென்று
காண
ஆவலாகக் காத்திருக்கிறது
நம் கா தல்!

**முத்து ஆனந்த்** வேலூர்

மனசுக்குள்ளிருக்கும்
ஓவியத்தைக் கடத்தும்
தூரிகைகள் ஆத்மாவின்
பேச்சை மட்டுமே
கேட்கின்றன..
இல்லையெனில் எப்படி
சாத்தியம் வார்த்தைகளில்
அடங்காத பேரழகு
வரைந்த ஓவியத்தில்..
வண்ணங்களுக்குக் கைகள்



உண்டா..
எனில் அவை
தூரிகைகள்..
குழைவதும்
சிலிர்ப்பதும்
பரவுவதும்
கூர்மையுமாய்
தூரிகைகள் இசைப்பது
காலத்தின் கைகளில்
அடங்காதபேரிசை.

**ரிஷபன்**

## மறக்க முடியுமா?

மணலில் மாடி கட்டி,,
மனதை குடியேற்றிய
மழலை பட்டாளம்.

வைக்கோலில் தோரணம்
அமைத்து, வகை வகையாய்
விருந்து வைக்கும் வார்த்தை
ஜாலம்.

நிஜமில்லை,நிழலை
நிஜமாக்கி மகிழ்ந்தோம்,கூடி
ஒன்றாய் கலந்தோம்.

தரை மீது ஆகாயம்
அமைத்தோம்,தட்டான்
கூட்டத்தில் ஊர்வலம்
போனோம்.

பகலை இரவாய் மாற்றி
இரவை பகலாய் மாற்றி
இணைந்தோம்.

உன்னாத, உணவு
சமைத்தோம், உடல் பசி
ஆற்றினோம்.

நிழல் கண்டு அமர்ந்தோம்,
வெயிலின் வெப்பத்தை
மகிழ்ந்தோம்.

சிந்திக்க நேரமில்லை,
சிந்திச் சிதறும் புன்னகை
குறையவில்லை.

எங்கே அந்தத் தோழமை,
இதயத்துக்குள் இப்போது
ஏழ்மை.

இன்பமாய் நாம் கலந்த இடம்
அங்கே இருக்குது,
இவர்கள் எங்கே என்று
இதயம் தேடுது.

மண்ணில் புதைந்த
சுவடுகள், மனதில் வேர்விட்ட
ஞாபகங்கள்.
யார் விட்டுப் போனாலும்
மறக்க முடியுமா நினைவுகள்.

**வீ.கருப்பையா பாவை...**
கட்டிக்குளம்



## ஹைக்கூ

அம்மா பாவம்,
குளிரில் நடுங்கினாள்
ஆப் செய்தேன் ஏசியை.


மேய்ப்பவனை பிடித்து
விசாரித்தான் தலையாரி;
சுதந்திரமாய் மேய்ந்தன
ஆடுகள் வயலில்.

மனிதர்கள் கரைந்தார்கள்;
"கா... கா..." என்று
படித்துறையில் எட்டிப்
பார்த்தது காக்கை
விருந்தினர்களா என்று.

வாகன ஓட்டிகளுக்கு
பிசியோதெரபி பயிற்சி...
சாலை நடுவில்
டிராபிக் போலீஸ்.

குடித்துக் காட்டியது
உயிர் கண்ணாடி
எனக்கே என்னை.

**எல். ஜி. சிவக்குமார்**
கோவை



## வாழும் காலம்அது வாழ்வின் கோலம்

இரவு உன்னை உறங்க
அழைக்கும். உன்
உறக்கத்தில் இரவு
தெரியாது. உறங்கும்
உன்னைக் கனவு
நிறைக்கும், உன் கண்களில்
கனவு தோன்றாது.
விழிக்குத் துணையாய்
இமைகளிருக்கும், உன்
விழிகள் இமைகளைப்
பாராது. இமைகள் விழியை
மறைக்கும்போதும், அதன்
இமைப்பில் காட்சிகள்
மறையாது. விதையில்
விருட்சம் ஒளிந்திருக்கும்,
அது விதைக்கு கூடத்
தெரியாது. விருட்சமாகி
நிற்கும் நேரம், அந்த
விதையும் மண்ணில்
இருக்காது. வாழும்
காலம் அது முடிவைக்
காணும், அந்த முடிவுக்குப்
பொருளுரை கிடைக்காது.



வாழும்
நாளில் நாம்
கொள்ளும்
கோலம், அதன்
பொருளுக்கு
முடிவுரை
கிடையாது.

**எஸ். சந்திரசேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.




## மூன்றெழுத்து மந்திரம்

நன்றி என்ற மூன்றெழுத்து,
அதை உன் செயலில்
என்றும் வெளிப்படுத்து,
வெற்றி என்ற மூன்றெழுத்து,
உன் வாழ்வை அதற்கு
வழிநடத்து, பொறுமை
என்ற மூன்றெழுத்து,
அதன் அருமை காண்பாய்
அடியெடுத்து, திறமை
என்ற மூன்றெழுத்து, அவை
தினமும் வளர பிழைதிருத்து.

பணிவு என்ற மூன்றெழுத்து,
அதை அன்பில் கலந்து
பணியமர்த்து, பாசம்
என்ற மூன்றெழுத்து,
அவை கொடிபோல் படர
கொடியசைத்து, நேசம் என்ற
மூன்றெழுத்து, அதன் வாசம்
நெஞ்சில் சிறகடித்து, நாளும்
இந்தப் பூமியிலே, வாழும்
மனிதரே வாருங்கள்! வீழும்



மனிதரின்
வாழ்வினிலே,
விளக்காய்
வந்து
சேருங்கள்!

**மீனாட்சி**
**பாண்டியன்**
திருவண்ணாமலை.

## எழுதுகோலின் வேலை

கூலிக்கு மாரடித்துப் பிணத்தின் பக்கம்
கூவியழும் பெண்களைப்போல் ! காசு வாங்கித்
தாலிகட்டும் ஆண்களைப்போல் பெற்றெடுத்த
தாய்கழுத்தை நெரிக்கின்ற கயவர்போல
பாலியலின் காட்சிகளைக் கதைகளாக்கிப்
படிப்போர்க்குக் கிளர்ச்சியினைத் தூண்டிப்பண்பு
வேலிகளை எரிப்பதன்று ; உண்மை என்னும்
வேர்தன்னைக் காப்பதுவே எழுத்தின் வேலை !

குனிந்திருக்கும் குமுகத்தை நிமிர வைத்துக்
குறுமனத்தை எண்திசையில் விரிய வைத்துத்
தனிநலத்தைப் பொதுநலமாய் மாற வைத்துத்
தவறுகளைத் தவறென்றே உணர வைத்துப்
பிணியான ஊழலுக்கு வேட்டு வைத்துப்
பிற்போக்கு முடக்குவாதம் நீங்க வைத்து
மனிதத்தை ஒளிரவைக்கும் எழுத்தை யாக்கும்
மாண்புடைய எழுதுகோலாய் இயங்க வேண்டும் !

அதிகார ஆட்சியர்க்குத் துணைபோ காமல்
அச்சுறுத்தும் குண்டர்க்குப் பணிந்தோடாமல்



சதிசெய்யும் வஞ்சகர்க்குத் துணையாகாமல்
சழக்கர்தம் செயலுக்கே உறைபோடாமல்
எதிர்நின்றே துணிச்சலுடன் எழுத்தாய் ஆக்கும்
எழுதுகோல்தாம் சமுதாயத்தை மாற்றம் செய்யும்
கதிர்போல இருள்கிழிக்கும் எழுது கோல்தாம்
காண்கின்ற இந்நாட்டின் கண்களாகும் !


**பாவலர் கருமலைத்தமிழாழன்**


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மிக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 63804 53463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ARG CONSTRUCTIONS
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
( FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT:9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
சம்பிரதாய தாம்பூல பாக்கு
అజంతా
వక్కపలుకులు
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
அஜந்தா
பாக்குடன்
உங்கள்
தீபாவளியை
கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY
21, North Mada Street, Villivakkam, Chennai - 600 049
PH: 044 26171341 | email: ajanthasupari@hotmail.com


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Launch Your
Own Secure
Crypto MLM
Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com


WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just499
www.just499.com


S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
இடங்கள்:
பெருங்குடி, துரைப் பாக்கம்
காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97


Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com























## Special Invitation

to retired seniors **house wives businessmen bankers**
CAs NRIs age.30 to 70.qualification SSLC/graduate

To restart your **second Innings with a career business opportunity**

- Flexible timing unlimited incentive
- No target work from home training provided

For successful business.

**Contact Mr. Irudaya Raj**
**Ph.9486634780**








ஓம்
சிவமயம்
அருள்மிகு ஸ்ரீ விநாயகர் துணை
அருள்மிகு தெய்வகுளம் காளியம்மன் துணை
ஆலய தரிசனம் கோடி புண்ணியம்
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
ஸ்ரீ விநாயகர் துதி
விநாயகனே வெவ்வினையை வேறுருக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்
விநாயகனே விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம்
தன்மையினால் கண்ணிற் பணிமின் கனிந்து
ஸ்ரீ தெய்வகுளம் காளியம்மன் துதி
பயிரவி பஞ்சமி பாசாங்குசை பஞ்சபாணிவஞ்சர்
உயிரவி உண்ணுமுயற்சண்டிகாளி ஒளிரும் கலா
வயிரவி மண்டலி மாலினி சூலி வராகி என்றே
செயிரவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே
ஓம்யாதேவி சர்வபூதேக்ஷு மாத்ருபூபேண சம்ஸ்திதா
நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோநமஹா
இந்து சமய அறநிலையத்துறை
கோயமுத்தூர் மாவட்டம் ஆனைமலை வட்டம்
வேட்டைக்காரன்புதூர் கிராமம் சேத்துமடை
அருள்மிகு தெய்வகுளம் காளியம்மன் திருக்கோயில்
சபரிவார புனராவர்த்தன அஷ்டபந்தன
மஹா கும்பாபிஷேக விழா அழைப்பிதழ்
விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 18ம் நாள் (01.04.2026) புதன்கிழமை
காலை 6.00 மணிக்குமேல் 7.00 மணிக்குள்




Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai
Real Choice Chennai
Real Choice Chennai




WANTED
Needed female staff to look after children, patients.
Contact
9150989424




WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872




WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887




keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com





Vilambaram
GET...
SET.....
SHOOT
YOUR SALES WITH SOCIAL MEDIA
ASK US HOW ?
CONTACT US TODAY!
+91-7789941009
www.vilambaram.com




Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
PRESS
PRGI No. TNBIL/25/A1564
பேப்பர்பாய்
8122664699
www.paperboy.biz




தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diplomo/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009
BUSINESS NEWS
DAILY ePAPER
SPORTS
TRAVEL
EBOOK LIBRARY
TECH TRENDS
HEALTH & FITNESS
ENTERTAINMENT
TECH NEWS
TECH TRENDS
FOOD RECIPES





அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை/
மணப்பெண்ணைப்
பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009




அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ராசி
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com



# பல்சுவை களஞ்சியம்





## வாழ்க்கையிலே முன்னேற எத்தனையோ பேர் உதவி செய்யறா.. அவாளுக்கு கிரகங்களும் நிறைய உபசரணை பண்றா.

ஊனமில்லாம படைச்சு, மூச்சு விடக் காத்தும், நித்திய கர்மாக்களுக்கு மழையும் தர பகவானை ரெண்டு நிமிஷம் உபசரிக்க நேரமில்லாமப் போயிடறது. சிரமம் வந்தாதான் பகவானை நினைக்கறதுங்கிறதை மாத்திக்கணும்.

வீட்டுலே யாருமே இல்லே... பொழுது போகலே..”ன்னு தவிக்கற நேரங்கள்லே, பகவானண்டே உட்கார்ந்து காதுக்கு இனிமையா நாலு ஸ்லோகம், பாட்டு சொல்லுங்களேன். மனசு எத்தனை விச்ராந்தியாறதுன்னு புரியும்.

தகப்பனாரை அன்பாய் ரட்சிக்கிறவன், வேளா வேளைக்கு அன்னமும், கட்டிக்க வஸ்திரமும் கொடுக்கிறது மட்டும் ரட்சணை இல்லை. அவர் வயசுக்கு மாறி அவருக்குப் பிடிச்ச பேச்சுக்களை



தினமும் ஒரு அரைமணி சம்பாஷிக்கணும். அப்படிப்பட்டவனை பிரம்மா ஆசிர்வாதம் பண்றார்.

தாயார், குடி இருந்த கோவிலில்லையா? இதேபோல அன்பாய் இருக்கிறவனுக்கு அடுத்த பிறவியில் பூமி சொந்தமாய் அனுபவிக்கும் போகம் கிடைக்கும். ஏன்னா பூமி தேவி அப்படி அனுக்ரஹம் பண்றா.

குருவை மரியாதையா நடத்தறவனுக்கு, மத்தவாளுக்கு படிக்க ஒத்தாசை பண்றவாளுக்கு,அடுத்த பிறவியில் படிப்பு நன்றாக வரும். பிரகஸ்பதி அப்படி வரம் கொடுத்திருக்கார்.

**லால்குடி வெ.நாராயணன்**
மாம்பாக்கம் சென்னை

# மீம்ஸ்










# சிவனுக்கு எத்தனை கண்கள்?

வரதன் என்ற இயற்பெயர் கொண்ட காளமேகப் புலவர் திருவரங்கக் கோவிலின் மடைப்பள்ளியின் சமயல்காரர். இவரது கனவில் தோன்றிய அன்னை சரஸ்வதி தேவி, தனது தாம்பூலச் சாற்றை இவரது நாவில் உமிழ்ந்ததனால், கல்வியறிவு இல்லாத போதும், மேகம்போல் கவிமழை பொழியும் திறன் கைவரப் பெற்றார். அன்று முதல் சமையல்கார வரதன், கவிகாளமேகம் என்ற சிறப்புப் பெயரில் புகழ்பெற்றார் என்பது தொன்மம்.

ஒரு சமயம் காளமேகத்தின் நண்பர் ஒருவருக்கு சிவபெருமானின் கண்கள் பற்றி ஒரு சந்தேகம் வந்துவிட்டது. அதாவது, சிவனுக்கு சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தத்புருஷம், ஈஸானம் என ஐந்து முகங்கள் உள்ளன. அப்படியானால் சிவனை பத்துக்கண்ணன் என்றுதானே அழைக்க வேண்டும். ஆனால் முக்கண்ணன் என்று அழைக்கிறார்களே. உண்மையில் சிவனுக்கு கண்கள் தான் எத்தனை என்று காளமேகப் புலவரிடம் கேட்டார். அதற்கு குசும்புக்கார காளமேகம் சிவனுக்கு உரியது அரைக் கண் மட்டுமே. அதனால் சிவன் அரைக்கண்ணன் என்றார். அதிர்ந்து போனார் நண்பர். அவருக்கு புலவர் அளித்த விளக்கம் :



இந்திரனுக்கு (தண்டனையாகக் கிடைத்தது) ஆயிரம் கண்கள். முகத்துக்கு இரண்டு வீதம் ஆறுமுகக் கடவுளுக்கு பன்னிரு கண்கள். நான்முகனாகிய பிரம்மனுக்கு முகத்துக்கு இரண்டு வீதம் எட்டு கண்கள். சிவனுக்கு முகத்தில் இரண்டு, நெற்றியில் ஒன்று என எண்ணிக்கையில் கண்கள் மூன்று என்பது சாதாரணக் கணக்கு. ஆனால் முக்கண்ணன் என்று சொல்லப்படும் சிவபெருமான் "தனது" என்று சொல்லிக்கொள்ள அவருக்கு அமைந்தது அரைக்கண் மட்டும் தான் என்றார். நண்பர் குழம்பினார்.

காளத்தி வேடன் தனது கண் ஒன்றை சிவனின் பழுது பட்ட கண்ணில் அப்பியதால் சிவனின் ஒரு கண் கண்ணப்பரின் கண் ஆகிப்போனது. சிவன் தன் மேனியில் நேர்பாதியை அன்னை உமையவளுக்கு அளித்து விட்டதால் சிவனின் இடது பாகத்தில் ஒரு கண்ணும், நெற்றியில் பாதிக்கண்ணும் என ஒன்றரைக்கண் உமையவளின் கண் ஆகிப்போனது. எனவே மீதமிருக்கும் அரைக்கண் மட்டுமே சிவனின் கண் ஆகிறது என்றார் புலவர். இதை ஒரு வெண்பாவாகவும் பாடிக்காட்டினார்.

"முக்கண்ணன் என்று
அரனை முன்னோர்
மொழிந்திடுவர்
அக்கண்ணற்கு உள்ளது
அரைக் கண்ணே - மிக்க
உமையாள் கண் ஒன்றரை
மற்று ஊன்வேடன் கண்
ஒன்று
அமையும் இதனால் என்று
அறி".

நண்பருக்கு தலை சுற்றியது. வாயடைத்துப்போய் நகர்ந்து விட்டார்.



**-நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி



## விடுகதை



| | |
|---|---|
| அடித்தால் விலகாது, அணைத்தால் நிற்காது. அது என்ன? | தண்ணீர் |
| நடக்கத் தெரியாதவன், நட்டுவனுக்கு வழி காட்டுகிறான் அவன் யார்? | கைகாட்டி |
| தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? | அன்னாசிப்பழம் |
| ராஜா, ராணி உண்டு நாடு அல்ல. இலைகள் பல உண்டு, தாவரம் இல்லை! அது என்ன? | காட்ஸ் |
| கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்? | சோளப்பொத்தி |
| மூன்றெழுத்துப் பெயராகும். முற்றும் வெள்ளை நிறமாகும் அது என்ன? | பஞ்சு |



# ஜோக்ஸ்

நீதிபதி : ” அந்த வீட்டுப் பூட்டை உடைத்து ஏன் திருடினாய்?”

திருடன்: “என்னோட சாவி எதுவுமே அந்தப் பூட்டைத் திறக்காததால கடைசியா பூட்டை உடைக்க வேண்டியதாப் போச்சிங்க”

========================

தொண்டர் 1 : “தலைவர் ரொம்ப அப்பாவியா இருக்காரா, எப்படி?”

தொண்டர் 2 : ” சலூன்ல துண்டைப் போர்த்தினதுமே, ‘எந்த வட்டத்தின் சார்பில போடுறே’ன்னு கேட்கிறாரு”

========================

“வாழைப் பழம் ஒன்னு எத்தனை ரூபாய்ங்க?”

“ஒரு பழம் ரெண்டு ரூபாய்ங்க”

“ஒன்னரை ரூபாய்க்கு கொடுங்களேன்”

“ஒன்னரை ரூபாய்க்கு தோல் மட்டும்தான் கிடைக்கும்”

“அப்படின்னா ஐம்பது பைசாவுக்கு பழம் மட்டும் கொடுங்க”

========================

“இந்த ஆசிரியர்




வித்தியாசமானவரா, எப்படி?”

“பதிலை சொல்லிட்டு, இதனோட கேள்வி என்னனு கேட்பார்”

========================

“டாக்டர், நான் யார் பேச்சையுமே கேட்குறதில்லை”

“அதை என்னிடம் வந்து ஏன் சொல்றீங்க?”

“காது சரியா கேட்கலை; அதை சரி பண்ணுங்க டாக்டர் !”

========================

தொண்டர் 1: “தேர்தல்ல தோல்வி அடையாமல் இருக்க என்ன வழி?”

தொண்டர் 2: “போட்டி போடாமல் இருந்திடறதுதான் ஒரே வழி !”

========================

“சுவரில் எழுதாதே’ன்னு இருந்தது. நான் போயி...”

“என்ன செய்தே?”

” ‘சரி எழுதலை’ன்னு எழுதிட்டு வந்திட்டேன்”

========================

ஆசிரியை : “ஒரு ரூபாய்க்கு ஒரு ஆப்பிள், அப்படின்னா பத்து ரூபாய்க்கு எத்தனை ஆப்பிள்?”

மாணவன்: “ஒரு ரூபாய்க்கு எந்த கடையில ஆப்பிள் விற்குதுன்னு சொல்லுங்க, நான் போய் வாங்கி வறேன்”



# ஜோதிடம் அறிவோம்



## ஜோதிடப் பழமொழிகள் தெரியுமா?




குரு பார்க்க கோடி நன்மை
பத்தில் குரு பதவிக்கு இடர்
இரவில் செய்தாலும் அரவில் செய்யாதே
பத்தில் பாம்பு இருந்தால் பணம் பறந்து வரும்
நாளும் கோளும் நலிந்தோர்க்கு இல்லை
சனி பிடித்தவனுக்கு சந்தையிலும் கந்தை கிடைக்காது.
கன்னியில் செவ்வாய் கடலும் வற்றும்
கும்பத்து வெள்ளி குடம் கொண்டு சாய்க்கும்
மகத்துப் பெண் பூரத்துப் புருஷன்
பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது
மேஷ ராகு மேன்மையை கொடுக்கும்
துலா கேது தொல்லை தீர்க்கும்
சுவாதி சுக்ரன் ஓயா மழை
மறைந்த புதன் நிறைந்த கல்வி
சித்திரை மாதம் செல்வன் பிறந்தால் சீரும் சிறப்பும் கெடும்
பத்தில் குரு வந்தால் பதவி பறி போகும்
குரு நின்ற இடம் பாழ்
சனி பார்க்கும் இடம் பாழ்
விதி போகும் வழியே மதி போகும்
குரு கொடுப்பின் சனி தடுப்பார்; சனி கொடுப்பின் எவர் தடுப்பார்?
சனி பார்த்த இடம் பாழ்
விழுப்பு இருக்குமிடத்தில் வேப்பிலைக்காரி தங்க மாட்டாள்
பருப்புக்கு போகாவிட்டாலும் நெருப்புக்கு போக வேண்டும்
எட்டில் சனி நீண்ட ஆயுள்
சனிபகவானைப் போன்று கெடுப்பாரும் இல்லை;
கொடுப்பாரும் இல்லை.

## ஜோதிடம் சொல்லும் ரகசியம்

# வளையல் அணிவதன் நன்மைகள்



பெண்கள் இயற்கையாகவே அழகு என்றாலும், அவர்கள் ஆடை அணிகலன் அணிவது அவர்களுக்கு கூடுதல் அழகை சேர்க்கிறது. சுமங்கலிப் பெண்கள், வீட்டில் உள்ள கன்னிப்பெண்கள் கட்டாயம் வளையல் அணிய வேண்டும், பொட்டு வைக்க வேண்டும் என்று சொல்வார்கள். பெண்கள் வளையல் போடுவதாலும், பொட்டு வைப்பதாலும் என்ன நன்மைகள் கிடைக்கிறது தெரியுமா?

வளையல்களில் பல வகை உள்ளன. ஜோதிட சாஸ்திரத்தின்படி வளையல்களுக்கு அதிக முக்கியத்துவம் உண்டு. பெண்கள் தொடர்ந்து வளையல் அணிந்தால் பல்வேறு பலன்களை அடைய முடியும். திருமணமான பெண்கள் வளையல் அணியாமல் இருந்தால் அது அசுபமானது என்று பாரம்பரியமாகக் கருதப்படுகிறது. வளையல் அணியாத பெண்களை எதிர்மறை ஆற்றலை ஈர்க்கும் என்று கூறப்படுகிறது. வீட்டில் உள்ள பெண்கள் தொடர்ந்து வளையல் அணிந்தால், அது குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களின் நல்ல ஆரோக்கியத்துக்கு வழிவகுக்கும்.

வளையல் அணிவது பெண்களுக்கு அலங்காரம் மட்டுமில்லாமல், ஆரோக்கியத்தின் பார்வையிலும் மணிக்கட்டில் வளையல்களை அணியும்போது அது உராய்வை உருவாக்குகிறது. இது இரத்த ஓட்டத்தை அதிகரிக்க வழிவகுக்கிறது. இது உயர் இரத்த அழுத்தத்தின் வாய்ப்புகளைக் குறைக்க உதவுகிறது.


**கர்ப்பிணிப் பெண்களும் வளையல்களும்:** கர்ப்பிணிப் பெண்கள், குறிப்பாக ஏழாவது மாதத்துக்குப் பிறகு வளையல் அணிய வேண்டும் என்று கூறப்படுகிறது. ஏழாவது மாதத்துக்குப் பிறகு, கருவில் இருக்கும் குழந்தையின் மூளை அதிகமாக வளர்ச்சி அடைகிறது. அது மட்டுமின்றி, குழந்தை வெவ்வேறு ஒலிகளையும் அடையாளம் காணத் தொடங்குகிறது. வளையல் சத்தம் குழந்தையின் மூளை வளர்ச்சியைத் தூண்டுகிறது.

ஜோதிடம் கூறுவது என்ன?

வளையல் அணியாத பெண்கள் சோர்வு மற்றும் உடல்நலப் பிரச்னைகளால் பாதிக்கப்படுவதாக சில ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏனெனில், வளையல் ஒலிகளின் நேர்மறை ஆற்றல் பல்வேறு உடல்நலப் பிரச்னைகளைத் தடுக்கிறது. அது மட்டுமின்றி, பெண்கள் வளையல் அணிவது தம்பதியிடையே உறவை வலுப்படுத்த உதவுகிறது.

ஜோதிட ரீதியாக ஆடம்பரம் மற்றும் அழகு போன்றவை சுக்ரனுடன் தொடர்புடையவை. உங்கள் ஜாதகத்தில் சுக்ர கிரகம் பலவீனமாக இருந்தால், நீங்கள் வளையல் அணிவது உங்களுக்கு நன்மையை சேர்க்கும் என்று சொல்லப்படுகிறது.

# கனவில் எந்த விலங்கு வந்தால் என்ன பலன் தெரியுமா?



**1. யானை:** யானை துரத்துவதுப் போல கனவுக் கண்டால், உங்கள் வாழ்க்கையில் திருப்பம் ஏற்படப் போவதாக ஜோதிடம் கூறுகிறது. வாழ்க்கையில் தீர்க்கப்படாத பிரச்னையே இதற்கு காரணம். அதை எதிர்கொள்ளவே உங்கள் மனம் தயாராகிறது என்று கூறுகிறது.

**2. காகம்:** காகங்களை கனவில் கண்டால், உங்கள் முன்னோர்கள் உங்களை எச்சரிக்கிறார்கள் அல்லது முக்கியமான செய்திகளை தெரிவிக்க முயற்சிக்கிறார்கள் என்று அர்த்தம். நீங்கள் ஒரு முக்கியமான நபரின் நினைவால் வாடுகிறீர்கள் என்று இது குறிக்கிறது.

**3. பாம்பு:** பாம்புகளைப் பற்றிய கனவு துரோகம், ஏமாற்றத்தைக் குறிக்கிறது. உங்கள் வாழ்க்கையில் ஏற்படவிருக்கும் மோதல்கள் அல்லது அச்சுறுத்தல்களை குறிப்பதாக இது இருக்கலாம்.

**4. பசு:** பசுவை கனவில் பார்ப்பது பொதுவாக வாழ்வில் செழிப்பைக் குறிக்கிறது.

**5. கழுகு:** கழுகு உங்களை நோக்கி பறந்து வருவது போல கனவு கண்டால், உங்கள் வாழ்க்கையில் வெற்றியும், உயர்வும் வரப்போவதாக ஜோதிடம் கூறுகிறது. கருடனின் ஆசிர்வாதம் உங்களுக்குக் கிடைக்கப்போவதாகவும், தடைகளைத் தாண்டி நீங்கள் உயரப்போவதாகவும் அர்த்தம்.

**6. புலி:** கனவில் புலிகளைக் கண்டால், உங்களுக்குள் ஒரு தைரியமும், வலிமையும் உண்டாகப்போவதாக ஜோதிடம் சொல்கிறது. துர்கா தேவியின் வாகனமான புலி உங்களுக்கு அதிகாரத்தையும், பாதுகாப்பையும் தரப்போகிறது. சபரிமலைக்குச் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது என்பதையும் இது குறிக்கிறது.

**7. மயில்:** மயிலைப் பற்றிய கனவு வந்தால், உங்கள் வாழ்வில் அழகும், இனிமையும் நிறையப் போவதாக ஜோதிடம் சொல்கிறது. முருகப்பெருமானின் வாகனமான மயில் ஞானத்தையும், அழகியலையும் உங்கள் வாழ்வில் கொண்டு வரும். உங்களின் படைப்பாற்றல் மற்றும் சுயவெளிப்பாடு மேம்படப் போவதையும் இது காட்டுகிறது.

**8. சிங்கம்:** சிங்கத்தை கனவில் காண்பதன் மூலம் அதிகாரம் மற்றும் தலைமைத்துவம் கிடைக்கப்போவதாக ஜோதிடம் குறிக்கிறது. துர்கா தேவியின் மற்றொரு வாகனமான சிங்கம் உங்களுக்கு வீரத்தையும், நீதியையும் வழங்கும். இதில் உங்களுக்கு கனவில் எந்த விலங்கு வந்தது என்பதை சொல்லுங்கள் பார்க்கலாம்.

# வாழ்க்கைக்கு தேவை ஜோதிடத்தையா அல்லது விடாமுயற்சியையா?



நம் வாழ்வில் பல சமயங்களில் எவ்வளவுதான் உழைப்பை போட்டிருந்தாலும் ஜோதிடம், காலநேரம் போன்றவற்றின் மீது ஒரு சிறு நம்பிக்கை வைத்திருப்போம். இது உண்மையிலேயே இருக்கிறதா? இதற்கு நம் கடும் உழைப்பைக் காட்டிலும் சக்தி அதிகமா? இதைப்பற்றி தெளிவாக புரிந்துக்கொள்ள ஒரு குட்டிக் கதையை பார்ப்போம்.

ஒருமுறை கிருஷ்ணதேவராயர் எதிரி நாட்டு மன்னனை தாக்குவதற்காக படையெடுத்து செல்கிறார். அப்படி அவர் போகும் வழியில் ஒரு பெரிய ஆற்றங்கரையை கடக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்போது அரசவை ஜோதிடர், 'அரசரே! இன்று நாள் சரியாக இல்லை. அடுத்த திங்கட்கிழமை போருக்கு சென்றால் வெற்றி நிச்சயம்' என்று கூறுகிறார்.

இதைக்கேட்ட கிருஷ்ணதேவராயருக்கு வருத்தம் ஏற்படுகிறது. 'அவ்வளவு நாள் தள்ளிச் சென்றால் எதிரி நாட்டு மன்னன் உஷாராகிவிடுவானே? ஆனால், ஜோசியரோ இப்படி சொல்கிறாரே?' என்று கிருஷ்ணதேவராயருக்கு மேற்கொண்டு செல்ல தயக்கம் ஏற்படுகிறது.

இததைப் பார்த்த தெனாலிராமன் ஜோசியரை அழைத்து, 'எல்லோருக்கும் ஆருடம் சொல்கிறீர்களே? நீங்கள் இன்னும் எத்தனை வருடம் உயிரோடு இருப்பீர்கள் என்பதை சொல்ல முடியுமா?' என்று கேட்கிறார். அதற்கு ஜோசியரோ, 'நான் இன்னும் இருபது வருடம் உயிரோடு இருப்பேன்' என்று பெருமையாக சொல்கிறார்.

இதைக்கேட்ட தெனாலி ராமன் திடீரென்று தன் வாளை எடுத்து ஜோசியர் கழுத்தில் ஆழமாக பதித்து, 'இந்த விநாடியே அந்த ஆருடத்தை என்னால் பொய்யாக்க முடியுமா முடியாதா?' என்று கேட்கிறார். இதை சற்றும் எதிர்ப்பாராத ஜோசியர், 'கண்டிப்பாக முடியும்' என்று சொல்லி பதறுகிறார். 'அவ்வளவுதான் மன்னரே ஜோசியம். உங்களுக்கு எதிரான எந்த ஜோசியத்தையும் பொய்யாக முடியும்' என்று தெனாலி சொல்ல, கிருஷ்ணதேவராயர் ஆற்றைக் கடக்கிறார். அந்த போரில் வெற்றியும் பெறுகிறார்.

இந்தக் கதையில் வந்தது போலத்தான் நம் வாழ்வில் ஜோதிடத்தை நம்புவதும், நம்பாததும் அவரவர் விருப்பம் தான் என்றாலுமே முக்கியமான நேரத்தில் ஜோதிடத்தை மட்டுமே நம்பி நமக்கு கிடைக்கும் நல்ல சந்தர்ப்பங்களைக் கோட்டை விடுவது முட்டாள் தனமாகும். இதைப் புரிந்துக்கொண்டு கடும் உழைப்பு, விடாமுயற்சியின் மீது நம்பிக்கை வைத்துப் போராடுங்கள் வெற்றி நிச்சயம். முயற்சித்துதான் பாருங்களேன்.

# உங்கள் சுண்டு விரல் சொல்லும் செய்தி!

உலகெங்கிலும் உள்ள மக்கள் பல ஒற்றுமைகளைக் கொண்டுள்ளனர். ஆனால், அவர்களின் இயல்பு, பழக்கவழக்கம், உடல் மொழி போன்றவற்றின் மூலம் வேறுபடுகின்றனர். ஒரு மனிதனை முதல் சந்திப்பிலேயே அவரை முழுமையாக புரிந்து கொண்டு, அவருடைய எண்ணங்கள், ஆளுமையை அறிய முடியுமா? அதற்கு வாய்ப்பே இல்லை. ஆனால், ஜோதிடத்தில் சில விஷயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் மூலம் ஒரு நபரின் ரகசியத்தை நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

5 விரலும் ஒரே மாதிரியா இருக்கு என பலரும் கேட்பார்கள். அப்படி அந்த விரல்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியா இருக்கு என்றால் அது நிச்சயம் கிடையாது. ஜோதிட சாஸ்திரத்தின்படி, உங்களின் சுண்டு விரல் எப்படி இருக்கிறது என்பதை பொறுத்து உங்களின் குணாதசியங்கள் பற்றி தெரிந்து கொள்ளலாம் வாங்க...


குறிப்பாக உங்களின் சுண்டு விரலில் நீளத்தை பொறுத்து, ஒருவரின் முடிவு எடுக்கும் திறன் மற்றும் வாழ்க்கையில் எந்த அளவிற்கு ரிஸ்க் எடுப்பார்கள் என்பது குறித்து தெரிந்து கொள்ள முடியும் என ஜோதிடம் சொல்கிறது.



**சரிசமமான சுண்டு விரல்:** உங்கள் சுண்டு விரல் மோதிர விரலின் கோடுடன் சரிசமமாக இருந்தால், நீங்கள் எப்போதும் சுய விழிப்புணர்வுடனும், ஒழுக்கத்துடன் இருக்கும் குணத்தை கொண்டிருப்பீர்களாம். உங்கள் ஆழ்மனதின் பேச்சை கேட்டு நடக்கும் குணம் பெற்றிருப்பீர்கள். மற்றவர்கள் யாரும் உங்களை எளிதில் ஏமாற்றிவிட முடியாது.



**மோதிர விரலில் முதல் கோடுக்கு மேல் சுண்டு விரல்:** மோதிர விரலில் முதல் கோட்டை விட உங்களின் சுண்டு விரல் நீளமாக இருந்தால் நீங்கள் மிகவும் நம்பிக்கையானவர்களாக திகழ்வீர்கள். மிகவும் உத்வேகத்துடன் செயல்படக்கூடிய திறனை கொண்டிருப்பிர்களாம். தங்களுடைய பிரச்சனைகளை தாங்களே தீர்க்கும் திறமையை கொண்டிருப்பார்கள்.



**சிறிய சுண்டு விரல்:** உங்கள் சுண்டு விரல் மோதிர விரலின் கோட்டுக்கும் கீழ் இருந்தால், உங்களுக்கு சொந்த பலம் மற்றும் பலவீனம் தெரிந்து நடப்பீர்கள். மேலும் மற்றவர்களின் பலவீனத்தையும் சீக்கிரம் புரிந்து கொண்டு நடப்பவர்களாக திகழ்வீர்கள். அவர்களின் தேவைகளை ஆராய்ந்து அதை நிறைவேற்ற முயற்சி எடுப்பீர்கள். இந்த விரலை கொண்டிருக்கும் நபர்கள் மற்றவர்களால் அதிகம் ஈர்க்கப்படுகிறார்கள். ஏனென்றால் இவர்கள் மற்றவர்களை புரிந்து வாழ்வார்களாம்.

## வாணியம்பாடி, புதூர் பகுதியில் கலைஞர் நூலகம் திறப்பு விழா



**திருப்பத்தூர், மார்ச் 15:** திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி, புதூர் பகுதியில் கலைஞர் நூலகம் திறப்பு விழா நடைபெற்றது விழாவிற்கு தமிழக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பொதுப்பணித் துறை மற்றும் நெடுஞ்சாலை துறை அமைச்சர் மாண்புமிகு எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி என் அண்ணாதுரை, டி.எம். கதிர் ஆனந்த், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜ், வாணியம்பாடி நகர திமுக செயலாளர் வி.எஸ் சாரதிகுமார் மற்றும் திமுக கட்சியைச் சேர்ந்த நிர்வாகிகள் தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## செய்யாறில் 'திருக்குறள் திருப்பணிகள் திட்டம்' சார்பில் திருக்குறள் பயிற்சி வகுப்பு



**செய்யாறு மார்ச் .15:** செய்யாறில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்பில் திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

திருவண்ணாமலை மாவட்டம் ,தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருக்குறள் திருப்பணிகள் திட்டம் சார்ந்து செய்யாறு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 23 வது வார திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு திருக்குறள் பயிற்சியாளர் கவிஞர் எறும்பூர் கை. செல்வகுமார் தலைமை தாங்கி, வரவேற்று பேசினார். பயிற்சி வகுப்பு 22 மாணவிகள்,7 மாணவர்கள் ,இரண்டு பெரியவர்கள் ,இரண்டு பயிற்சியாளர்கள் என 33 பேர் கலந்து கொண்டனர்.

முடிவில் புலவர் ந. கனகசபை நன்றி கூறினார்.

## உடுமலையில் மூளைச்சாவு அடைந்த ஆறு வயது சிறுவனின் உடல் உறுப்புகள் தானம்




**உடுமலை, மார்ச் 15:** உடுமலையில் மூளைச்சாவு அடைந்த ஆறு வயது சிறுவனின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டநிலையில் ஆறு பேர் மறுவாழ்வு பெற்றனர். உடுமலைப்பேட்டையைசேர்ந்த விக்னேஷ் என்பவரின் மகன் சிவாதித்யா இந்த சிறுவன் தனது தாத்தா யோகானந்தம் என்பருடன் கடந்த 7 ஆம் தேதி காரில் திருப்பூர் சாலையில் சென்று கொண்டிருந்தார் அப்பொழுது பொன்னேரி என்ற இடத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சாலை விபத்தில் காரை ஓட்டி சென்ற தாத்தா யோகானந்தம் உயிரிழந்தார் பலத்த காயமடைந்த சிறுவன் கோவை தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் ஆனால் அங்கு சிறுவனுக்கு சிகிச்சை அளித்து மருத்துவர்கள் சிறுவன் மூளை சாவு அடைந்ததாக கூறிவிட்டனர்.

## ஆலங்காயம் மேற்கு ஒன்றிய அலுவலகத்தில் வெல்லும் தமிழ் பெண்கள் பாராட்டு விழா நிகழச்சி



**திருப்பத்தூர் , மார்ச் 15:** திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த ஆலங்காயம் மேற்கு ஒன்றிய அலுவலகத்தில் வெல்லும் தமிழ் பெண்கள் பாராட்டு விழா நிகழச்சி ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி எஸ் ஞானவேலன் வாழ்த்துரை வழங்கினார்.

வெல்லும் தமிழ் பெண்கள் என்ற தலைப்பில் கடந்த இரண்டு வாரமாக ஆலங்காயம் மேற்கு ஒன்றிய பகுதிக்குட்பட்ட 8 ஊராட்சிகளில் வீடு வீடாகச் சென்று தமிழக அரசின் சாதனைகளை விளக்கும் வெல்லும் தமிழ் பெண்கள் பிரச்சார கூட்டம் நடந்தது.

திருப்பத்தூர் மாவட்டத்தில் 100% வெற்றிகரமாக பிரசாரத்தை நிறைவு செய்துள்ளது ஆலங்காயம் மேற்கு ஒன்றியம்.

இதற்கு கடுமையாக உழைத்த வெல்லும் தமிழ் பெண்கள் நிர்வாகிகளுக்கு ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி எஸ் ஞானவேலன் அவர்கள் பாராட்டு தெரிவித்து பரிசுப்பொருட்கள் வழங்கி விருந்து உபசரித்து கௌரவப்படுத்தினார்.

அப்போது பேசிய வி எஸ் ஞானவேலன் மாவட்ட திமுகவில் எந்த ஒரு கட்சி சார்ந்த செயல்பாட்டிலும் ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக முதலிடம் வகிக்கிறது, ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக சார்பாக பின்வரும் 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1) ஒரணியில் தம்ழிநாடு உறுப்பினர் சேர்க்கை 61.5% (அனைத்தும் OTP முறையில்) ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக முதலிடம்

2)அத்தகைய ஓரணியில் தம்ழிநாடு உறுப்பினர்களை SIR பணிகளை சிறப்பாக செய்து 100% வாக்காளர்களாக வாக்காளர் பட்டியலில் கொண்டுவந்து சாதனை படைத்த ஒன்றியம் ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக முதலிடம்

3) வெல்லும் தமிழ் பெண்கள் 100% பிரச்சார பணி நிறைவு-ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக முதலிடம்

4) கடந்த 2024 பாராளுமன்ற தேர்தலில் திமுக வேட்பாளர் முன்னிலை பெற ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் (வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் ) அனைத்து ஊராட்சிகளிலும் (11 ஊராட்சி ) முன்னிலை பெற்ற ஒரே ஒன்றியம் ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக முதலிடம்

5) திருப்பத்தூர் மாவட்ட அளவில் அதிக நலத்திட்ட விழாக்களை நடத்திய ஒரே ஒன்றியம் ஆலங்காயம் மேற்கு ஒன்றிய திமுக.

6) தமிழக அளவில் தலைவர் தளபதி பெயரில் அறிவாலயம் அமைத்து கழக பணிகளை மேற்கொள்ளும் ஒரே ஒன்றியம் ஆலங்காயம் மேற்கு ஒன்றியம்.

7) 2021 உள்ளாட்சி தேர்தலில் தமிழக அளவில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஒன்றிய கவுன்சிலர் ( ஜாப்ராபாத் 4,700 வாக்குகள் வித்தியாசம் ) திமுகவிற்கு பெருமை சேர்த்த ஒரே ஒன்றியம் ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் முதலிடம்

8) அதே போல தமிழ்நாட்டிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் மாவட்ட கவுன்சிலராக வெற்றி பெற்று (37,000 வாக்குகள் வித்தியாசம் ) கழகத்திற்கு பெருமை சேர்த்த ஒரே ஒன்றியம் ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் முதலிடம்

9) எனவே வரும் சட்டமன்ற தேர்தலில் தலைவர் தளபதியின் கரத்தை வலுப்படுத்தும் வகையில் அயராது உழைத்து திருப்பத்தூர் மாவட்டத்தில் ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் அனைத்து வாக்குச்சாவடியிலும் முன்னிலை பெற அயராது கடுமையாக உழைக்க வேண்டும்.


இதுபோல தமிழகமே வியக்கும் வண்ணம் பல சாதனைகளை நிகழ்த்தி வரும் ஒன்றியம் ஆலங்காயம் மேற்கு ஒன்றியம் என்றும் இதற்கு நிர்வாகிகளும் தொண்டர்களின் அயராது உழைப்பும் காரணம் என ஒன்றிய கழக செயலாளர் திரு வி எஸ் ஞானவேலன் நன்றிகளை தெரிவித்தார்.

## கே.வி.குப்பத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திறப்பு விழா!



**வேலூர்,மார்ச் 15:** வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் வட்டாரத்திற்கான மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் சென்னங்குப்பம் புதூர் பகுதியில், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி நீதியரசர். ஜி. ஜெயச்சந்திரன் முன்னிலையில், சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் வேலூர் மாவட்ட நிர்வாக நீதிபதிகே.முரளிசங்கர் ரிப்பன் வெட்டி திறந்துவைத்தார். அதனைத் தொடர்ந்து, அப்பகுதியிலுள்ள வித்தியாலட்சுமி பள்ளி அரங்கில், நீதிமன்றத்திற்கான கல்வெட்டை திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில்,முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி எம்.இளவரசன், மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலெட்சுமி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர். ந.உ.சிவராமன், தலைமை நீதித்துறை நடுவர். ஜி.இசக்கியப்பன், காட்பாடி பார் அசோசியேஷன் தலைவர்.டி.முனிசாமி, காட்பாடி வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் பி.திருஞானம், குடியாத்தம் கோட்டாட்சியர் சுபலட்சுமி, வட்டாட்சியர் பலராமன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், காவல்துறை அதிகாரிகள், வழக்கறிஞர்கள், ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், து.தலைவர்கள், கவுன்சிலர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.



கமுதி அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவில் மாசி களரி திருவிழாவை முன்னிட்டு 1000 கிலோ கிடாகறி சமைத்து படையலிட்டு வணங்கிய பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டத்தில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு குறித்து பொதுமக்கள் பதட்டம் அடைய வேண்டாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். மேலும் நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகள் வசதிக்கேற்ப உள்ளூர் ஹோட்டல் மற்றும் ரெஸ்டாரன்ட் உரிமையாளர்களுக்கு தகுந்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளதாகவும், குறித்த காலத்தில் சமையல் எரிவாயு கிடைப்பதால் அதிக முன்பதிவு தவிர்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## படிப்பை மட்டும் விட்றவே விட்றாதீங்க ரீல்ஸ்



**கடலூர், மார்ச் 15:** கடலூர் மாவட்டம் சாத்திப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த தேவா, ஜீவா என்ற சிறுவர்கள் அருகில் உள்ள நெல்லித்தோப்பு ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் முறையே 5 மற்றும் 2 ஆம் வகுப்புகளில் படித்து வருகின்றனர். திரையுலக நட்சத்திரங்களுடன் இணைந்து இன்ஸ்டாகிராமில் ரீல்ஸ் வெளியிடும் அளவுக்கு புகழ்பெற்றிருக்கும் அவர்கள் 'படிப்பை மட்டும் விட்றவே விட்றாதீங்க...' என்று வலியுறுத்தி வெளியிட்ட ரீல்ஸ் பெரும் வரவேற்பைப் பெற்றது.

### முதல் முறையாக பெண் திமுக மாணவரணி செயலாளர்



திமுக மாணவரணி செயலாளராக, முதல் முறையாக ஜெ.வீரமணி என்ற பெண் நியமிக்கப்பட்டு உள்ளார்.

## பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் உயர்வு




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், பத்திரிகையாளர்களின் ஓய்வூதியம் ரூ. 12,000 லிருந்து ரூ. 15,000 ஆக உயர்த்தி உத்தரவிட்டார்.

## இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி




மயிலாடுதுறை அருகே செம்பனார்கோவிலில் மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் இணைந்து நோன்பு திறந்தனர். உலக அமைதிக்காக சிறப்பு தொழுகை நடத்தினர்.

## திருவண்ணாமலை தாமரை நகர் நடுநிலைப்பள்ளி வாக்குச்சாவடி நேரில் ஆய்வு



திருவண்ணாமலை மாநகராட்சி தாமரை நகரில் உள்ள நடுநிலைப்பள்ளி வாக்குச்சாவடி மையத்தில் தேர்தல் முன்னேற்பாடு பணிகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் வாக்குச்சாவடி மையத்தை பார்வையிட்டு நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை






சென்னை மாவட்ட உலக மகளிர் விழாவில் கலந்து கொண்டது நிகழ்வு தமிழ்நாடு அரசு அனைத்தும் துறை ஓய்வூதியர் சங்கம் சென்னை மாவட்டம்

## பாயும் ஒளி நீ எனக்கு - நந்தலாலா ஆவணப்பட வெளியீட்டு விழா




த.மு.எ.க.ச/வானம்/ களம் இணைந்து நடத்திய கவிஞர் நந்தலாலா பற்றிய " பாயும் ஒளி நீ எனக்கு" ஆவணப்படம் திருச்சி தில்லைநகர் "இந்திய மருத்துவ மன்றத்தில்" நேற்று (14.03.2026) வெளிடப்பட்டது.

மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என் நேரு ஆவணப் படத்தை வெளியிட மேயர் திரு.அன்பழகன் அதனைப் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக த.மு.எ.க.ச திரு. ரங்கராஜன் வரவேற்புரை ஆற்ற, மாற்கு ரத்தினராஜ் இயக்கிய இந்த ஆவணப் படம் குறித்து கவிஞர் மதுக்கூர் ராமலிங்கம் எழுத்தாளர் ஆதவன் தீட்சண்யா கவிஞர் முத்துநிலவன் ஆகியோர் பேசினர்.

மாற்கு தன் ஏற்புரையில், அவரை அறிந்த அதிகமான நபர்களை இதில் பேசவைக் காததற்கு தான் மட்டுமே காரணம் என்றார்.திரு. நடராசன், திரு.P. குமரவேல் இருவரும் வாழ்த்துரை வழங்கினர். ஆவணப்படத்தில் கவிஞர் வாழ்ந்த இடத்திற்கு கவிஞர் நந்தலாலா சாலை எனப் பெயரிடப்பட்டது காட்டப்பட்டது.

அதை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலினிடம் சொல்லி, முன்னின்று செய்தவர் அமைச்சர் திரு.கே.என் நேரு. திராவிடர் கழகத் தலைவர் திரு.வீரமணி பேசுகையில் , கவிஞர் அபார இசை ஞானம் கொண்டவர், இயல்-இசை - நாடகம் மூன்றும் அவர் பேச்சில் கலந்து இருக்கும் என்றார்.

கவிஞர் யுகபாரதி, நந்தலாலா "ஒரு இடத்தில் பேசியதை இன்னொரு இடத்தில் பேசமாட்டார்" என்றார். கவிஞர் நந்தலாலா பேசிய ஒரு பதிவில் பேசுவது ஒரு கலையா? என்றால் கலை தான் அதைவிட கேட்பது ஒரு கலை எனக் குறிப்பிட்ட காட்சியும் இடம்பெற்றிருந்தது. பாரதி நந்தலாலா நன்றி நவில நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது

**ஸ்ரீகாந்த் திருச்சி**

## கற்றல் திறன் நாள் விழா




புதுச்சேரி எக்கோல் ஆங்கிலஸ் தொடக்கப்பள்ளியில் மாணவர்களின் எழுத்தறிவு, எண்ணறிவு திறன்களை வெளிப்படுத்தும் அனைத்து தலைப்புகளின் கற்றல் திறன் நாள் விழா சிறப்பாக நடைபெற்றது.

# சுற்றுலா: தென்னகத்தின் காஷ்மீர் மூணாறில் பார்க்க வேண்டிய இடங்கள்!

கேரளாவில் இடுக்கி மாவட்டத்தில் உள்ள மூனாறு ஒரு சிறந்த சுற்றுலா தலமாகும். கடல் மட்டத்திலிருந்து 1800 மீட்டர் உயரத்தில் உள்ளது இந்த இடம் தென்னகத்தின் காஷ்மீர் என அழைக்கப்படுகிறது. தேயிலை உற்பத்தியில் முக்கிய தொழிலாகும்

இந்தப் பகுதியில் பிரிட்டிஷ்காரர்கள் கோடை வாசஸ்தலமாக பயன்படுத்தி வந்தார்கள். பரந்த தேயிலை தோட்டங்கள் அழகிய நகரங்கள் முறுக்கு பாதைகள் மற்றும் ஏராளமான விடுதிகள் உள்ளன. புகழ்பெற்றஓய்விடங்கள்உள்ளன. இங்கு காணப்படும் நீலக்குறிஞ்சி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும். தென்னிந்தியாவில் உயரமான ஆனைமுடி சிகரம் 2695 மீட்டர் உயரம் உள்ளது. மலையேற்றத்திற்கு பொருத்தமான இடமாகும்.

இரவிகுளம் தேசிய பூங்கா மூணாறு பகுதியில் முக்கிய இடம் வகிக்கிறது. இந்தப் பகுதியில் வரையாடுகள் அதிகம் காணப்படுகிறது. 97 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பட்டாம்பூச்சிகள் வனவிலங்குகள் பறவை இனங்கள் வாழ்விடமாக உள்ளது. நீலக்குறிஞ்சி மலர்கள் சரிவு பகுதிகளில் நீலகம்பளம் விரித்தது போன்று அருமையாக காணப்படுகிறது. இதை பார்ப்பதற்கு கண்கொள்ளா காட்சியாக இருக்கும் இந்தப் பகுதியில் ஆண்டு முழுவதும் குறிஞ்சி பூக்கள் பூக்கும்.



ஆனைமுடி சிகரம்: இரவிகுளம் தேசிய பூங்கா உள்ளே அமைந்துள்ள பகுதி ஆனைமுடி சிகரம் ஆகும். தென்னிந்தியாவின் மிக உயரமான பகுதியாக காணப்படுகிறது. 2700 மீட்டர் உயரம் கொண்ட இந்த இடத்தில் வனவிலங்குகள் அதிகமாக உள்ளது.

மாட்டுப் பெட்டி: இந்த இடம் மூணாறில் இருந்து 13 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள பகுதியாகும். கடல் மட்டத்திலிருந்து 1700 மீட்டர் உயரத்தில் உள்ளது. இந்த இடம் ஏரிக்காக புகழ்பெற்ற இடமாகும். இங்குள்ள ஏரியில் ஆனந்தமாக படகு சவாரி செய்யலாம். பெரிய ஏரியாக இருப்பதால் படகு சவாரி செய்ய அனைவரும் ஆர்வமுடன் செல்வார்கள்.

பள்ளிவாசல்: மூணாறு சித்திபுரத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கேரளாவின் முதல் நீர்மின் திட்டம் தொடங்கப் பட்ட பகுதி ஆகும். பார்வையாளர்களுக்கும் முக்கியமான பிக்னிக் இடமாக கருதப்படுகிறது.

சின்னக்கனால் ஆனை இரங்கல்: இதுவும் மூணாறு பகுதியில் அமைந்துள்ளது. இந்த இடத்தில் அருவிகளும் பவர் ஹவுஸ் நீர்வீழ்ச்சியும் அமைந்துள்ளது. இங்கிருந்து கொண்டு மேற்கு தொடர்ச்சி மலையின் அழகை கண்டு ரசிக்கலாம். ஆனை இரங்கல் பகுதியில் தேயிலை தோட்டங்கள் அதிகம் காணப்படுகிறது. பசுமையான காடுகள் அடர்த்தியான மரங்கள் உள்ள வனப்பகுதியாகும்

டாப் ஸ்டேஷன்: மூணாறில் இருந்து 32 கிலோமீட்டர் தொலைவில் இந்தப் பகுதியில் உள்ளது. உயரமான மலைப்பகுதி உள்ள இடம் ஆகும். இங்கிருந்து தமிழ்நாட்டின் முழு அழகையும் ரசிக்கலாம். இந்த இடத்திலும் நீல குறிஞ்சி மலர்கள் அதிகமாக காணப்படுகிறது. கண்ணை கவரும் நிறத்தில் குறிஞ்சி மலர்கள் பார்ப்பதற்கு ரம்யமாக உள்ளது.

தேயிலை அருங்காட்சியகம்: இந்தப்பகுதியில் மூணாறு டாடா டீ.எஸ்டேட் செயல்பட்டு வருகிறது. டாடா நிறுவனம் தனக்கென ஒரு அருங்காட்சியாயத்தை இந்த பகுதியில் ஏற்படுத்தி உள்ளது. இந்த அருங்காட்சியகத்தில் தேயிலை சம்பந்தப்பட்ட பொருட்கள் புகைப்படங்கள் கலைப் பொருட்கள் முதலியன அழகுபட அமைத்துள்ளார்கள். டாட்டா நிறுவனம் இங்கு தேயிலை உற்பத்தி செய்து வருகிறது.

மூணாறு: புகழ்பெற்ற மலைவாசஸ்தலம். நீர்வீழ்ச்சிகளும் நீரோடைகளும் அதிகம் காணப்படுகிறது. மூணாறு என்றால் மூன்று ஆறுகளை குறிக்கும். முத்திரப்புலா நல்ல தண்ணி குண்டலா மூன்றும் சேர்ந்த பகுதிதான் மூணாறு. கடல் மட்டத்திலிருந்து 1600 அடி உயரத்தில் உள்ளது. அக்காலத்தில் பிரிட்டிஷ்காரர்களின் ஓய்விடமாக இருந்தது. பள்ளத்தாக்குகள் மலைகள் நீரோடைகள் நீர்வீழ்ச்சிகள் தேயிலை தோட்டங்கள் வளைந்து செல்லும் நடைபாதைகள் என பார்ப்பதற்கு கண்களுக்கு குழுமையாக இருக்கும். உதகமண்டலம் கொடைக்கானல் இவற்றிற்கு அடுத்தபடியாக மூணாறு மூன்றாவது புகழ்பெற்ற கோடை வாசல் ஸ்தலமாக உள்ளது என்றால் மிகையாகாது. உள்ளூர் மக்கள் தவிர பிற மாநிலங்களில் இருந்தும் ஏராளமான சுற்றுலா பயணிகள் இங்கு வந்து செல்கின்றனர். மூணாறு தென்னகத்தின் காஷ்மீர் என அழைப்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

## வேலைவாய்ப்பு கார்னர்

### எய்ம்ஸ் மருத்துவமனையில் 2551 நர்சிங் ஆபீசர்



பணி: நர்சிங் ஆபீசர். மொத்த காலியிடங்கள்: 2551 இடங்கள். (எய்ம்ஸ் மருத்துவமனை வாரியாக காலியிடப் பகிர்வு இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.)

சம்பளம்: ரூ.9,300 – ரூ.34,800. வயது: 18 முதல் 30க்குள். எஸ்சி/எஸ்டி/ஒபிசி/மாற்றுத்திறனாளிகளுக்கு ஒன்றிய அரசு விதிமுறைப்படி அதிகபட்ச வயது வரம்பில் தளர்வு அளிக்கப்படும்.

தகுதி: பிஎஸ்சி நர்சிங் பட்டம் பெற்றிருக்க வேண்டும் அல்லது டிஜிஎன்எம் படித்திருக்க வேண்டும். மேலும் குறைந்தது 50 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையில் 2 வருட பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். கல்வித் தகுதிக்கு பின்னர் பணி அனுபவம் பெற்றிருப்பது விரும்பத்தக்கது.எய்ம்ஸால் நடத்தப்படும் 'நார்செட்' ஆன்லைன் எழுத்துத்தேர்வில் பெறும் மதிப்பெண்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்கள் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். இத் தேர்வு இரு கட்டங்களாக நடைபெறும். முதல் கட்ட தேர்வு ஏப்.11ம் தேதியும், 2ம் கட்டத் தேர்வு ஏப்.30ம் தேதியும் நடைபெறும்.

கட்டணம்: பொது/ஒபிசி பிரிவினருக்கு ரூ.3 ஆயிரம். எஸ்சி/எஸ்டி/பொருளாதார பிற்பட்டோருக்கு ரூ.2400/-. மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணம் கிடையாது. இதை ஆன்லைனில் செலுத்த வேண்டும். முதல் கட்ட எழுத்துத் தேர்வில் 100 ஆப்ஜக்டிவ் டைப் வினாக்கள் கேட்கப்படும். இதில் பொதுஅறிவு, அப்டிடியூட் மற்றும் ஜெனரல் நர்சிங் தொடர்பான கேள்விகள் கேட்கப்படும். இதில் தேர்ச்சி பெறுபவர்கள் மட்டும் மெயின் தேர்வுக்கு அனுமதிக்கப்படுவர். மெயின் தேர்வில் நர்சிங் பாடப்பிரிவிலிருந்து 160 மதிப்பெண்களுக்கு ஆப்ஜக்டிவ் டைப் வகை கேள்விகள் கேட்கப்படும்.எழுத்துத் தேர்வு தொடர்பான விவரங்கள் இ.மெயில் மூலம் தெரிவிக்கப்படும்.www.aiimsexams.ac.in என்ற இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்க கடைசி நாள்:16.03.2026.

## மார்ச் மாதம் (2026) வார ராசிபலன்

### 15.3.2026 முதல் 21.3.2026 வரை

### மேஷம்

இந்த வாரம் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மருத்துவம் சார்ந்த செலவுகள் நேரலாம். ஆயுதங்கள் கையாளும் போதும் வாகனங்களை ஓட்டும்போதும் எச்சரிக்கை அவசியம். அடுத்தவர்களுக்கு உதவபோய் வீண்பழி ஏற்படலாம் கவனம் தேவை. உங்களை சார்ந்தவர்களே உங்களை தவறாக நினைக்கலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். ஆனால் பணவரத்து திருப்திகரமாக இருக்கும். வாடிக்கையாளர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு கொடுப்பது நன்மை தரும்.

வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் பணிச் சுமையை ஏற்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளிடம் உங்களது கருத்துக்களை தெரிவிக்கும்போது கவனமாக பேசுவது நல்லது. பணி நிமித்தமாக பயணங்கள் ஏற்படலாம். குடும்பத்தில் நிம்மதி குறையலாம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் அனுசரித்து செல்வது நல்லது.

### ரிஷபம்

இந்த வாரம் செலவு அதிகரிக்கும். மனதில் ஏதாவது கலக்கம் ஏற்படும். காரணமே இல்லாமல் வீண் பழி சுமக்க நேரிடும். ஒதுங்கி சென்றாலும் வலிய வந்து சிலர் சண்டை போடலாம் கவனமாக இருப்பது நல்லது. கண் சம்பந்தமான கோளாறுகள் ஏற்படலாம். வேளை தவறி உணவு உண்ணும்படி நேரலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் போட்டி இருக்கும். வீண் வார்த்தைகளை பேசுவதை தவிர்ப்பது நல்லது. வாடிக்கையாளர்கள் மன நிறைவடைவதற்காக கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிகம் பணியாற்றுவதால் உடல் சோர்வடைய நேரலாம். வேலை செய்யும் இடத்திலும் மேல் அதிகாரிகளிடமும் வீண் பேச்சுக்களை தவிர்ப்பது நல்லது. எதிர்பார்த்த பணி உயர்வு கிட்டும். குடும்பத்தில் ஏதாவது வேண்டாத பிரச்சனை தலை தூக்கலாம். உறவினர்கள் நண்பர்கள் பிள்ளைகள் என்று யாரிடமும் வீண் சண்டையை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கு இடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

### மிதுனம்

இந்த வாரம் எதிலும் முன்னேற்றம் காணப்படும். எதிர்பார்த்த பண வரத்து இருக்கும். உடல் ஆரோக்கியம் பெறும். உழைப்பு வீணாகும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம். திடீர் செலவு உண்டாகும். அடுத்தவருக்கு எவ்வளவு நல்லது செய்தாலும் அது எடுபடாமல் போகலாம். அதே நேரத்தில் பொருள் வரத்து அதிகரிக்கும். வாகனம், பூமி மூலம் லாபம் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். பல தடைகளை தாண்டி செயல்பட வேண்டி இருக்கும். எதிர்பார்த்த லாபம் வரும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த ஆர்டர்கள் கைக்கு வந்து சேரும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல் திறமை வெளிப்படும். சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு கிடைக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். மேலிடத்தில் இருந்து வந்த கருத்து மோதல்கள் அகலும். குடும்பத்தில் இருந்த பிரச்சனை குறையும். கணவன், மனைவி இருவரும் பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும்.

### கடகம்

இந்த வாரம் எல்லாவற்றிலும் எதிர்பார்த்த நன்மை உண்டாகும். பண வரத்து கூடும். கொடுக்கல் வாங்கலில் இருந்த பிரச்சனை தீரும். நீண்ட நாளாக இருந்த கஷ்டம் நீங்கும். எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் உண்டாகும். அரசாங்கம் மூலம் லாபம் ஏற்படும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் சாதகமாக இருக்கும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரம் லாபகரமாக நடக்கும். வாக்கு வன்மையால் புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்க பெறுவீர்கள்.

தடைபட்ட ஆர்டர்கள் வந்து சேரும். அரசாங்க ரீதியில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பதவி புதிய பொறுப்புகள் ஏற்படலாம். மேல் அதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து அவர்களின் நன்மதிப்புக்கு ஆளாவீர்கள். பணி சார்ந்த விஷயமாக குடும்பத்தை விட்டு பிரிந்து இருக்க வேண்டிய சூழ்நிலை வரலாம். குடும்பத்தில் மகிழ்ச்சியான சுப காரியங்கள் கொண்டாட்டங்கள் இருக்கும். கணவன் மனைவிக்கு இடையே நெருக்கம் அதிகரிக்கும்.

### சிம்மம்

இந்த வாரம் பணம் சம்பாதிக்கும் திறமை அதிகமாகும். தடை பட்டு வந்த காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும். பணியாட்கள் மூலம் நன்மை ஏற்படும். சாமர்த்தியமான பேச்சின் மூலம் வாடிக்கையாளர்களிடம் நன் மதிப்பை பெறுவீர்கள்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் நேர்மையாக சிறப்பாக பணிகளை செய்து மேல் அதிகாரிகளிடம் பாராட்டுக்கள் கிடைக்க பெறுவார்கள். உயர் பதவிகளும் கிடைக்க கூடும். சக பணியாளர்கள் ஆதரவாக இருப்பார்கள். குடும்பத்தில் திருமணம் போன்ற சுப காரியங்கள் நடக்கும். எல்லா வகையிலும் நன்மை ஏற்படும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த மன வருத்தம் நீங்கி மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள்.

பிள்ளைகள் நீங்கள் கூறியதை கேட்டு அதன்படி நடப்பது ஆறுதலை தரும்..

நண்பர்கள் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சுமூகமாக நடந்து முடியும். பெண்களுக்கு தேவையான உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தடைபட்ட காரியங்கள் சாதகமாக முடியும்.

### கன்னி

இந்த வாரம் நல்ல பலன்கள் கிடைக்கப் பெறுவீர்கள். முயற்சிகள் வெற்றி பெறும். எதையும் ஆராய்ந்து முடிவுகளை எடுப்பது நல்லது. வேகத்தை குறைத்து விவேகமுடன் செயல்படுவது நன்மை தரும். எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கவனத்துடன் வைப்பது நல்லது. பண வரத்து அதிகமாகும். பெரியோர்களிடம் பகைமை பாராட்டுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்பட்டாலும் வந்து சேர்வதில் எந்த தடைகளும் இருக்காது.

எந்த ஒரு வேலையையும் அதிக முயற்சி செய்து முடிக்க வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமுடன் பணியாற்றுவது நல்லது. புதிய வேலைக்கு செய்யும் முயற்சிகள் பலன் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். கொடுத்த வேலைகளை நேரத்தில் செய்வது உகந்தது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலையை தரும். கணவன், மனைவிக்கு இடையே இருந்த பிரச்சனைகள் குறையும். குழந்தைகளின் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

மற்றவர்களிடம் பகைமை பாராட்டுவதை தவிர்ப்பது நல்லது.

### துலாம்

இந்த வாரம் எதிர்பார்த்த காரிய வெற்றி உண்டாகும். புத்தி சாதூரியத்தால் எதையும் செய்து முடிக்க முடியும். அனுபவபூர்வமான அறிவுத் திறன் கை கொடுக்கும். பண வரத்து தாமதப்படும். மற்றவர்களுடன் வீண் வாக்கு வாதங்களை தவிர்ப்பது நன்மை தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான சில முக்கிய முடிவுகள் எடுக்க நேரிடும். பண வரத்து தாமதப்படும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்களுடன் கவனமாக பழகுவது நல்லது. அடுத்தவரின் உதவி கிடைக்கும். புதிய பொறுப்புகள் ஏற்க வேண்டி இருக்கும். செயல் திறன் அதிகரிக்கும். குடும்பத்தில் திடீர் பிரச்சனை தலை தூக்கும். மிகவும் கவனமாக கையாண்டால் அது தீரும். கணவன், மனைவிக்கு இடையே கருத்து வேற்றுமை ஏற்படலாம்.

பிள்ளைகள் உங்கள் ஆலோசனையை கேட்காமல் தன்னிச்சையாக முடிவு எடுக்கலாம். உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாக பழகுவது நல்லது.

### விருச்சிகம்

இந்த வாரம் காரிய தடை தாமதம் நீங்கும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். எதிர்ப்புகள் விலகும். பொருளாதாரம் உயரும். நினைத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். தாமதமான காரியங்கள் வேகம் பிடிக்கும். வீண் கவலை விலகும். அடுத்தவர் விஷயங்களில் தலையிடுவதை தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பார்ட்னருடன் அனுசரித்து செல்வது நல்லது. வியாபார போட்டிகள் குறையும். எல்லா துறைகளிலும் லாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் எதை பற்றியும் கவலைப்படாமல் செயலாற்றுவார்கள். வேலை பார்க்கும் இடத்தில் இருந்த பிரச்சனைகள் தீரும். மேலதிகாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை நிலவும். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும்.

திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். சிலருக்கு புத்திர பாக்கியம் உண்டாகும். வாய்க்கு ருசியான உணவு உண்பீர்கள்.

கணவன் மனைவி ஒருவரது பேச்சை மற்றவர் கேட்பதன் மூலம் நன்மை உண்டாகும்.

பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நட்பு ரீதியில் நிதானத்தைக் கடைபிடிப்பது நன்மையைத் தரும். .

### தனுசு

இந்த வாரம் பல வகைகளிலும் நன்மை உண்டாகும். இழுபறியாக இருந்த சில வேலைகள் சாதகமாக நடந்து முடியும். பண வரத்து அதிகரிக்கும். தெளிவான முடிவு எடுப்பதன் மூலம் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கும். அரசாங்கம் தொடர்பான விவகாரங்களில் சாதகமான போக்கு காணப்படும். கடினமான வேலைகள் கூட சுலபமாக முடியும். மரியாதையும், அந்தஸ்தும் அதிகரிக்கும். கடினமான முயற்சிகள் கூட எளிமையாக செய்ய முடியும்.

தொழில் வியாபாரத்தில் இருந்த பண தட்டுப்பாடு நீங்கும். வசூலாக வேண்டிய கடன் பாக்கிகள் வசூலாகும். வியாபாரம் தொடர்பான பயணங்களினால் லாபம் கிடைக்க பெறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு சக ஊழியர்களுடன் இருந்த கருத்து வேற்றுமை குறையும். வர வேண்டிய பணம் வந்து சேரும். குடும்பத்தில் இதமான சூழ்நிலை காணப்படும். வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை.

அடுத்தவர் செயல்கள் உங்கள் கோபத்தை தூண்டுவதாக இருக்க லாம்.

### மகரம்

இந்த வாரம் காரியங்களில் தாமதமான போக்கு காணப்படும். உங்கள் வார்த்தைக்கு வெளி வட்டாரத்தில் மதிப்பு அதிகரிக்கும். உங்கள் பேச்சு வெறும் பேச்சு போல் மற்றவர்கள் நினைப்பார்கள். அதனால் அளவுடன் பேசுவது நல்லது.

உங்களது உடமைகளை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை.

தொழில் வியாபாரத்தில் வேகமான போக்கு காணப்படும். சரக்குகளை அனுப்பும் போதும் பாதுகாத்து வைக்கும் போதும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

கிடப்பில் இருந்த கடன்கள் பைசலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளிடம் அனுசரித்து செல்வது நல்லது. செய்யும் வேலை பற்றி மனதில் திருப்தியற்ற எண்ணம் உண்டாகும்.

குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்கள் உங்களுக்கு மன வருத்தத்தை தருவதாக இருக்கலாம். கவனமாக கையாள்வது நல்லது. பிள்ளைகளுடன் அனுசரித்து செல்வது நன்மையை தரும்.

கணவன், மனைவிக்கு இடையே திடீர் மன வருத்தம் அடையும்படியான சூழ்நிலை வரலாம் கவனம் தேவை. .

### கும்பம்

இந்த வாரம் விரும்பாத இடமாற்றம் உண்டாகலாம். குறிக்கோள் இன்றி வீணாக அலைய நேரிடும். செலவும் அதிகரிக்கும். சகோதரர்கள் மூலம் நன்மை உண்டாகும். மனோ தைரியம் கூடும். புதிய நட்பு கிடைக்கும். எதிலும் எச்சரிக்கையாக இருப்பது நன்மைதரும். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத தடங்கல்கள் வரலாம். பண வரத்து இருந்தாலும் தேவை அதிகரிக்கும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைக்க பெறுவீர்கள். அவர்களால் நன்மையும் உண்டாகும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற வேகத்தில் பணிபுரிவார்கள். சிலருக்கு புதிய பதவி அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க பெறுவார்கள். சிலருக்கு குடும்பத்தை விட்டு வெளியே சென்று தங்க நேரிடலாம். கணவன், மனைவிக்கு இடையே மகிழ்ச்சி நீடிக்கும். விருந்தினர்கள் வருகை இருக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். பிள்ளைகளுடன் சந்தோஷமாக பொழுதை கழிப்பீர்கள்.

பெண்களுக்கு அடுத்தவர்களின் வேலைக்காக வீணாக அலைய நேரிடும். மனோ தைரியம் அதிகரிக்கும்.

### மீனம்

இந்த வாரம் எதிலும் கவனமாக இருப்பது நல்லது. திடீரென்று கோபம் வரும். ஏதாவது ஒரு வகையில் அடுத்தவரிடம் வீண் பேச்சு கேட்க நேரலாம் கவனம் தேவை. மற்றவர்கள் செய்கைகளால் மன வருத்தம் உண்டாகலாம். நீண்ட நாள் இழுபறியாக இருந்து வந்த பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த பின் தங்கிய நிலை மாறும். எதிர்பார்த்த ஆர்டர்கள் வந்து சேரும். வியாபார போட்டிகள் தடை தாமதங்கள் நீங்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் சாமர்த்தியமாக செயல்பட்டு மேல் அதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவார்கள். பிடித்தமான இடத்திற்கு வேலை மாற்றம் உண்டாகும். சக ஊழியர்கள் நட்புடன் பழகுவார்கள். குடும்பத்தில் அமைதி குறைவது போல் தோன்றும் சகோதரர்கள் வழியில் ஏதாவது பிரச்சனை தலை தூக்கலாம் கவனம் தேவை. பிள்ளைகள் மூலம் பெருமை கிடைக்கும்.

விருப்பமான நபரை சந்தித்து மகிழ்வீர்கள். கணவன், மனைவிக்கு இடையில் அன்பு அதிகரிக்கும். பெண்களுக்கு வீண் பேச்சுக்களை குறைத்து செயலில் கவனம் செலுத்துவது நல்லது. பண வரத்து திருப்தி தரும்..

# வணிக பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர்கள் தட்டுப்பாடு: விறகு அடுப்புக்கு மாறிய கேட்டரிங் நிறுவனங்கள்



**சென்னை, மார்ச் 15:**

வணிக பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர்கள் தட்டுப்பாட்டால், சென்னையில் உள்ள பல்வேறு கேட்டரிங் நிறுவனங்கள் மீண்டும் விறகு அடுப்புக்கே மாறியுள்ளன.

போர் காரணமாக வணிக பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டு ஏற்பட்டுள்ளதால், சென்னை முழுவதும் உள்ள உணவு தயாரிப்பு மற்றும் கேட்டரிங் நிறுவனங்கள் கடும் பாதிப்பைச் சந்தித்துள்ளன.

சென்னையில் வீட்டு உபயோக சமையல் காஸ் சிலிண்டர்கள் வழக்கம்போல் விநியோகம் செய்யப்பட்டு வந்தாலும், உணவகங்கள், டீக்கடைகள் மற்றும் கேட்டரிங் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் வணிக சிலிண்டர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதன் காரணமாக, பல ஆண்டுகள் கழித்து மீண்டும் விறகு அடுப்பைப் பயன்படுத்தி சமைக்கும் நிலைக்கு உணவு தயாரிப்பாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஏற்கெனவே திருமணங்கள், காதுகுத்து உள்ளிட்ட சுபநிகழ்ச்சிகளுக்கு ஆர்டர்களைப் பெற்றுவிட்டதால், வாடிக்கையாளர்களுக்கு ஏமாற்றம் அளிக்கக் கூடாது என்பதற்காக மயிலாப்பூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த கேட்டரிங் தொழில் செய்வோர், சிலிண்டருக்கு பதிலாக வேறு வழியின்றி, கிடங்குகளில் பல ஆண்டுகளாக தூக்கிப் போடப்பட்டிருந்த பழைய விறகு அடுப்புகளை தூசி தட்டி எடுத்து வந்து, தற்போதைய சமையல் தேவைக்கு பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். இதனால் நேர விரயம் மட்டுமின்றி, சுகாதார ரீதியான சவால்களையும் இவர்கள் சந்தித்து வருகின்றனர். இதுகுறித்து சமையல் கலைஞர் ஒருவர் கூறுகையில், "கடந்த 10 ஆண்டுகளாக காஸ் அடுப்புகளுக்கு முழுமையாக மாறிவிட்டோம்.

தற்போது சிலிண்டர் தட்டுப்பாட்டால் மீண்டும் விறகு அடுப்புக்கு திரும்பியிருப்பது பல சவால்களை ஏற்படுத்துகிறது. காஸ் அடுப்பில் ஒரு மணி நேரத்தில் செய்யக்கூடிய வேலையை, விறகு அடுப்பில் செய்ய கூடுதல் நேரம் ஆகிறது. தற்போதைய இளம் தலைமுறை சமையல் கலைஞர்களுக்கு விறகு அடுப்பில் சமைக்கும் பழக்கம் இல்லாததால், தீயின் வேகத்தைக் கட்டுப்படுத்தி சமைப்பது கடினமாக உள்ளது" என்று தெரிவித்தார்.

## க்ரைம் கார்னர்

### 19 வயது இளம்பெண்ணுக்கு காதல் தொல்லை கொடுத்த முதியவருக்கு அரிவாள் வெட்டு: வாலிபர் கைது

**சென்னை, மார்ச் 15:**

சென்னை கீழ்ப்பாக்கம் பராக்கா ரோடு பகுதியில் வசித்து வருபவர் அரிஷ்குமார் (வயது 65). இவர் திருமணம் ஆகாமல் வீட்டில் தனியாக வசித்து வருகிறார். அரிஷ்குமார் வீட்டில் தனியாக இருந்தபோது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வீடு புகுந்து அரிவாளால் அவரை சரமாரியாக வெட்டிவிட்டு தப்பிச் சென்றார். இதுபற்றி தகவல் அறிந்து வந்த தலைமைச் செயலக குடியிருப்பு போலீசார், முதியவர் அரிஷ்குமாரை மீட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். இதுகுறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து 27 வயது வாலிபரை கைது செய்து விசாரித்தனர்.

விசாரணையில் முதியவர் அரிஷ்குமார், தன்னை காதலிக்கும்படி கூறி 19 வயது இளம்பெண்ணை வற்புறுத்தி வந்துள்ளார். பாதிப்பட்ட இளம்பெண், கடந்த ஜனவரி மாதம் இதுகுறித்து அயனாவரம் போலீசில் புகார் செய்தார். போலீசார் முதியவரிடம் விசாரணை நடத்தினர்.

அப்போது முதியவர், தற்கொலை செய்து கொள்வதாக கூறி கத்தியை காட்டி மிரட்டியதுடன், லேசாக உடலை கிழித்து கொண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். இதனால் அவரை போலீசார் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை அளித்து எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர்.

ஆனால் அதன் பிறகும் முதியவர் அரிஷ்குமார், இளம்பெண்ணிடம் காதல் வசனங்கள் பேசி, தன்னை காதலிக்கும்படி கூறி தொல்லை செய்ததாக கூறப்படுகிறது. இதுபற்றி அறிந்த இளம்பெண்ணின் உறவினரான 27 வயது வாலிபர், வீடுபுகுந்து அரிஷ்குமாரை வெட்டியது தெரியவந்தது. மேலும் இதுகுறித்து போலீசார் விசாரணை செய்து வருகின்றனர்.

### சென்னை அரசு மருத்துவமனையில் நோயாளிகளிடம் நகைகள் பறிப்பு: 2 பேர் கைது; கார் பறிமுதல்

**சென்னை, மார்ச் 15:**

சென்னை கொளத்தூரை சேர்ந்தவர் காஞ்சனா (வயது 30). இவரது மாமியார் தலையில் இருந்த கட்டியால் அவதிப்பட்டார். கட்டியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றுவதற்காக ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் மாமியார் சேர்க்கப்பட்டார். மாமியாருடன் மருத்துவமனையில் தங்கியிருந்து காஞ்சனா அவரை கவனித்து வந்தார்.

மாமியாருக்கு தலையில் ஸ்கேன் எடுப்பதற்காக காஞ்சனா அதே மருத்துவமனையில் 7-வது மாடியில் உள்ள ஸ்கேன் எடுக்கும் மையத்திற்கு சென்றார். அப்போது அங்கே, தன்னை டாக்டர் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட நபர் ஒருவர் காஞ்சனாவிடம் பேசினார். உங்கள் மாமியாருக்கு ஸ்கேன் எடுக்க வேண்டும் என்றால் அவர் அணிந்திருக்கும் தங்க நகைகளை கழற்றுமாறு கூறினார். காஞ்சனாவும் மாமியார் அணிந்திருந்த 3 சவரன் தங்க தாலி உள்பட நகைகளை கழற்றிக்கொடுத்தார். அந்த நகைகளை வாங்கிய மர்ம நபர் ஒரு பையில் போட்டு வைத்துக்கொண்டார். சிறிதுநேரம் காத்திருங்கள் என்று கூறி அந்த மர்ம நபர், நகைப் பையோடு தப்பி சென்றுவிட்டார்.

காஞ்சனா மாமியாருடன் நீண்ட நேரம் காத்திருந்தார். நகை பையுடன் சென்ற டாக்டர் என கூறிய மர்ம நபர் திரும்பி வரவில்லை. அதன் பிறகுதான் அவருக்கு உண்மை புரிந்தது. நகையை எடுத்து சென்றது மட்டுமல்லாமல் காஞ்சனாவின் செல்போனையையும் அந்த மர்ம நபர் நைசாக எடுத்து சென்றுவிட்டார். இதுதொடர்பாக காஞ்சனா ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தனர். கண்காணிப்பு கேமரா காட்சி அடிப்படையில் நகை, செல்போனை பறித்து சென்ற போலி டாக்டர் ராஜேஷ்பிரித்வி(35) என்பவரை போலீசார் கைது செய்தனர். கோவையை சேர்ந்த அவரது நண்பர் அரவிந்தன்(30) என்பவரும் கைது செய்யப்பட்டார். இவர்களிடம் இருந்து நகைகள் மீட்கப்பட்டது. இதுபோல இவர்கள் பல்வேறு அரசு மருத்துவமனைகளில் புகுந்து டாக்டராக நடித்து நோயாளிகளிடம் நகை, பணத்தை பறித்ததாக தெரிகிறது. இவ்வாறு அபகரித்த நகை, பணம் மூலம் சொந்தமாக கார் வாங்கியுள்ளனர். அந்த காரும் பறிமுதல் செய்யப்பட்டது. இவர்கள் 2 பேரும் பட்டப்படிப்பு படித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு செய்திகள்

### கால் இறுதியில் சாட்விக், ஷிராக் ஜோடி விலகல்

**பாசல், மார்ச் 15:**

சுவிட்சர்லாந்தின் பாசல் நகரில் சுவிஸ் ஓபன் பாட்மிண்டன் தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று ஆடவருக்கான இரட்டையர் பிரிவு கால் இறுதி சுற்றில் இந்தியாவின் சாட்விக் சாய்ராஜ் ராங்கிரெட்டி, ஷிராக் ஷெட்டி ஜோடியானது டென்மார்க்கின் கிறிஸ்டியன் ஃபாஸ்ட் கேஜர், ராஸ்மஸ் கேஜர் ஜோடியுடன் மோதுவதாக இருந்தது.

ஆனால் போட்டிக்கு முன்னதாக சாட்விக் சாய்ராஜ் ராங்கிரெட்டிக்கு திடீரென வலது தோள்பட்டையில் வலி ஏற்பட்டது. இதனால் கால் இறுதி சுற்றில் இருந்து சாட்விக், ஷிராக் ஜோடி விலகியது.

### ஐபிஎல்: கொல்கத்தா அணியின் புதிய ஜெர்சி வெளியீடு

**கொல்கத்தா, மார்ச் 15:**

10 அணிகள் பங்கேற்கும் 19-வது ஐ.பி.எல். தொடர் 28-ந்தேதி முதல் மே 31-ந்தேதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது.

இதையொட்டி, 10 அணி வீரர்களும், இப்போதே பயிற்சியை தொடங்கிவிட்டனர். ஒவ்வொரு அணி தொடர்பான புதிய செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. மேலும் ஒவ்வொரு அணியும் புதிய ஜெர்சியை அறிமுகம் செய்து வருகின்றன.

இந்த நிலையில், கொல்கத்தா அணியின் புதிய ஜெர்சி இன்றுஅறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வீடியோ ஒன்றை வெளியிட்டு புதிய ஜெர்சியை கொல்கத்தா அணி வெளியிட்டுள்ளது.

### 22ம் தேதி சென்னை சேப்பாக்கத்தில் ஏ.ஆர்.ரகுமானின் இசை விருந்து

**சென்னை, மார்ச் 15:**

10 அணிகள் பங்கேற்கும் 19-வது ஐ.பி.எல். தொடர் 28-ந்தேதி முதல் மே 31-ந்தேதி வரை இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெறுகிறது.

இதையொட்டி, 10 அணி வீரர்களும், இப்போதே பயிற்சியை தொடங்கிவிட்டனர். ஒவ்வொரு அணி தொடர்பான புதிய செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

இந்த நிலையில், 22ம் தேதி சேப்பாக்கத்தில் 'மெகா ரசிகர் நிகழ்வு' என சென்னை அணி நிர்வாகம் நிகழ்ச்சி நடத்துகிறது.

இந்த நிகழ்ச்சியில், சென்னை அணி முன்னாள் வீரர்களான ரெய்னா, ஹைடன் , முரளி விஜய், பத்ரிநாத் உள்ளிட்ட வீரர்கள் கலந்து கொள்ள உள்ளனர். தோனி, ருதுராஜ் உள்ளிட்ட தற்போது உள்ள சென்னை அணி வீரர்களும் கலந்துகொள்ள வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் ஏ.ஆர்.ரகுமானின் இசை நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது.இந்த நிகழ்ச்சிக்கான டிக்கெட் விற்பனை 15ம் தேதி தொடங்க உள்ளது.

## வேளச்சேரி-பரங்கிமலை வழித்தடத்தில் ரயில் சேவை: கடற்கரை - பரங்கிமலை இடையே 86 ரயில்கள் இயக்கம்

**சென்னை, மார்ச் 15:**

கடற்கரை - வேளச்சேரி பறக்கும் ரயில் தடத்தை (மேம் பால ரயில்) பரங்கிமலை வரை 5 கி.மீ.தொலைவுக்கு நீட்டிக்கும் பணி 17 ஆண்டுகளுக்கு பிறகு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நிறைவடைந்தது. இத்தடத்தில் ரயில்வே பாதுகாப்பு தலைமை ஆணையர் ஜனக் குமார் கர்க் மார்ச் 5-ம் தேதி ஆய்வு செய்தார்.

ஏசி மின்சார ரயில் மூலமாக அதிவேக சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. இச்சோதனை ஓட்டம் வெற்றிகரமாக முடிந்ததாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். எனவே, மார்ச் 10 முதல் திட்டமிட்டபடி, மின்சார ரயில் சேவை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், தொழில்நுட்ப ரீதியாக சில பணிகளை முடிக்க ரயில்வே பாதுகாப்பு தலைமை ஆணையர் தெரிவித்திருந்ததால், ரயில் சேவை தொடங்குவது தள்ளி வைக்கப்பட்டது. இந்நிலையில் இந்த வழித்தடத்தில் புறநகர் ரயில் இயக்குவதற்கான தற்காலிக பாதுகாப்பு சான்றிதழை ரயில்வே பாதுகாப்பு தலைமை ஆணையர் வழங்கியுள்ளார்.

தெற்கு ரயில்வே உதவி துணை பொது மேலாளர் செழியனை புழுதிவாக்கம் குடியிருப்போர் நலச் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் என்.பாபு, துணைத் தலைவர் வேணுகோபால், இணை பொதுச் செயலாளர் கண்ணன் ஆகியோர் சந்தித்து மனு அளித்தனர். இதையடுத்து வேளச்சேரி - பரங்கிமலை வழித்தடத்தில் ரயில்கள் இயக்கப்படும் என தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. சென்னை கடற்கரை- வேளச்சேரி இடையே தற்போது 86 ரயில் சேவைகள் உள்ள நிலையில் இவை பரங்கிமலை வரை நீட்டிக்கப்பட்டு, கடற்கரை - பரங்கிமலை இடையே 86 ரயில் சேவைகள் இயக்கப்படவுள்ளன.

மேலும் கடற்கரை, பரங்கிமலையிலிருந்து முதல் ரயில் காலை 5 மணிக்கும், கடைசி ரயில் 10.20 மணிக்கும் இயக்கப் படும். ஆதம்பாக்கத்தில் நிற்காது வேளச்சேரி-பரங்கிமலை இடையே புழுதிவாக்கம், ஆதம்பாக்கம் ரயில் நிலையங்கள் இருக்கும் நிலையில் ஆதம்பாக்கம் ரயில் நிலையத்தில் சில பணிகள் காரணமாக ஒரு வாரத்துக்கு ரயில்கள் நிற்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆதம்பாக்கம், புழுதிவாக்கம் ரயில் நிலையங்களை தூய்மையாக பராமரிக்க வேண்டும் என்றும் புழுதிவாக்கம் ரயில் நிலையத்தில் பார்க்கிங் வசதி ஏற்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை மனு அளித்தனர்.

## பொங்கல் பரிசு தொகுப்பை சிறப்பாக வழங்கிய நியாய விலை கடை பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை உயர்வு: அமைச்சர்



**சென்னை, மார்ச் 15:**

பொங்கல் பரிசு தொகுப்பை சிறப்பாக வழங்கியதற்காக நியாய விலை கடை பணியாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கான ஊக்கத்தொகை ரூ. 3-ஆக உயர்த்தி வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணையிட்டுள்ளதாக அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்தி குறிப்பு: இந்த ஆண்டு பொங்கல் திருநாளை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் தமிழகத்தில் உள்ள 2 கோடியே 22 லட்சத்து 91,710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் தலா 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு ஆகியவற்றுடன் ரூ.3 ஆயிரம் ரொக்கத்தொகை வழங்க முதல்வர் ஆணையிட்டார்.

அதன்படி, கடந்த ஜன.8 முதல் 24 வரை நியாயவிலைக் கடை பணியாளர்களால் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு சிறப்பாக வழங்கப்பட்டது. பொங்கல் பரிசுத் தொகுப்பினை சிறந்த முறையில் வழங்கியதற்காக ரேஷன் கடைப் பணியாளர்களுக்கு கூடுதல் பணிச்சுமையை ஈடுசெய்யும் விதமாக கடந்த காலங்களில் ஒரு குடும்ப அட்டைக்கு 50 பைசா வீதம் வழங்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், நியாயவிலைக் கடைப் பணியாளர்கள் எவ்வித புகாருக்கும் இடமின்றி, செவ்வனே திட்டத்தை செயல்படுத்தியதாகவும் அவ்வகையில் நியாய விலைக்கடை பணியாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு ரூ.3 என்ற வகையில் ஊக்கத் தொகை வழங்க முதல் வரை கேட்டுக் கொண்டனர்.

நியாய விலைக் கடை பணியாளர்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலித்து, 2026-பொங்கல் பரிசுத் தொகுப்பினை சிறந்த முறையில் வழங்கியதற்காக, நியாயவிலைக் கடைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு ஊக்க தொகையாக தலா ரூ.3 வழங்க ஆணையிட்டுள்ளார்.

மேலும் இதற்கு ஆகும் கூடுதல் செலவினம் ரூ.6,47,43,054-ஐ வழங்க நிருவாக அனுமதி அளித்துள்ளார். இதன் மூலம் நியாயவிலைக்கடை பணியாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை முதல்வர் நிறைவேற்றி உள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## வணிகச் செய்திகள்

### இந்திய பங்குச் சந்தையில் ஒரே நாளில் ரூ.10 லட்சம் கோடி இழப்பு!

**சென்னை, மார்ச் 15:**

இந்தியப் பங்குச் சந்தை இன்று வர்த்தகத்தின்போது கடும் சரிவைச் சந்தித்தது. சென்செக்ஸ் 1,470 புள்ளிகள் சரிந்து 74,563-ல் நிலைகொண்டது. தேசிய பங்குச் சந்தை நிஃப்டி 488 புள்ளிகள் வீழ்ச்சி கண்டு 23,151 புள்ளிகளில் நிலைபெற்றது.

பங்குச் சந்தையில் இன்று ஏற்பட்ட திடீர் வீழ்ச்சியின் காரணமாக, முதலீட்டாளர்களுக்கு ஒரே நாளில் ரூ.10 லட்சம் கோடி அளவுக்கு இழப்பு ஏற்பட்டதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. ஈரான் - இஸ்ரேல், அமெரிக்க போர் பதற்றம் மத்திய கிழக்கு நாடுகளில் அதிகரித்து வருவது உலகளாவிய சந்தைகளில் கவலையை ஏற்படுத்தியுள்ளது. போர்ச் சூழல் காரணமாக கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 100 டாலரைத் தாண்டியுள்ளது. இது இந்தியா போன்ற இறக்குமதி சார்ந்த நாடுகளின் பொருளாதாரத்தை பாதிக்கும் என்ற அச்சம் எழுந்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பும் முன்னெப்போதும் இல்லாத வகையில் 92.45 என்ற வரலாற்றுச் சரிவை சந்தித்துள்ளது. உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மையால், வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்களும் இந்தியச் சந்தையிலிருந்து முதலீடுகளை தொடர்ந்து விலக்கி வருகின்றனர். இதுபோன்ற சாதகமற்ற நிலவரங்களால் வங்கி மற்றும் வாகன உற்பத்தித் துறை சார்ந்த நிறுவனங்களின் பங்குகள் கடும் விற்பனை அழுத்தத்திற்கு உள்ளானது.

## எரிபொருள் தட்டுப்பாட்டை தீர்க்க வலியுறுத்தி சென்னையில் ஆட்டோ ஓட்டுநர்கள் போராட்டம்



**சென்னை, மார்ச் 15:**

எரிபொருள், காஸ் தட்டுப்பாட்டை தீர்க்க வலியுறுத்தி ஆட்டோ ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே நடைபெறும் போரின் காரணமாக ஏற்பட்டுள்ள எரிபொருள், காஸ் தட்டுப்பாட்டை தீர்க்க வேண்டும்.

தட்டுப்பாட்டை காரணம் காட்டி எரிபொருள் விலையை ஏற்றி விற்கும் நிறுவனங்கள் மீது தமிழக அரசு மற்றும் மத்திய அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி ஆட்டோ ஓட்டுநர்கள் நல சங்கத்தின் சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் அண்ணா சாலை தாராப்பூர் டவர்ஸ் அருகே நேற்று நடைபெற்றது.

இந்தப் போராட்டத்தில் 200-க்கும் மேற்பட்ட ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் சிஐடியு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஆட்டோ ஓட்டுநர்கள் நலச் சங்கத்தின் மாநில செயல் தலைவர் பாலசுப்பிரமணியம் செய்தியாளர்களிடம் கூறியதாவது: எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சென்னையில் 25 ஆயிரம் ஆட்டோக்கள் இயங்க முடியவில்லை. இன்றைக்கும் அந்த எண்ணிக்கை கூடும், எரிபொருள் தட்டுப்பாட்டால் தனியார் டாக்சி சேவை நிறுவனங்கள் கட்டணங்களை உயர்த்தியுள்ளன. இதனை மத்திய, மாநில அரசுகள் சீர் செய்ய வேண்டும்.

எரிபொருள் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு மட்டும் சம்பந்தப்பட்டது கிடையாது. விளிம்பு நிலையில் இருக்கும் மக்களுக்கு ஆட்டோக்கள்தான் ஆம்புலன்ஸ். எனவே தமிழக அரசு தகுந்த நடவடிக்கைகளை எடுக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

# 100 நாள் வேலைத் திட்டம்: தமிழகத்துக்கு ரூ.729.88 கோடி நிலுவை - மத்திய அரசு

**புதுடெல்லி, மார்ச் 15:**



தேசிய மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் (100 வேலைத் திட்டம்) கீழ், மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய ரூ.9,300 கோடியை மத்திய அரசு நிலுவையில் வைத்துள்ளது. இதில் தமிழ்நாட்டுக்கு ரூ.729.88 கோடி நிலுவையில் உள்ளது.

இது தொடர்பாக மாநிலங்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை இணையமைச்சா கம்லேஷ் பாஸ்வான் வெள்ளிக்கிழமை எழுத்துபூர்வமாக அளித்த பதில்: நிகழ் நிதியாண்டில் பிப்.9-ஆம் தேதி வரையிலான நிலவரப்படி, 100 வேலைத் திட்டத்தின் கீழ் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு அளிக்க வேண்டிய ரூ.9,308.67 கோடி நிலுவையில் உள்ளது.


அதிகபட்சமாக உத்தர பிரதேசத்துக்கு ரூ.1,158.71 கோடி நிலுவையில் உள்ளது.

இதைத்தொடர்ந்து ஆந்திரத்துக்கு ரூ.1,014.60 கோடி, காநாடகத்துக்கு ரூ.746.65 கோடி, தமிழ்நாட்டுக்கு ரூ.729.88 கோடி, மத்திய பிரதேசத்துக்கு ரூ.704.64 கோடி நிலுவையில் உள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் முந்தைய ஆண்டுகளுக்கான நிலுவைத் தொகையை, புதிதாக தொடங்கும் ஒவ்வொரு நிதியாண்டின் தொடக்கத்தில் மத்திய அரசு விடுவிக்கிறது.

நிகழ் நிதியாண்டில் பிப்.8-ஆம் தேதி நிலவரப்படி, இந்தத் திட்டத்தின் கீழ், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு ஏற்கெனவே ரூ.78,004.59 கோடியை மத்திய அரசு விடுவித்துள்ளது. இதில் ஊதியத்துக்காக ரூ.64,789.49 கோடி, நிாவாக உபகரணங்கள் உள்ளிட்டவற்றுக்காக ரூ.13,215.10 கோடி அடங்கும் என்று தெரிவித்தாா.

# தொழிலதிபர் அனில் அம்பானியின் ரூ.581 கோடி சொத்துகள் முடக்கம்




**புதுடெல்லி, மார்ச் 15:**

தொழிலதிபர் அனில் அம்பானிக்கு சொந்தமான ரிலையன்ஸ் ஹோம் பைனான்ஸ் நிறுவனம் (ஆர்எச்எப்எல்), ரிலையன்ஸ் வர்த்தக நிதி நிறுவனம் (ஆர்சிஎப்எல்) ஆகியவை ரூ.11,000 கோடிக்கு மேல் கடன் பெற்று திருப்பிச் செலுத்தவில்லை என யெஸ் வங்கி, இந்திய யூனியன் வங்கி, மகாராஷ்டிரா வங்கி ஆகியவை புகார் அளித்தன.

இதுதொடர்பாக சிபிஐ வழக்குப்பதிவு செய்து விசாரித்தது. அமலாக்கத் துறை கடந்த 6ம் தேதி பல இடங்களில் சோதனை நடத்தியது. இதில் முறைகேடு உறுதியானதை அடுத்து கோவா, கேரளா, கர்நாடகா, பஞ்சாப், தமிழ்நாடு, உத்தர பிரதேசம், மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்களில் அனில் அம்பானிக்கு சொந்தமான ரூ.581.65 கோடி மதிப்பிலான நிலங்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது. அந்நிய செலாவணி மேலாண்மை சட்டத்தின் கீழ் இந்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன. இதுவரை மொத்தம் ரூ.16,310 கோடி மதிப்பிலான சொத்துக்களை அமலாக்கத்துறை முடக்கியுள்ளது.

# டெல்லி மதுபான கொள்கை ஊழல் வழக்கில் கவிதாவுக்கு சிபிஐ மீண்டும் சம்மன்

**ஹைதராபாத், மார்ச் 15:**

டெல்லி மதுபான ஊழல் வழக்கில் தெலங்கானா முன்னாள் மேலவை உறுப்பினரான கவிதாவுக்கு சிபிஐ அதிகாரிகள் நேற்று சம்மன் வழங்கினர்.

டெல்லி மதுபான ஊழல் வழக்கு தொடர்பாக தெலங்கானா மாநில முன்னாள் முதல்வர் கே.சந்திரசேகர ராவின் மகளும், நிஜாமாபாத் முன்னாள் மேலவை உறுப்பினருமான கவிதாவை சிபிஐ அதிகாரிகள் கைது செய்து டெல்லி திஹார் சிறையில் அடைத்தனர். அங்கு சிபிஐ நீதிமன்றத்தில் அவர் நேரில் விசாரணைக்கு ஆஜரானார்.

சுமார் ரூ.100 கோடி வரை நடந்த ஊழலில் கவிதாவுக்கும் தொடர்பு இருப்பதாக முதலில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டது. அதன் பின்னர், இதில் கவிதாவுக்கு எந்தவித தொடர்பும் இல்லை எனக் கூறி, சிபிஐ நீதிமன்றம் அவரை விடுவித்தது. இதைத் தொடர்ந்து தனது தந்தையின் பிஆர்எஸ் கட்சியில் இருந்து வெளியேறி, விரைவில் புதிய கட்சியை தொடங்க உள்ளார் கவிதா.

இதையடுத்து வழக்கில் நிரபராதி என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தனது குடும்பத்தாருடன் சமீபத்தில் திருப்பதி ஏழுமலையானை மலையேறி சென்று தரிசனம் செய்து நேர்த்திக்கடனையும் நிறைவு செய்தார்.

இந்நிலையில், நேற்று ஹைதராபாத்தில் அவரது வீட்டுக்குச் சென்ற சிபிஐ அதிகாரிகள், ஹைதராபாத் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதாக கூறி, அதற்கான சம்மனை கவிதாவிடம் வழங்கினர். இது தொடர்பாக தனது வழக்கறிஞர்களை சந்தித்து பேசி, சட்டப்படி இதனை எதிர்கொள்வேன் என்று கவிதா தெரிவித்துள்ளார்.

# திருப்பதியில் குடோனில் பதுக்கிய 665 காஸ் சிலிண்டர்கள் பறிமுதல்

**திருப்பதி, மார்ச் 15:**




நாடு முழுவதும் வர்த்தக சிலிண்டர்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா - ஈரான் போரால் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையை சரி செய்ய மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில், நேற்று திருப்பதி அடுத்துள்ள திருச்சானூர் - எம்.ஆர் பல்லி சாலையில் ஒரு குடோனில் வர்த்தக சிலிண்டர்கள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக சிவில் சப்ளை அதிகாரிகளுக்கு தகவல் வந்தது.

அதன்பேரில் அவர்கள் நேற்று மாலை 7 மணியளவில் அந்த குடோனுக்கு ஆய்வு நடத்த சென்றனர். இவர்களை கண்டதும் பிரம்மா ரெட்டி எனும் உரிமையாளர் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார். பின்னர் அங்கு அதிகாரிகள் சோதனையிட்டு 585 வர்த்தக சிலிண்டர்கள், 80 வீட்டு சிலிண்டர்களை பறிமுதல் செய்தனர்.

பாரத் காஸ் உரிமம் இந்த குடோனுக்கு கடந்த 2019-ல் காலாவதி ஆகி விட்டாலும், தொடர்ந்து அங்கு தனியார் சிலிண்டர் வியாபாரம் ரகசியாக நடந்து வந்துள்ளது. இங்கிருந்து திருப்பதிக்கு மட்டுமல்லாமல் திருமலைக்கு ‘கோ காஸ்’ எனும் பெயரில் நிபந்தனைகளை மீறி அனுப்பப்பட்டு வந்துள்ளது.

இந்த குடோனை நடத்தி வந்தவர் முன்னாள் திருப்பதி தேவஸ்தான அறங்காவலரும், திருப்பதி எம்.எல்.ஏவுமான கருணாகர் ரெட்டியின் ஆதரவாளர் என்பது தெரியவந்துள்ளது.

இது குறித்து போலீஸார் விசாரிக்கின்றனர்.

# உரம் தட்டுப்பாடு இல்லை: நிர்மலா சீதாராமன் பதில்

**புதுடெல்லி, மார்ச் 15:**

நடப்பு நிதியாண்டில் கூடுத லாக ரூ.2.81 லட்சம் கோடி செலவினத்துக்கு அனுமதி கோரி 2-ம் கட்ட துணை மானியக் கோரிக்கை மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இதன் மீதான விவாதத்தில் பதில் அளித்து நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியதாவது:

மேற்கு ஆசியாவில் தற்போது நிலவும் சூழல் காரணமாக ஏற்படும் சவால்களை சமாளிக்க, ரூ.1 லட்சம் கோடி மதிப்பில் பொருளாதார நிலைத்தன்மை நிதி உருவாக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது துணை மானிய கோரிக்கை காரணமாக 2025-26 பட்ஜெட் மதிப்பீட்டை தாண்டி செலவினம் அதிகரிக்கவில்லை. நடப்பு நிதியாண்டுக்கான மாற்றியமைக்கப்பட்ட மதிப்பீட்டில் மொத்த செலவை ரூ.50.65 லட்சம் கோடியிலிருந்து, ரூ.49.65 லட்சம் கோடியாக மத்திய அரசு குறைத்துள்ளது. ஜனவரி மாதம் வரை அரசு ரூ.36.90 லட்சம் கோடி செலவு செய்துள்ளது. உரம் மானியத்துக்காக கூடுதலாக ரூ.19,230 கோடியும், பிரதமரின் கரீப் கல்யாண் அன்ன யோஜனா மானியத்துக்கு ரூ.23,641 கோடி செலவு செய்ய அனுமதி கோரப்பட் டுள்ளது. பாதுகாப்புத்துறைக்கு ரூ.41,822 கோடி உட்பட இதர செலவுக்கும் அனுமதி கோரப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரத்தில் பற்றாக்குறை ஏதும் நிலவவில்லை. மானியங்களுக்கு துணை மானியக் கோரிக்கையில் போதிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

# பருப்பு வகைகள் சாகுபடிக்கு உச்ச நீதிமன்றம் வலியுறுத்தல்



**புதுடெல்லி, மார்ச் 15:**

கிசான் மகா பஞ்சாயத்து அமைப்பு தாக்கல் செய்த ஒரு மனுவை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு நேற்று விசாரித்தது.

பின்னர் உச்ச நீதிமன்ற அமர்வு கூறியதாவது: இப்போது கோதுமை மட்டுமே ஒரே விருப்பமாக இல்லை. கோதுமை மற்றும் அரிசியிலிருந்து விலகிச் செல்ல வேண்டிய நேரம் இது. வடக்கு மற்றும் மத்திய இந்தியாவில் கோதுமை மற்றும் நெல்லுக்கு ஏற்ற மாற்றுப் பொருளாகவும், தென் பிராந்தியங்களில் பிற பயிர்களுக்கு மாற்றாகவும் பயறு வகைகளை முன்னிறுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

பருப்பு வகைகள் சாகுபடிக்கு விவசாயிகள் மாறுவதை ஊக்குவிக்க, வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பல்வேறு துறைகளும் சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் புரிதலுடன் பணியாற்ற வேண்டும். குறைந்தபட்ச ஆதரவு விலை மூலம் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர்.

# 5 ஆண்டுகளில் 6,800 ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் மூடல்: தகவல் தொழில்நுட்பம், சுகாதாரத் துறைகள் கடும் பாதிப்பு

**புதுடெல்லி, மார்ச் 15:**




இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட 6,789 ஸ்டார்ட்-அப் (புத்தாக்க) தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதாக மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

உலக அளவில் வேகமாக வளரும் ஸ்டார்ட்-அப் தொழில்துறையைக் கொண்ட நாடாக இந்தியா கருதப்பட்டாலும், சந்தை நிலவரம் மற்றும் நிதி நெருக்கடி காரணமாக இந்த நிறுவனங்கள் முடங்கின.

மக்களவையில் இது தொடா்பான கேள்விக்கு மத்திய வாத்தகத் துறை இணையமைச்சா ஜிதின் பிரசாத் எழுத்துபூா்வமாக அளித்த பதிலில், ‘ஜனவரி 31-ஆம் தேதி நிலவரப்படி, தொழில் மற்றும் உள்நாட்டு வாத்தக மேம்பாட்டுத் துறையால் மொத்தம் 2,12,283 ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதில் சுமாா் 3.2 சதவீத நிறுவனங்கள் மூடப்பட்ட நிறுவனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

துறை வாரியாக, தகவல் தொழில்நுட்ப (ஐ.டி.) சேவைத் துறையே மிக மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ளது. இத்துறையில் மட்டும் 875 நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளன. கடுமையான போட்டி மற்றும் நிறுவனங்களின் செலவினக் குறைப்பு போன்ற காரணங்களால் இத்துறை கடும் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளது. இதற்கு அடுத்தபடியாக, சுகாதாரத் துறையில் 553 நிறுவனங்களும், கல்வித் தொழில்நுட்பத் துறையில் 491 நிறுவனங்களும் மூடப்பட்டுள்ளன.

கரோனா பெருந்தொற்று காலத்தில் பெரும் எழுச்சி கண்ட கல்வி மற்றும் சுகாதாரத் துறைகள், இயல்புநிலை திரும்பிய பிறகு போதிய முதலீடுகள் கிடைக்காமலும், நீண்டகால முதலீட்டுத் தேவைகளாலும் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

இவை தவிர, உணவு மற்றும் பானங்கள், விவசாயம் மற்றும் சில்லறை வா்த்தகம் சாா்ந்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களும் கணிசமான அளவில் முடங்கியுள்ளன. வளா்ந்துவரும் ஏ.ஐ. மற்றும் பின்டெக் துறைகளிலும்கூட சில நிறுவனங்கள் சரிவைச் சந்தித்துள்ளன.

# பிரதமர் மோடி, ஜெய்சங்கருக்கு காங். எம்.பி. சசி தரூர் பாராட்டு

**புதுடெல்லி, மார்ச் 15:**

நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களுக்கு நேற்று காங்கிரஸ் எம்.பி சசி தரூர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் போர்ப் பதற்றத்தை தணிக்க அனைவரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும். அந்த வகையில் ஈரான் அதிபருடன் பிரதமர் மோடியும் அமைச்சர் ஜெய்சங்கரும் அமைதிப் பேச்சு நடத்தியது வரவேற்கத்தக்கது. உலக நன்மைக்காக இந்தப் போர் முடிவுக்கு வரவேண்டும். இதுதொடர்பான அமைதிக் குரல் கொடுப்பதில் நாம் முதலாவதாக வழிநடத்த வேண்டும். அமெரிக்காவும் இஸ்ரேலும்தான் முதலில் தாக்குதலை தொடங்கி வைத்தன. புத்தரும் காந்தியும் பிறந்த நமது இந்திய மண், அமைதி, அகிம்சையை மிகப்பெரிய மரபாகக் கொண்டுள்ளது. அந்த மரபில்தான் நாம் நிற்க வேண்டும். இவ்வாறு சசி தரூர் எம்.பி. கூறினார்.

# ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்திய கப்பல்களை அனுமதிக்க ஈரான் தூதர் உறுதி!

**புதுடெல்லி, மார்ச் 15:**

மேற்கு ஆசியாவில் நிலவி வரும் மோதல்களுக்கு மத்தியில், ‘ஹார்முஸ் ஜலசந்தி வழியாக இந்தியா செல்லும் கப்பல்களுக்கு பாதுகாப்பான வழித்தடம் வழங்கப்படும்’ என்று இந்தியாவுக்கான ஈரான் தூதர் முகமது ஃபத்தாலி உறுதியளித்தார். ஹார்முஸ் ஜலசந்தி வழியாக, இந்தியக் கப்பல்களைப் பாதுகாப்பாகக் கடந்து செல்ல ஈரான் அனுமதிக்குமா என்ற கேள்விக்குப் பதிலளித்த இந்தியாவுக்கான ஈரான் தூதர் முகமது ஃபத்தாலி, “ஆம். ஏனெனில் இந்தியாவும் நாங்களும் நண்பர்கள். இதை நீங்கள் எதிர்காலத்தில் காண்பீர்கள். ஏனெனில், நாங்கள் அதை உறுதியாக நம்புகிறோம். ஈரானும் இந்தியாவும் நட்பு நாடுகள் என்று நாங்கள் நம்புகிறோம். எங்களுக்குப் பொதுவான நலன்களும், பொதுவான எதிர்காலமும் உள்ளன. இந்திய மக்களின் துன்பம் எங்கள் துன்பமே; அதுபோலவே எங்கள் துன்பமும் இந்திய மக்களின் துன்பமாகும். இந்தக் காரணத்தினால், இந்திய அரசாங்கம் எங்களுக்கு உதவுகிறது; நாங்களும் இந்திய அரசாங்கத்துக்கு உதவ வேண்டும். இந்தியாவில் உள்ள தூதர்களாகிய நாங்கள், இந்தப் பிராந்தியத்தில் எங்களுக்குப் பொதுவான எதிர்காலம் இருப்பதாக நம்புகிறோம். இந்தக் காரணத்தினால், ஈரானின் அனைத்து உயர்மட்ட அதிகாரிகளும், இந்திய அரசாங்கத்துக்குத் தேவையான உதவிகளைச் செய்து வழிவகை செய்யுமாறு இந்தியாவில் உள்ள ஈரானியத் தூதரகத்துக்கு அறிவுறுத்தியுள்ளனர்” என்று அவர் கூறினார்.

# இந்தியாவில் அவசர கால தேவைக்காக கச்சா எண்ணெய் சேமிக்க பூமிக்கடியில் 3 குகைகள்!

**புதுடெல்லி, மார்ச் 15:**




அவசர கால தேவைக்கு பயன்படுத்தும் வகையில் பூமிக்கடியில் 3 ரகசிய குகைகளில் மத்திய அரசு கச்சா எண்ணெயை சேமித்து வைத்துள்ளது.

அமெரிக்க, இஸ்ரேல் கூட்டுப் படை மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக உலக நாடுகளுக்கான கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டு, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையில் போர் போன்ற அவசர காலங்களில், திடீர் தேவை ஏற்பட்டாலோ, கச்சா எண்ணெய் சப்ளை செய்யும் நிறுவனங்கள் நிறுத்திக் கொண்டாலோ அவசர தேவைக்கு பல லட்சம் டன்கள் கச்சா எண்ணெயை பூமிக்கடியில் சேமித்து வைக்கும் பணியை மத்திய அரசு பல ஆண்டுகளாக மேற்கொண்டு வந்தது.

ஆந்திராவில் விசாகப்பட்டினம், கர்நாடகாவில் மங்களூரு, படூர் என தென்னிந்தியாவில் 3 இடங்களில் ரூ.4,100 கோடி செலவில் இதற்காக பூமிக்கடியில் குகைகள் அமைக்கப்பட்டன. இவற்றில் மிகப் பழமையானது விசாகப்பட்டினத்தில் உள்ளது. இதனை பெட்ரோலிய இருப்புகளை பராமரிக்கும் இந்திய பொதுத்துறை நிறுவனமான ஐஎஸ்பிஆர் 10 ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தியது.

இந்த மூன்று குகைகளும் மொத்தம் 5.33 மில்லியன் மெட்ரிக் டன் கச்சா எண்ணெயை (40 மில்லியன் பீப்பாய்கள்) வைத்திருக்க முடியும். இது சுமார் 10 நாட்களுக்கு நம் நாட்டின் தேவையை பூர்த்தி செய்யக் கூடியது. வெளிப்புற தாக்குதல்கள் அல்லது ட்ரோன் தாக்குதல்கள் மற்றும் இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்படாத வகையில் கச்சா எண்ணெயை இங்கு பாதுகாப்பாக சேமித்து வைக்க முடியும்.

பராமரிப்பு செலவும் குறைவாக இருக்கும். பூமிக்கு அடியில் ஆழமாக இடத்தில் சேமிப்பு கிடங்கு இருப்பதால் தீ விபத்து, எண்ணெய்க் கசிவு போன்ற அபாயங்களும் குறைவாக இருக்கும். மத்திய அரசு இந்த இருப்புகளை இன்னும் பயன்படுத்தவில்லை. தேவைப்படும் போது இதை பயன்படுத்தும். மாற்று ஏற்பாடுகளுக்கான கால அவகாசத்தை மத்திய அரசுக்கு இந்த இருப்பு வழங்கும்.

## ரூ.300 கோடி போதைப் பொருள் கடத்தியதாக 10 பேர் கைது: இலங்கை கடற்படை நடவடிக்கை

**கொழும்பு, மார்ச் 15:**

இந்தியப் பெருங்கடலில் 654 கிலோ போதைப் பொருட்களை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்து அந்நாட்டைச் சேர்ந்த சேர்ந்த 10 பேரை கைது செய்தனர்.

இந்தியப் பெருங்கடலில் சந்தேகத்துக்குரிய முறையில் பயணித்த ஒரு ஆழ்கடல் மீன்பிடி படகை இலங்கை கடற்படையினர் கண்டறிந்து திக்கோவிட்ட கடற்படை முகாமுக்குக் கொண்டு வந்தனர்.

படகில் இருந்த 478 கிலோ ஐஸ் போதைப் பொருள் மற்றும் 176 கிலோ போதைப்பொருளை கண்டறிந்து பறிமுதல் செய்யப்பட்டன. படகில் இருந்த இலங்கையைச் சேர்ந்த 10 பேரை கடற்படையினர் கைது செய்தனர்.

மேலும் 11 துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு ரூ.300 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த போதைப் பொருட்கள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டன, கடத்தலில் தொடர்புடைய நபர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்து இலங்கை கடற்படையினர் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

## மொஜ்தபா கமேனி பற்றி தகவல் அளித்தால் ரூ. 92.54 கோடி பரிசு: அமெரிக்கா அறிவிப்பு

ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா காமேனி மற்றும் பல ஈரான் தலைவர்கள் மற்றும் ராணுவ அதிகாரிகள் பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை 10 மில்லியன் டாலர் வரை வெகுமதியை அறிவித்துள்ளது. அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்ட பிறகு அவரது மகன் மொஜ்தபா காமேனி புதிய உச்ச தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

அவர் உள்பட ஈரானின் பல முக்கிய தலைவர்களை 'ஈரானிய பயங்கரவாதத் தலைவர்கள்' என்று குறிப்பிட்டு அமெரிக்க பாதுகாப்புத் துறை வெளியிட்ட எக்ஸ் பதிவில், "இந்த நபர்கள் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் பல்வேறு படைப்பிரிவுகளை கட்டளையிட்டு வழிநடத்துகிறார்கள். இவர்களை பற்றிய தகுதியான தகவல்கள் அளித்தால் 10 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (இந்திய மதிப்பில் ரூ. 92.54 கோடி) வரை வெகுமதி அளிக்கப்படும். இது நீதிக்கான வெகுமதி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மிகப்பெரிய பரிசாகும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்கா- இஸ்ரேல் தாக்குதலில் ஈரானில் இதுவரை 1,444 பேர் உயிரிழப்பு

**டெஹ்ரான், மார்ச் 15:**

ஈரானில் கடந்த 28-ந் தேதி போரை தொடங்கிய அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள், முதல் நாளிலேயே அந்த நாட்டின் உச்சபட்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியை படுகொலை செய்தது. இதைத்தொடர்ந்து அவரது மகன் மொஜ்தபா காமேனி புதிய உச்சபட்ச தலைவராக தேர்வு செய்யப்பட்டு உள்ளார். அவர் முதல் முறையாக நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்டு இருந்தார்.

அதில் ஈரானில் கொல்லப்பட்ட பள்ளி மாணவிகள் உள்ளிட்டோருக்காக பழிவாங்கப்படும் என சூளுரைத்து இருந்த அவர், அமெரிக்க படைத்தளங்கள் அமைந்திருக்கும் அண்டை நாடுகளை தொடர்ந்து தாக்குவோம் என்றும் மிரட்டல் விடுத்திருந்தார். அந்த நாடுகள் தங்கள் நாட்டில் உள்ள அமெரிக்க படைத்தளங்களை மூடுமாறு அறிவுறுத்திய அவர். தங்களை அமெரிக்கா பாதுகாக்கிறது என்ற கருத்து வெறும் பொய்யைத்தவிர வேறு எதுவும் இல்லை என்றும் குறிப்பிட்டு இருந்தார். இந்நிலையில் ஈரான் மீதான அமெரிக்கா - இஸ்ரேல் தாக்குதல்களில் இதுவரை குறைந்தது 1,444 பேர் கொல்லப்பட்டுள்ளதோடு, 18,551 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரானில் இதுவரை 6 ஆயிரத்துக்கு அதிகமான இலக்குகளை தாக்கியதாகவும், 30-க்கும் மேற்பட்ட கண்ணிவெடி பதிக்கும் கப்பல்களை தகர்த்த தாகவும் அமெரிக்க ராணுவம் தெரிவித்து உள்ளது. ஈரான் தலைநகர் டெஹ்ரானில் நேற்று பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாக வருடாந்திர குத்ஸ் தினம் அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி தலைநகர் டெஹ்ரானில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி இஸ்ரேல் மற்றும் அமெரிக் காவுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பினர்.

இந்த நிகழ்வுக்கு சிறிது நேரத்துக்கு முன்னதாக அந்த பகுதியில் பெருமளவில் வான்தாக்குதல் நடந்தது. அங்கு பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. இதனால் அப்பகுதியே குலுங்கியது.

# அமெரிக்காவின் இரட்டை வேடம் : ரஷிய எண்ணெய் விவகாரத்தில் ஈரான் கடும் விமர்சனம்

**தெஹ்ரான், மார்ச் 15:**

ரஷியா-உக்ரைன் பிரச்சினையை தொடர்ந்து ரஷியாவிடம் இருந்து எண்ணெய் கொள்முதலை மேற்கத்திய நாடுகள் நிறுத்தின. ஆனால் ரஷியாவின் அதீத தள்ளுபடியை பயன்படுத்திய இந்தியா அதிக இறக்குமதியில் ஈடுபட்டன. இது அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்புக்கு கோபத்தை ஏற்படுத்தியது. இதனால் இந்தியா மீது 50 சதவீதம் வரிவிதித்தார். இதனை தொடர்ந்து ரஷியாவிடம் இருந்து எண்ணெய் இறக்குமதியை நிறுத்துவதாக இந்திய பிரதமர்



மோடி கூறியதாக டிரம்ப் தெரிவித்தார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் இந்தியாவின் ரஷியாவிடம் இருந்து எண்ணெய் கொள்முதலை குறைத்தது.

இந்நிலையில் வளைகுடாவில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தி வழியாக செல்லும் கப்பல் பாதைகளை ஈரான் தடுத்துள்ள நிலையில், இந்தியா தனது எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய ரஷியாவிடம் இருந்து கச்சா எண்ணெயை வாங்குவதற்கு அமெரிக்கா 30 நாட்கள் அனுமதி அளித்துள்ளது.

இது தொடர்பாக ஈரான் வெளியுறவுத்துறை மந்திரி அப்பாஸ் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது:-


ரஷியாவிலிருந்து எண்ணெய் இறக்குமதியை நிறுத்துமாறு இந்தியாவை மிரட்டுவதில் அமெரிக்கா பல மாதங்கள் செலவிட்டது. ஈரானுடனான இரண்டு வாரப் போருக்குப் பிறகு, வெள்ளை மாளிகை இப்போது இந்தியா உட்பட உலக நாடுகளிடம் ரஷிய கச்சா எண்ணெயை வாங்குமாறு கெஞ்சுகிறது. ஈரான் மீதான சட்டவிரோத போரை ஆதரிப்பது ரஷியாவிற்கு எதிராக அமெரிக்காவின் ஆதரவைப் பெறும் என்று ஐரோப்பா நினைத்தது என்று அதில் பதிவிட்டுள்ளார்.

# ஹார்மூஸ் ஜலசந்தியில் இந்திய கொடியுடன் கூடிய 2 சரக்கு கப்பல்களுக்கு ஈரான் அனுமதி

**தெஹ்ரான், மார்ச் 15:**

மேற்காசிய போரின் ஒரு பகுதியாக ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது. இதனால், கப்பல்களில் பணியாற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்த ஊழியர்கள் தாக்கப்படும் சம்பவங்களும் நடந்து வருகின்றன.

ஈரானை ஒட்டியுள்ள பெர்சியன் வளைகுடா பகுதியில், இந்திய கொடியுடன் கூடிய 28 கப்பல்கள் நிறுத்தப்பட்டு உள்ளன. அவற்றில் 24 கப்பல்கள் ஈரானின், ஹார்மூஸ் ஜலசந்திக்கு மேற்கே உள்ளன. அதில், 677 இந்திய பணியாளர்கள் உள்ளனர். இதேபோன்று 4 கப்பல்கள் ஹார்மூஸ் ஜலசந்திக்கு கிழக்கே



நிறுத்தப்பட்டு உள்ளன. அதில், 101 இந்திய பணியாளர்கள் உள்ளனர் என தெரிய வந்துள்ளது. கடந்த 3 நாட்களாக இதே நிலை நீடிக்கிறது. இந்த நிலையில், ஹார்மூஸ் ஜலசந்தியில் கியாஸ் சிலிண்டர் ஏற்றி வந்த, இந்திய கொடியுடன் கூடிய 2 கப்பல்களுக்கு ஈரான் அனுமதி அளித்துள்ளது. அவற்றில் ஷிவாலிக் என்ற பெயரிடப்பட்ட கப்பல், ஓமன் வளைகுடா பகுதியில் இருக்கின்ற விவரம் கடல்சார் போக்குவரத்து கண்காணிப்பு தளத்தில் உள்ள விவரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது. இந்த கப்பல், வருகிற 21-ந்தேதி சேர வேண்டிய இடத்திற்கு சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன் இந்தியாவுக்கான ஈரான் தூதர் முகமது பதாலி பேசும்போது, ஈரான் மற்றும் இந்தியா நாடுகளுக்கு இடையே நீண்டகால நட்பு மற்றும் பகிரப்பட்ட நலன்கள் ஆகியவற்றை கவனத்தில் கொண்டு, மேற்காசிய மோதலின்போதும், ஹார்மூஸ் ஜலசந்தி வழியே இந்தியாவுக்கான கப்பல்கள் பாதுகாப்பாக செல்வதற்கான வழியை ஈரான் வழங்கும் என உறுதிப்படுத்தினார்.

# 10 பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஜப்பான் கடலை நோக்கி ஏவிய வடகொரியா - அதிகரிக்கும் பதற்றம்

**பியாங்யாங், மார்ச் 15:**

அமெரிக்கா மற்றும் தென்கொரியா நாடுகள் 11 நாட்கள் நடைபெறும் 'ப்ரீடம் ஷீல்ட்' என்ற ராணுவ பயிற்சியை தொடங்கியுள்ளன. இதனைத் தங்களுக்கு எதிரான படையெடுப்பு ஒத்திகை என வடகொரியா கருதுகிறது.

இந்த கூட்டு ராணுவப் பயிற்சிக்கு பதிலடி கொடுக்கும் வகையில், வடகொரியா மீண்டும் தனது ஏவுகணை சோதனைகளைத் தீவிரப்படுத்தி உள்ளது.

வடகொரியாவின் மேற்கு கடற்கரைப் பகுதியில் உள்ள தீவுகளை இலக்காகக் கொண்டு, 'சோ ஹியோன்' என்ற அதிநவீன போர்க்கப்பலில் இருந்து கடந்த 11-ம் தேதி குரூஸ் ஏவுகணைகள் ஏவப்பட்டன. இந்த ஏவுகணைகள் கடலில் உள்ள இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கி அழித்தது. இந்த ஏவுகணை சோதனையை வடகொரிய அதிபர் கிம் ஜாங் அன், தனது 13 வயது மகள் கிம் ஜு ஏ-வுடன் நேரில் பார்வையிட்டார்.

சோதனைக்குப் பிறகு பேசிய கிம் ஜாங் அன், "நமது நாடு எப்போதுமே வலிமையான மற்றும் நம்பகமான அணு ஆயுதத் தற்காப்புத் திறனைப் பெற்றிருக்க வேண்டும்.

எதிரிகளின் எந்தவொரு அச்சுறுத்தலையும் முறியடிக்க நமது கடற்படை தயாராக இருப்பதை இந்த சோதனை நிரூபித்துள்ளது" என்று எச்சரித்திருந்தார்.

இந்நிலையில் அமெரிக்கா - தென்கொரியா நடத்தி வரும் வருடாந்திர ராணுவ பயிற்சியை கண்டிக்கும் விதமாக, ஜப்பான் கடற்பகுதியை நோக்கி சுமார் 10 பாலிஸ்டிக் ஏவுகணைகளை ஏவி வடகொரியா இன்று சோதனை செய்துள்ளது.

ஜப்பானின் பிரத்தியேக பொருளாதார மண்டலத்திற்கு வெளியே உள்ள கடல் மட்டத்தில் இந்த ஏவுகணை விழுந்திருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அங்கு நிலைமையை மதிப்பிடுவதற்கும் ஏதேனும் சேதம் உள்ளதா என்பதை சரிபார்ப்பதற்கும் ஜப்பான் பிரதமரின் நெருக்கடி மேலாண்மை மையம், அவசரகால பதிலளிப்பு குழுவை அமைத்துள்ளது.

வடகொரியாவின் இந்த ஏவுகணை சோதனையால், கொரிய தீபகற்பத்தில் மீண்டும் போர் மேகங்கள் சூழத் தொடங்கியுள்ளன.

## 20 சதவீத ஊழியர்களை பணி நீக்கம் செய்ய மெட்டா திட்டம்




**நியூயார்க், மார்ச் 15:**

ஏஐ எனும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் பல துறைகளில் கால்பதித்துள்ளது. ஏஐ-யை பயன்படுத்தி விரைவாகவும், துல்லியமாகவும் பணிகளை செய்ய முடிகிறது என்பதால் பல நிறுவனங்கள் ஊழியர்களை பணி நீக்கம் செய்து வருகிறது. குறிப்பாக பிரபல ஐடி நிறுவனங்கள் ஏஐ-வை காரணம் காட்டி பணி நீக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அமேசான், ஆரக்கிள் என உலகின் டாப் நிறுவனங்கள் கூட ஆட்குறைப்பை கையில் எடுத்துள்ளதால், ஐடி ஊழியர்கள் கலக்கம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில், பேஸ்புக், இன்ஸ்டகிராம், வாட்ஸ் அப் உள்ளிட்டவற்றின் தாய் நிறுவனமாக மெட்டாவும் ஆட்குறைப்பு செய்ய இருப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. ஏஐ ஆதிக்கம் காரணமாக, சுமார் 20% ஊழியர்களை பணிநீக்கம் செய்ய மெட்டா திட்டமிட்டுள்ளதாம். 2025 டிசம்பர் நிலவரப்படி, மெட்டா நிறுவனத்தில் 79,000 ஊழியர்கள் பணியாற்றி வரும் நிலையில், சுமார் 15 ஆயிரம் பேர் நீக்கப்படலாம் என்று தெரிகிறது.

## அமெரிக்கா: விசா மோசடி வழக்கில் 11 இந்தியர்கள் கைது

**வாஷிங்டன், மார்ச் 15:**

அமெரிக்காவில் பல்வேறு மாகாணங்களில் உள்ள மளிகைக் கடைகள் மற்றும் உணவகங்களில் போலியான ஆயுதங்களை காட்டி கொள்ளை சம்பவங்களை அரங்கேற்றியதாக, அங்கு சட்டவிரோதமாகத் தங்கியிருந்த 11 இந்தியர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. வெளிநாட்டினருக்கு வழங்கப்படும் 'யு-விசா' என்ற சிறப்புத் தகுதியைப் பெறுவதே இவர்களின் சதி திட்டம் என அதிகாரிகள் தெரிவித்தனர். போலியாக ஆயுதங்களை காட்டி கொள்ளைச் சம்பவத்தை நடத்தி அதில் தன்னை ஒரு "பாதிக்கப்பட்ட நபர்" போலக் காட்டி, அதன் மூலம் யு-விசா என்ற சிறப்புத் தகுதியைப் பெறுவதே இவர்களின் ஒரே நோக்கம். இந்த விசா கிடைத்தால், அவர்கள் சட்டப்பூர்வமாக அங்கு தங்குவதோடு, பின்னர் கிரீன் கார்டு பெறவும் தகுதி பெறுவார்கள் என்று கூறப்படுகிறது. யு விசாவின் முலம் புலம்பெயர்ந்தோருக்கு வேலை அங்கீகாரத்தையும் 5-10 ஆண்டுகளுக்குள் கிரீன் கார்டு பெறுவதற்கான குறுக்குவழியாக பயன்படுத்துகிறார்கள். இந்த கொள்ளைச் சம்பவங்கள் அனைத்தும் அங்குள்ள கண்காணிப்பு கேமராக்களில் பதிவாகுமாறு அவர்கள் பார்த்துக்கொண்டனர். பின்னர், அந்தப் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு போலீசில் புகார் அளித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ஈரானின் மிக முக்கிய தீவு நகரமான கார்க்கில் அமெரிக்கா சக்தி வாய்ந்த குண்டு வீச்சு

**தெஹ்ரான், மார்ச் 15:**

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு ஈரானும் வளைகுடா நாடுகளில் தாக்குதல் நடத்தி வருவதால் பெரும் பதற்றம் நிலவி வருகிறது. சர்வதேச அளவில் வர்த்தகமும் பாதிக்கப்பட்டுள்ளது. ஈரானின் புதிய தலைவர் மொஜ்தபா கமேனியின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லை என்று இஸ்ரேல் அறிவித்துள்ளதால், கோபம் அடைந்த ஈரான் நேற்று முதல் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. பதிலுக்கு அமெரிக்காவும் தனது பதிலடியை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், ஈரானின் மிக முக்கிய தீவு நகரமான கார்க் தீவில் அமெரிக்கா சக்தி வாய்ந்த குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தி வருகிறது.இது தொடர்பாக டிரம்ப் கூறுகையில், ஈரானின் முக்கியமான இடமாக கருதப்படும் கார்க் தீவில் உள்ள அனைத்து ராணுவ இலக்குகளும் முழுமையாக அழிக்கப்பட்டுள்ளன. அந்த தீவில் உள்ள எண்ணெய் உள்கட்டமைப்புகளை அழிக்காமல் இருக்க நான் தீர்மானித்துள்ளேன், ஆனால், ஈரான் அல்லது வேறு யாரேனும் ஹார்மூஸ் நீரிணை வழியாக கப்பல்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் செல்வதற்கு இடையூறு ஏற்படுத்தினால், இந்த முடிவை உடனடியாக மறுபரிசீலனை செய்வேன் என்றார்.

# ஹார்மூஸ் ஜலசந்தியில் பதற்ற நிலைக்கு அவர்களே காரணம்... பிரிட்டனுக்கான ஈரான் தூதர்

**லண்டன், மார்ச் 15:**

பிரிட்டனுக்கான ஈரான் தூதர் மற்றும் சர்வதேச கடல்சார் அமைப்பின் நிரந்தர பிரதிநிதியாக இருப்பவர் சையது அலி மவுசவி. இந்நிலையில், சர்வதேச கடல்சார் அமைப்பின் தலைவரான ஆர்செனியோ டோமிங்கிஸ் தலைமையில் லண்டனில் நடந்த கூட்டத்தில் மவுசவி கலந்து கொண்டு பேசினார்.

அப்போது அவர் கூறும்போது, ஐ.நா. அமைப்பின் சாசனத்தின் கீழ் மற்றும் தன்னுடைய உரிமைக்கான கட்டமைப்பில் இருந்து கொண்டு, சுய பாதுகாப்பிற்காக ஈரான் நாடு செயல்பட்டு கொண்டிருக்கின்றது என்று கூறினார்.



ஈரான் தன்னுடைய இறையாண்மை, பாதுகாப்பு மற்றும் தேச நலன்களை பாதுகாக்க ராணுவத்தின் அனைத்து திறன்களையும் பயன்படுத்தும் என அப்போது கூறினார். மேற்காசிய மோதலின் ஒரு பகுதியாக, ஈரானின் துறைமுகங்கள் மற்றும் கடல்சார் அமைப்புகளை தாக்குவோம் என அமெரிக்கா அச்சுறுத்தி வருகிறது என சுட்டி காட்டி பேசிய மவுசவி, சர்வதேச தொடர் விதிமீறலாக இந்த அச்சுறுத்தல்கள் உள்ளன என குறிப்பிட்டார்.

இந்த விதிமீறல்களுக்கு எதிராக, சர்வதேச கடல்சார் அமைப்பு உள்ளிட்ட உலகளாவிய சமூகம் மற்றும் சர்வதேச அமைப்புகள் ஒரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என அவர் கேட்டு கொண்டார்.

இந்த தொடர்ச்சியான அத்துமீறல்களே, ஹார்மூஸ் ஜலசந்தியில் பதற்றம் நீடிப்பதற்கான காரணிகளாக உள்ளன. அமெரிக்காவும், இஸ்ரேலும் இணைந்து மேற்கொள்ளும் சட்டவிரோத மற்றும் பொறுப்பற்ற செயல்களே இதற்கு காரணம் என அவர் கண்டனம் தெரிவித்து உள்ளார்.

அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி ஈரான் நாட்டை கடுமையாக தாக்கின. தொடர்ந்து நடந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

ஈரானும் பதிலுக்கு அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் தளங்கள் அமைந்த பகுதிகள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, உலக நாடுகளுக்கு சரக்கு கப்பல் செல்ல கூடிய முக்கிய ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. மீறி செல்லும் கப்பல்கள் தாக்கப்படும் சூழல் காணப்படுகிறது. இதனால், கப்பல்களில் பணியாற்றும் பல்வேறு நாடுகளை சேர்ந்த ஊழியர்கள் தாக்கப்படும் சம்பவங்களும் நடந்து வருகின்றன. இதன் தொடர்ச்சியாக மேற்காசியாவில் பதற்ற நிலை தொடர்ந்து வருகிறது.



# “போர்களால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்க அரசு பாடுபடுகிறது”

# உணவகம், டீக்கடைகளின் கூடுதல் மின் நுகர்வில் யூனிட்டுக்கு ரூ.2 மானியம்



# வேளச்சேரி - பரங்கிமலை ரயில் சேவை தொடங்கியது

# தவெக மாவட்டச் செயலாளர்களுடன் அவசர ஆலோசனை

# 100 நாள் வேலைத் திட்டம்: தமிழகத்துக்கு ரூ.729.88 கோடி நிலுவை - மத்திய அரசு

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை | 15.03.2026 ஞாயிற்றுக்கிழமை | இலவச இ-பேப்பர்